# பகுதி IV

# பகுதி IV

## 2013 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கிய சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டம் | 1 |
| 2. | 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம் | 13 |
| 3. | 2013 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் | 14 |
| 4. | 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | 14 |
| 5. | 2013 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் | 15 |
| 6. | 2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் | 15 |
| 7. | 2013 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம் | 16 |
| 8. | 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் | 16 |
| 9. | 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 18 |
| 10. | 2013 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் | 22 |
| 11. | 2013 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம் | 22 |
| 12. | 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் | 23 |
| 13. | 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | 32 |
| 14. | 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | 42 |
| 15. | 2013 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் | 45 |

## 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டம்

[2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையையும், 1996ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையையும், 2005ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபையையும் ஒன்றிணைப்பதன் மூலம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் என அழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளைக் கிராமிய மட்டத்தில் தாபிப்பதற்கும், மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் ஒருங்கிணைக்கும் வலையமைப்பொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளையும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங்களையும் தாபிப்பதற்கும் 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தையும், 1996ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தையும், 2005ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தையும் நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

பொருளாதார அபிவிருத்திச் செய்முறையை முன்னெடுத்துச் செல்வதிலும் வறுமையை ஒழித்து சமூக ஒப்புரவை உறுதிப்படுத்துதல் என்ற தேசியக் கொள்கைக்குப் பயன்கொடுப்பதிலும், தனியாளை, குடும்பத்தை, குழுவினரை மற்றும் சமுதாயம் மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளைச் சீராக்குதல் அவசியமாக வந்துள்ளதாதலாலும்:

அத்துடன் வாழ்வின் எழுச்சி, வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளைத் தாபித்து அதன் மூலம் பிராந்திய, மாவட்ட மற்றும் தேசிய மட்ட ஒருங்கிணைக்கும் வலையமைப்பைக் கட்டியெழுப்புவதுடன் சிற்றளவு நிதி வங்கித்தொழில் முறைமையை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கெனச் சமுதாய மட்டத்தில் ஒரு தேசிய அபிவிருத்திச் செய்முறையினுள் மக்களைத் திரட்டுவதற்கு உட்கருதுகின்றதாதலாலும்:

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டம் பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பாகம் I

### வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தைத் தாபித்தல்

2. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, (இச்சட்டத்தில் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் எனவழைக்கப்படுவதுமான அரசாங்கத் திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

3. (1) திணைக்களத்தின் தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமை அதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) திணைக்களத்தின் ஒரு பணிப்பாளர் தலைமையதிபதியும் காலத்துக்குக்காலம் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, தமது தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றுள் எவற்றையும், அவசியமெனக் காலத்துக்குக்காலம் கருதப்படக்கூடியவாறாக எவரேனும் பகிரங்க அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

4. திணைக்களத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) வறுமையை ஒழிப்பதற்கும் சமூக ஒப்புரவை உத்தரவாதமளிக்கும் சமூகமொன்றை உருவாக்குவதற்கும் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல்;

(ஆ) தனியாள், குடும்பம், குழுவினர் மற்றும் சமுதாயம் என்போரை மையமாகக் கொண்ட வாழ்வாதாரப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துதல்;

(இ) ஒவ்வொரு தனியாளுக்கும் குடும்பத்துக்கும் உணவு உறுதி நிலையை உறுதிப்படுத்துதல்;

(ஈ) தேசிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு மக்களைத் திரட்டுதல் மற்றும் அவர்களுக்கு வலுவூட்டுதல்;

(உ) மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கத்துக்காகச் சிற்றளவு நிதி வசதிகளை வழங்குதல்;

(ஊ) மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்குத் தேவைப்படக்கூடியவாறாகப் பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்;

(எ) மக்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய ஆய்வுகளையும் ஆராய்ச்சியையும் நிறைவேற்றுதல்;

(ஏ) மக்களின் வாழ்க்கைத் தராதரங்களை மேம்படுத்துவதற்கென மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல்; அத்துடன்

(ஐ) சமூகப் பாதுகாப்பு தேவையாகவுள்ளோருக்குச் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

5. திணைக்களமானது, அதன் பணிகளை நிறைவேற்றுகையில் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளையும் வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளையும் மற்றும் வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்களையும் தாபிப்பதனையும், கட்டுப்படுத்துவதனையும், முகாமை செய்வதனையும் மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல்;

(ஆ) வலய, மாவட்ட, பிராந்திய, கிராமிய, கிராம அலுவலர் பிரிவு மற்றும் சமுதாயமட்டத்தில் வாழ்வின் எழுச்சி பயனுகரிகளை இணைத்து ஒழுங்கமைப்புகளின் வலையமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களைக் கவனித்தல்;

(இ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் உற்பத்திப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல், சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடுதல் என்பவற்றுக்கான நிலையங்களைத் தாபித்தல் மற்றும் சொல்லப்பட்ட நோக்கத்துக்காகப் பௌதிக அத்துடன் நிதி மூலவளங்களைக் கிடைக்கக் கூடியனவாக்குதல்;

(ஈ) இச்சட்டத்தின் 36ஆம், 37ஆம் பிரிவுகளின் கீழ் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியத்தையும் வாழ்வின் எழுச்சி சுழல் நிதியத்தையும் பேணுதல்;

(உ) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியத்தினதும் சுழல் நிதியத்தினதும் பணங்களைப் பயன்படுத்துதல்;

(ஊ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளையும், வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளையும், வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்களையும், வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளையும், வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களையும் மேற்பார்வை செய்தல், முகாமை செய்தல், கண்காணித்தல் மற்றும் கணக்காய்வு செய்தல்

(எ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியத்துக்காக நிதிகளைத் திரட்டுவதற்குத் தேசிய லொத்தர் சபையின் உதவியுடன் லொத்தர்களை நடாத்துவதற்கு ஒழுங்கேற்பாடு செய்தல்;

(ஏ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுவதற்கு, மேற்பார்வை செய்வதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் செயற்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறான தகவலைச் சேகரித்தல்;

(ஐ) அரசாங்கத் திணைக்களங்களினதும், அரச நிறுவனங்களினதும், உள்ளூரதிகாரசபைகளினதும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினதும், மாகாண அதிகாரசபைகளினதும் மற்றும் வேறு தனியார் அல்லது பகிரங்கக் குழுக்களினதும், இயற்கை அல்லது சட்ட ஆட்களினதும் ஒத்துழைப்பைப் பெறுதல்;

(ஒ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினாலும் வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளினாலும் நடாத்தப்படும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதில் உதவுதல்;

(ஓ) மக்களின் வாழ்க்கைத் தராதரங்களைப் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் மேம்படுத்தும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்;

(ஔ) திணைக்களத்தினால் நடாத்தப்படக்கூடிய பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்களுக்காகத் திணைக்களத்தின் மூலவளங்களைப் பயன்படுத்துதல்;

(க) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கத்துக்காக வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் மூலப்பொருட்கள், சாதனங்கள், தொழில்நுட்பவியல் மற்றும் உற்பத்திப்பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல், அவற்றைக் களஞ்சியப்படுத்துதல் மற்றும் தேவையேற்படுகின்றவாறும் ஏற்படுகின்றபோதும் அவற்றைத் தயாரிப்பாளர்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதல்;

(ங) வாழ்வின் எழுச்சி பயனுகரிகள் தமது உற்பத்திப்பொருட்களைத் தேசிய மற்றும் சர்வதேசச் சந்தைகளில் அறிமுகப்படுத்தி விற்பதற்கு அவர்களை இயலச் செய்கின்ற, சந்தைப்படுத்தல் நிலையங்களை நிறுவுதலுக்குட்பட்ட சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் மற்றும் அத்தகைய நிலையங்களைப் பேணுதல், கண்காணித்தல் அத்துடன் மேற்பார்வை செய்தல்;

(ச) அரசாங்க மற்றும் அரசாங்கம்சாரா ஒழுங்கமைப்புகளுடன் இணைதல்;

(ஞ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான பொறுப்பை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளுக்கும் வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளுக்கும் குறித்தளித்தல்;

(ட) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை உடைமைகொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல்; அத்துடன்

(ண) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய குறிக்கோள்களுடனும் பணிகளுடனும் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களையும் கவனித்தல்.

6. திணைக்களத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) தனியாட்கள், குடும்பங்கள் மற்றும் குழுவினர் என்போரின் வருமானத்தைத் தோற்றுவிப்பதனைச் சீராக்கும் அத்தகைய கருத்திட்டங்களை வகுத்தமைத்தல் மற்றும் வசதிப்படுத்துதல்;

(ஆ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதில் உதவுதல்;

(இ) சந்தைப்படுத்தற் செயற்பாடுகளை மேம்படுத்துதல்;

(ஈ) வாழ்வாதார அபிவிருத்தி பற்றிச் சமுதாயத்தினரின் அவசியமான விழிப்புணர்ச்சியை அபிவிருத்தி செய்தல்;

(உ) சூழலுக்கு நட்புறவான வாழ்க்கைமுறை நோக்கி மக்களை ஊக்குவித்தல்;

(ஊ) தனியாள், குடும்பம், குழுவினர் மற்றும் சமுதாயம் என்போரை மையமாகக் கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவைப்பட்ட மூலவளங்களையும் சேவைகளையும் வழங்குகின்ற அத்தகைய நிறுவனங்களுடன் இணைதல்;

(எ) மக்களிடையே சேமிப்புப் பழக்கங்களை மேம்படுத்துதல்;

(ஏ) மூலவளங்கள் மற்றும் சேவைகள் கிடைக்கப்பெறுவதில் வாழ்வின் எழுச்சி பயனுகரிகளினால் எதிர்நோக்கப்பட்ட முட்டுக்கட்டைகளை அகற்றுதல்;

(ஐ) சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்கு உகந்த நேர்மையான சமூகச் சூழலை உருவாக்குதவற்கு இட்டுச்செல்லும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்;

(ஒ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் பொருளாதார மேம்பாட்டுக்கான கருத்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் திட்டமிடுவதிலும் முகாமை செய்வதிலும் அவர்களின் பங்கு பற்றுகையைத் திரட்டுதல்;

(ஓ) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினால், கூட்டுத்தாபனத்தினால், உள்ளூராட்சி நிறுவனத்தினால், தனியார்துறை ஒழுங்கமைப்பினால் மற்றும் அரசாங்கம்சாரா ஒழுங்கமைப்புகளினால் வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்குச் சேவைகள் வழங்கப்படுவதனை வசதிப்படுத்துதல்; அத்துடன்

(ஔ) வாழ்வின் எழுச்சிப் பயனுகரிகளின் சேமிப்புப் பழக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவர்களுக்கு கடன்களை வழங்குவதற்குமான நிறுவனம்சார் கட்டுக்கோப்பை உருவாக்குவதில் உதவுதல்.

7. (1) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய கொள்கை மற்றும் முகாமை தொடர்பான கருமங்கள் தொடர்பில் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கண்காணிப்பின் கீழ் திணைக்களத்துக்கு உதவுவதற்கு வாழ்வின் எழுச்சி தேசியப் பேரவையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) வாழ்வின் எழுச்சி தேசியப் பேரவையானது, அமைச்சரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றவாறான அரசாங்கக் கொள்கைகளுக்கிணங்க வழங்கப்படக்கூடியவாறாக, அமைச்சரின் அத்தகைய பணிப்புகளுக்கு அமைய பணியாற்றுதல் வேண்டும்.

(3) வாழ்வின் எழுச்சி தேசியப் பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி அவரே தவிசாளராக விருத்தல் வேண்டும்;

(ஆ) சிற்றளவு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர்;

(இ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர்;

(ஈ) வாழ்வாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர்;

(உ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(ஊ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(எ) அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்கள் ஐவர்.

8. (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது பயனுள்ள மற்றும் தகுந்த செயற்படுத்துகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, முழுத் தீவையும் மேவுகின்றதாக, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களின் நிர்வாகச் செயற்பாடுகளை ஒன்றிணைக்கின்ற நிர்வாக வலயங்களைத் தாபிக்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு வலயத்துக்கும் பொறுப்பாக விருப்பதற்கு, அரசாங்கத் திணைக்களத் தலைவரையொத்த அதே நிலையிலுள்ள தலைவரொருவர் அத்தகைய ஒவ்வொரு வலயத்துக்கும் அமைச்சரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள்

9. வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்காகவும் அல்லது ஒரு கிராம அலுவலர் பிரிவின் பாகத்துக்காகவும் அல்லது பல கிராம அலுவலர் பிரிவுகளுக்காகவும் வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் தன்னிச்சையான பங்குபற்றுகையுடன் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

10. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) அதன் அதிகார இடப்பரப்பினுள் வதிகின்ற வாழ்வின் எழுச்சி உறுப்பினர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளைச் சீராக்குதல்;

(ஆ) வாழ்வாதார அபிவிருத்தி வாய்ப்புக்களையும் அதன் இயற்றிறன்களையும் இனங்காணுதல்;

(இ) திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழ், வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான உதவியையும் துணையையும் வழங்குதல்;

(ஈ) வாழ்வாதாரச் செயற்பாடுகளைச் சீராக்குவதற்குத் தேவையான பௌதிக மற்றும் மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்தல்;

(உ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் சேமிப்புப் பழக்கங்களைச் சீராக்குவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வாய்ப்புக்களை வழங்குதல்;

(ஊ) சிற்றளவு நிதி வசதிகளைப் பெறுவதிலும் மற்றும் முதலீட்டு ஆற்றல்களைச் சீராக்குவதற்கும் கிடைக்கக் கூடியனவாகவுள்ள வாய்ப்புக்களை விசாலித்தல்;

(எ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளினதும் அவர்களின் குடும்பத்தினரினதும் கல்வி மட்டத்தையும் தேர்ச்சிகளையும் மேம்படுத்துதல்;

(ஏ) உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறான மூலப்பொருட்கள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தொழில்நுட்பவியல் வசதிகள் என்பவற்றை வழங்குதல்;

(ஐ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் எவையேனும் உற்பத்திப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் பதனிடுவதற்கும், அத்தகைய உற்பத்திப்பொருட்களின் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்குமான வசதிகளை வழங்குதல்; அத்துடன்

(ஒ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் தன்னம்பிக்கை, சமூகத்தின்பாலான கூட்டுப் பொறுப்புடைமை, நற்குணங்கள் மற்றும் விழுமியங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.

11. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் தத்துவங்கள், திணைக்களத்தின் பணிப்புக்கும் மேற்பார்வைக்கும் அமைய பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளைச் சிறிய குழுக்களாக ஒழுங்குபடுத்துதல்;

(ஆ) சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினுள் அத்தகைய சிறிய குழுவினருக்கு ஏற்றங்கீகாரமளித்தல்;

(இ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்கான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றைச் செயற்படுத்துதல்;

(ஈ) இச்சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெறுவதற்கு வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல்;

(உ) வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக வாழ்வின் எழுச்சி பயனுகரிகளினால் பெறப்பட்ட கடன்களை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்;

(ஊ) அதன் உறுப்பினர்களின் தேர்ச்சிகளையும் அறிவையும் அபிவிருத்தி செய்வதற்குச் செயற்படுத்தப்படக்கூடிய அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மூலவளங்களையும் வசதிகளையும் வழங்குதல்;

(எ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் உறுப்பாண்மைக் கட்டணங்களையும் சேமிப்புகளையும் சேகரித்தல் மற்றும் முகாமை செய்தல்;

(ஏ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் நல்வாழ்வுக்காகத் திணைக்களத்தினாலும் வேறு ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினாலும் தொடங்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் செயற்படுத்துதல்;

(ஐ) அரசாங்கத்தினாலும், அரசாங்கம்சாரா நிறுவனங்களினாலும், தனியார் நிறுவனங்களினாலும் வழங்கப்படக் கூடியவாறாக, மானியக்கொடைகள் மற்றும் கடன்கள் போன்ற அத்தகைய உதவியைப் பெறுதல்;

(ஒ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் நிதிகளைத் திரட்டும் பொருட்டு அரசாங்கத்தினாலும் வேறு ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினாலும் அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய அத்தகைய ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் நிறைவேற்றுதல்;

(ஓ) சமுதாயத்தினரின் தொழிற் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் செயற்படுத்துதல்;

(ஔ) உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், அவற்றை மீளப்பதனிடுதல் மற்றும் அவற்றுக்குப் பெறுமதி சேர்த்தல் என்பன தொடர்பான வசதிகளையும், சேவைகளையும், தொழில்நுட்பவியற்சார் சேவைகளையும் வழங்குதல்;

(க) சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக விற்பனை நிலையங்களையும் களஞ்சியங்களையும் பேணுதல் மற்றும் சந்தைகளையும் முறைச்சந்தைகளையும் ஒழுங்குபடுத்துதல்;

(ங) சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் மனித மற்றும் பௌதிக மூலவளங்களைப் பயன்படுத்துதல்;

(ச) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் அலுவலகமொன்றைப் பேணுதல்; அத்துடன்

(ஞ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்குரித்தாகவரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை உடைமைகொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல்.

12. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பரஸ்பர ஒத்துழைப்புடன் தொழிற்படும் சிறிய குழுவினராக உறுப்பினர்கள் தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு அவர்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்களுக்கு வழிகாட்டுதலை வழங்குதல்;

(ஆ) அதன் உறுப்பினர்கள் தமது சேமிப்புப் பழக்கங்களை அதிகரிப்பதற்கும் வாழ்வாதாரச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் அவர்களுக்கு ஊக்கமளித்தல் மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்கு உதவி வழங்குதல்;

(இ) அதன் உறுப்பினர்களின் தொழில்சார் தேர்ச்சிகளையும் அறிவையும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்;

(ஈ) அதன் உறுப்பினர்களின் பங்குபற்றுகையுடன் சிரமதானச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்; அத்துடன்

(உ) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குதல்.

13. வாழ்வின் எழுச்சி அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் நிதிகள், அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலானவொரு வங்கியில் வைப்பிலிடப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.

14. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பொன்று அதன் குறிக்கோள்களை எய்துவதில் பணியாற்றாதிருக்குமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய செயலற்றுப்போன வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு எந்த வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புக்குச் சொந்தமானதோ அந்த வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பின் கலந்தாலோசனையுடன், அத்தகைய செயலற்றுப்போன வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு மிக அண்மையிலுள்ள செயற்படுகின்ற வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புடன் ஒன்றிணைக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் அல்லது இடையீடின்றி அத்தகைய ஒழுங்கமைப்பின் பணிகளைப் புரிவதற்குத் திணைக்களத்தின் அலுவலரொருவரை நியமித்தல் வேண்டும்.

## பாகம் III

### வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகள்

15. (1) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளின் பணிகளைப் பிராந்திய மட்டத்தில் மேற்பார்வை செய்யும், கண்காணிக்கும் மற்றும் மதிப்பீடு செய்யும் நோக்கத்துக்காக, ஐந்துக்குக் குறையாத வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளைக் கொண்டுள்ளவையும், அவசியமாகக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவையுமான அத்தகைய ஒழுங்கமைப்புகள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பு ஒவ்வொன்றும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பினதும் தவிசாளர்;

(ஆ) ஒரு பிராந்தியத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் அலுவலர்;

(இ) இச்சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினது சிரேஷ்ட முகாமையாளர்; அத்துடன்

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய, இடப்பரப்பின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்கள் மூவர்.

(3) அத்தகைய ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பினதும் தவிசாளரும் செயலாளரும் (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பினதும் எந்தப் பிரதேச செயலாளர் பிரிவின் அதிகார இடப்பரப்பினுள் தாபிக்கப்படுகின்றதோ அந்தப் பிரிவின் பிரதேச செயலாளர், அத்தகைய ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புக்கும் மதியுரை நபரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

16. ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பினதும் குறிக்கோள்கள், திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழும் மேற்பார்வையின் கீழும் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:-

(அ) ஏதேனும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு தமது வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அதற்கு அவசியமான உதவியை வழங்குதல்;

(ஆ) அதன் உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பான செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்தல்;

(இ) அதன் அதிகார இடப்பரப்பினுள் சிற்றளவு நிதிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் திணைக்களத்துக்கு உதவுதல்;

(ஈ) உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், அவற்றை மீளப் பதனிடுதல் மற்றும் அவற்றுக்குப் பெறுமதிசேர்த்தல் அத்துடன் பிராந்திய மட்டத்தில் அத்தகைய உற்பத்திப்பொருட்களைக் களஞ்சியப்படுத்துதல், பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றுக்கான வசதிகளை வழங்குதல்; அத்துடன்

(உ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் மனித ஆளுமை, கூட்டுப்பணி, நற்பண்புசார் மற்றும் ஆன்மீகத் தனியியல்புகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல்.

17. ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பும், திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழும் மேற்பார்வையின் கீழும் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அதன் அதிகார இடப்பரப்பினுள் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஆய்வுகளை நிறைவேற்றுதல் மற்றும் தகவல் சேகரித்தல்;

(ஆ) ஏதேனும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினால் நிறைவேற்றப்பட்ட எவையேனும் வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பரிசீலனை செய்தல்;

(இ) அதன் அதிகார இடப்பரப்பினுள் சிற்றளவு நிதிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குதல்;

(ஈ) தொழிற்சார் தேர்ச்சிகளையும் செய்முறை அறிவையும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும் செயற்படுத்துவதிலும் எவையேனும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளுக்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குதல்;

(உ) பிராந்தியத்திலுள்ள அதன் பயனுகரிகளின் கமத்தொழில் அல்லது வேறெவையேனும் உற்பத்திப்பொருட்களின் அபிவிருத்திக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தொழில்நுட்ப உதவியையும் வேறு சேவைகளையும் வழங்குதல்;

(ஊ) உற்பத்திப்பொருட்களையும் மூலப்பொருட்களையும் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்துதல், சந்தைப்படுத்தல் என்பவற்றுக்கான நிலையங்களைப் பேணுதல் மற்றும் வியாபார நிலையங்களையும் வணிக நிலையங்களையும் ஒழுங்குபடுத்துதல்;

(எ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் எல்லாச் செயற்பாடுகளையும் கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்;

(ஏ) அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கமைய அத்தகைய ஒழுங்கமைப்புகளின் நிதியமொன்றைத் தாபித்துப் பேணுதல்;

(ஐ) திணைக்களத்தினாலும் வேறேதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலும் ஆரம்பிக்கப்பட்ட அத்தகைய கருத்திட்டங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் செயற்படுத்துதல்;

(ஒ) அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கமைய, அரசாங்கம்சார் மற்றும் அரசாங்கம்சாரா ஒழுங்கமைப்புகளினால் முனையப்பட்ட உதவியையும், மானியக்கொடைகளையும், கடன்களையும் ஏற்றுக்கொள்ளுதல்;

(ஓ) திணைக்களத்தினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய, திணைக்களத்தினால் அல்லது வேறு ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் முனையப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்றல் மற்றும் புரிதல்;

(ஔ) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பின் அலுவலகமொன்றைத் தாபித்தல் மற்றும் பேணுதல்;

(க) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பின் பணங்களை, வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கமொன்றில் வைப்பிலிடுதல் மற்றும் அத்தகைய வைப்புக்கள் பற்றிய கணக்குகளைப் பேணுதல்;

(ங) சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒழுங்கமைப்பின் மனித மற்றும் பௌதிக மூலவளங்களைப் பயன்படுத்துதல்; அத்துடன்

(ச) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறுவகையாக அதற்குரித்தாகவரக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை உடைமைகொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல்.

18. வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பின் பணிகள் திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழும் மேற்பார்வையின் கீழும் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:-

(அ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினால் நடாத்தப்படுகின்ற சிறிய குழுவினர் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் வழிகாட்டுதலையும் ஊக்கத்தையும் வழங்குதல்;

(ஆ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் சேமிப்புகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல்;

(இ) அதன் அதிகார இடப்பரப்பினுள் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினால் நிறைவேற்றப்பட்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றத்துக்காக, அத்தகைய ஒழுங்கமைப்புகளுக்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்து கண்காணித்தல்;

(ஈ) அதன் உறுப்பினர்களின் தொழிற்சார் தேர்ச்சிகளையும் செய்முறை அறிவையும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பிராந்திய மட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்;

(உ) பிராந்திய மட்டத்தில் உற்பத்திப்பொருட்களை அபிவிருத்தி செய்வதற்காக மூலப்பொருட்களையும், தொழில்நுட்பவியலையும், வேறு தொடர்புபட்ட சேவைகளையும் வழங்குதல் மற்றும் அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்;

(ஊ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினால் செயற்படுத்தப்படுகின்ற சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்காக உதவி வழங்குதல்;

(எ) முறையேயான பிராந்தியம் தொடர்பில் திணைக்களத்தின் முன்னேற்ற அறிக்கையைத் தயாரிப்பதில் உதவுதல்; அத்துடன்

(ஏ) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காகப் பிராந்திய மட்டத்தில் வேறு அரசாங்கம்சார் மற்றும் அரசாங்கம்சாரா அத்துடன் தனியார் ஒழுங்கமைப்புகளுடன் இணைதல்.

## பாகம் IV

## வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்கள்

19. (1) ஒரு மாவட்டத்தினுள் பணியாற்றுகின்றவையும், எல்லா வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவையுமான வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுக்கள் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு மாவட்டக் குழுவும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஒவ்வொரு மாவட்டத்தினுள்ளான எல்லா வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளினதும் எல்லாத் தவிசாளர்களும் செயலாளர்களும்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு மாவட்டத்தினுள்ளும் இச்சட்டத்தின் 29ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட எல்லா வாழ்வின் எழுச்சி வங்கித் தொழிற்சங்கங்களினதும் சிரேஷ்ட முகாமையாளர்கள்;

(இ) அந்தந்த மாவட்டத்துக்குப் பொறுப்பாகவுள்ள, திணைக்களத்தின் அலுவலர்; அத்துடன்

(ஈ) மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்களும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டியவர்களுமான ஆட்கள் மூவர்.

(3) அத்தகைய ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுவும் எந்தப் பிரதேச செயலாளரின் அதிகார இடப்பரப்பினுள் தாபிக்கப்படுகின்றதோ அந்தப் பிரதேச செயலாளர், அத்தகைய ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுவுக்கும் மதியுரை நபரொருவராகப் பணியாற்றுதல் வேண்டும்.

20. திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழும் மேற்பார்வையின் கீழும் ஒரு வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகள் மற்றும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள் என்பவற்றினூடாக இச்சட்டத்தின் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல்;

(ஆ) அந்தந்த மாவட்டங்களில் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினதும் வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளினதும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்;

(இ) வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளும் தொடர்பாக வேறு மாவட்ட மட்ட அரசாங்கம்சார் ஒழுங்கமைப்புகளின் ஒத்துழைப்பைப் பெறுதல்; அத்துடன்

(ஈ) அந்தந்த மாவட்டங்களில் பணியாற்றுகின்ற வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினதும் பிராந்திய ஒழுங்கமைப்புகளினதும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

21. ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுவினதும் தத்துவங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) மூன்று மாதங்களுக்கொருதடவை குழுக் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் நடாத்துதல்;

(ஆ) அந்தந்த மாவட்டங்களில் வாழ்வின் எழுச்சி பிராந்திய மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுதல்;

(இ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளை மேற்பார்வை செய்தலிலும் கண்காணித்தலிலும் கணிப்பீடு செய்வதிலும் திணைக்களத்திற்குத் துணைபுரிதல்; அத்துடன்

(ஈ) திணைக்களத்திற்கும் அதன் சார்பிலும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மீதான ஆய்வொன்றை நடத்துதலும் திணைக்களத்திற்கு தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய அபிவிருத்தி முன்மொழிவுகளை அனுப்புதலும்.

22. ஒவ்வொரு வாழ்வின் எழுச்சி மாவட்டக் குழுவினதும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) அந்தந்த மாவட்டங்களில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் மீது ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

(ஆ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுகையில் தேவைப்படக்கூடியவாறு மாவட்ட மட்டத்திலான அத்தகைய வேறு அரசாங்க, அரசாங்க சார்பற்ற அத்துடன் தனியார் நிறுவனங்களுடன் ஒத்திசைவு செய்தல்;

(இ) அந்தந்த மாவட்டங்களில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறன் கொண்ட செயற்பாட்டிற்கான முன்மொழிவுகளையும் கருத்துக்களையும் கருத்திற் கொள்ளுதலும் அவற்றை திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தலும்; அத்துடன்

(ஈ) அந்தந்த மாவட்டங்கள் தொடர்பில் மாதாந்த தேர்ச்சி மீளாய்வு அறிக்கையொன்றைத் தயாரித்தலும் தேர்ச்சி மீளாய்வுக் கூட்டங்களைக் கூட்டுதலும்.

## பாகம் V

### வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனம்

23. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான எல்லா ஒழுங்கமைப்புகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அமைச்சர் வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனத்தின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும்.

24. வாழ்வின் எழுச்சி தேசிய சம்மேளனத்தின் குறிக்கோள் தேசிய மட்டத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய கொள்கைத் திட்டமிடலின் ஒத்திசைவுக்கு அவசியமான முன்மொழிவுகளையும் கருத்துக்களையும் பரிசீலனை செய்தலும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தலைமைத்துவம் வழங்குதலுமாதல் வேண்டும்.

## பாகம் VI

### வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகள்

25. (1) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் அதிகார இடப்பரப்பை உள்ளடக்கிய அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றிற்கும், அதன் பயனுகரிகளிடையே சிற்றளவு நிதிச் சேவைகளை மேம்படுத்துவதற்கென, வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சர் அத்தகைய வங்கிகளின் பதிவு நடவடிக்கை முறைகளையும் அத்தகைய நடவடிக்கை முறைக்கு தொடர்பிலான வேறு ஏதேனும் விடயத்தையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(3) அத்தகைய வங்கி ஒவ்வொன்றும் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமையும் அத்துடன் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அப்பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

(4) அமைச்சரால் ஆக்கப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் அத்தகைய ஒவ்வொரு வங்கியினதும் கடமையாதல் வேண்டும்.

26. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளிடையே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல்;

(ஆ) முதலீட்டு வாய்ப்புகளை அபிவிருத்தி செய்தல்;

(இ) உற்பத்தி வாய்ப்பை அபிவிருத்தி செய்வதன் மூலம் வருமானத்தை அதிகரித்தல்; அத்துடன்

(ஈ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்கு கடன் வசதிகள் வழங்குதல்.

27. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கி ஒவ்வொன்றும் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மைக் கணக்குகளை ஆரம்பித்தலும் பேணுதலும் மூடிவிடுதலும் வைப்பீடுகளை ஏற்றுக்கொள்ளுதலும் வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்கும் அத்தகைய வங்கிகளின் உறுப்பினர்களுக்கும் வங்கிக் கணக்குப் புத்தகங்களை வழங்குதலும்;

(ஆ) பிணைப் பொறுப்புகளுடனோ பிணைப் பொறுப்புகளின்றியோ கடன் வசதிகளை வழங்குதல், கடன்களை அறவிடுதல், அவற்றை முகாமை செய்தலும் தொழிற்படுத்துதலும்;

(இ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் நிதிகளை ஏற்றுக்கொள்ளுதலும் அவற்றை முகாமை செய்தலும்

(ஈ) அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவாறான அத்தகைய மானியங்களினதும் பணங்களினதும் கணக்குகளைப் பேணுதல்;

(உ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் நிதிகளை வாழ்வின் எழுச்சி வங்கித் தொழிற்சங்கங்களில் முதலீடு செய்தல்; அத்துடன்

(ஊ) ஏதேனும் கொள்வனவின், மானியக்கொடையின், அன்பளிப்பின், இறுதி விருப்பாவணக் கையளிப்பின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை உடைமைகொள்ளுதலும் வைத்திருத்தலும்.

28. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் பணிகள் வருமாறு:-

(அ) சேமிக்குமாறு வாழ்வின் எழுச்சி பயனுகரிகளை ஊக்குவித்தல்;

(ஆ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்கு தனித்தனி மற்றும் குழு மட்டங்களில் கடன்கள் வழங்குதல்;

(இ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளுக்கு நிதி முகாமைத்துவத்தில் அறிவூட்டல்;

(ஈ) வைப்பீட்டாளர்களினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் நலம் பேணலை உறுதிப்படுத்துதல்;

(உ) அதன் வாடிக்கையாளர்களிடையே வங்கித்தொழில் பண்பாட்டை அபிவிருத்தி செய்தல்; அத்துடன்

(ஊ) அரசாங்கத்தால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய மானியங்களைப் பகிர்ந்தளித்தல்.

## பாகம் VII

## வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள்

29. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு பிராந்திய மட்டத்தில் வளம் பெறும் சிற்றளவு நிதியளிப்பு வங்கித்தொழில் வலையமைப்பொன்றை தாபிப்பதற்கென வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பு ஒவ்வொன்றினதும் அதிகார இடப்பரப்பிற்குட்பட்ட எல்லா வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளையும் கொண்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சர் அத்தகைய வங்கித் தொழிற்சங்கத்தின் பதிவு செய்யும் நடவடிக்கை முறையையும் அத்தகைய நடவடிக்கை முறைக்கு தொடர்பிலான வேறு ஏதேனும் விடயத்தையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(3) அத்தகைய வங்கித் தொழிற்சங்கம் ஒவ்வொன்றும் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுமமொன்றாதலும் இடையறாவழியுரிமை கொண்டதாதலும் வேண்டும். அத்துடன் பொது இலச்சினையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஒவ்வொரு வங்கித் தொழிற்சங்கத்தினதும் கடமையாதல் வேண்டும்.

30. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களின் குறிக்கோள்கள் வருமாறு:-

(அ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளுடன் ஒத்திசைவு செய்யும் வளம்பெறும் பிராந்திய வங்கித்தொழில் வலையமைப்பொன்றை அமைத்தல்;

(ஆ) வாழ்வாதார அபிவிருத்திகளுக்குத் தேவையான அத்தகைய நிதிசார்ந்த உதவியை வழங்குதல்; அத்துடன்

(இ) முறைசார்ந்த சிற்றளவு நிதி வங்கித்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு வாழ்வின் எழுச்சி பயனுகரிகளை ஊக்குவித்தல்.

31. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்கள் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் வைப்பீடுகளை ஏற்றுக்கொள்ளல்;

(ஆ) அதன் நிதிகளை முதலீடு செய்தல், கடன் வசதிகள் வழங்கல், அத்துடன் இலாபங்களை செலவீடு செய்தல்;

(இ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான அத்தகைய வசதிகளையும் பயிற்சியையும் வழங்குதல்;

(ஈ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் கணக்குகளைப் பேணுதலும் அரசாங்கத்தால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய மானியங்களை முகாமை செய்தலும்;

(உ) முகாமைச் சபையால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் ஒழுங்குபடுத்துதலும்; அத்துடன்

(ஊ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, அன்பளிப்பு, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்ற வகையில் அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை உடைமை கொள்ளுதலும் வைத்திருத்தலும்.

32. வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களின் பணிகள் வருமாறு:-

(அ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளால் பேணப்படும் வைப்பீடுகளைச் சேகரித்தலும் அவற்றை முகாமை செய்தலும்;

(ஆ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளிடையே சிற்றளவு நிதிசார்ந்த பண்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; அத்துடன்

(இ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் செயற்பாடுகளின் வெற்றிகரமான தொழிற்பாட்டிற்கு பிராந்திய நிறுவனமொன்றாக செயற்படுதல்.

33. (1) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினதும் நிதிசார்ந்த செயற்பாடுகளை கண்காணித்தல் அத்துடன் ஒழுங்குபடுத்துதல் ஆகிய நோக்கத்திற்கு அமைச்சர், வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களினதும் முகாமைச் சபையொன்றை (இச்சட்டத்தில் “முகாமைச் சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியமித்தல் வேண்டும்.

(2) முகாமைச் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள், அதாவது -

(அ) திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியானவர் தவிசாளராதல் வேண்டும்;

(ஆ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் பிரதிநிதியொருவர்;

(இ) திணைக்களத்தின் வங்கித்தொழில் அலுவல்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர்;

(ஈ) இலங்கை மத்திய வங்கி ஆளுநரால் நியமிக்கப்படவுள்ள பிரதிநிதியொருவர்;

(உ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(ii) அமைச்சரால் நியமிக்கப்படவுள்ள மூன்று ஆட்கள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்).

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரினதும் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(4) அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் தமது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி விலகுகை எந்தத் தேதியன்று அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அந்தத் தேதியிலிருந்து அது பயனுறுதலும் வேண்டும்.

(5) அமைச்சர், அதற்கெனக் குறிக்கப்படும் காரணங்களுக்காக நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் இறப்பு, பதவி விலகுகை, உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகை என்பன காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில், அமைச்சர் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அவரினிடத்திற் செயலாற்றவென வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(8) அமைச்சர் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோனையுடன் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(9) முகாமைச் சபை அத்தகைய வங்கிகளினதும் வங்கித் தொழிற்சங்கங்களினதும் நிதிசார்ந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் அத்துடன் ஒழுங்குபடுத்துதல் ஆகிய நோக்கத்திற்கு அத்தகைய வங்கிகளுக்கும் வங்கித் தொழிற்சங்கங்களுக்கும் காலத்துக்குக்காலம் பணிப்புகளை வழங்குவதற்கான தத்துத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(10) முகாமைச் சபை அதன் கடமைகளை நிறைவேற்றுகையில் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

34. இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, எல்லா வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளையும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களையும் கொண்டுள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சமாசமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

35. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தினதும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித் தொழிற் சட்டத்தினதும் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கித் தொழிற்சங்கங்கள் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

## பாகம் VIII
## திணைக்களத்தின் நிதியங்கள்

36. (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்கு "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அரசாங்கத்தால் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்:-

(2) (அ) திணைக்களத்தால் பெறப்பட்ட எல்லா மானியக் கொடைகளும் நன்கொடைகளும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வங்கிகளாலும் வங்கித் தொழிற்சங்கங்களினாலும் அளிக்கப்பட்ட எல்லாக் கொடைகளும் வேறு உதவுதொகைகளும்;

(இ) இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வங்கிகளினதும் வங்கித் தொழிற்சங்கங்களினதும் இலாபங்களினதாய் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான பணத்தின் அத்தகைய நூற்றுவீதம்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் கீழ் பெறப்படக்கூடிய வேறேதேனும் பணம், திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பின்னர், பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) மேற்படி நிதியத்தில் வரவிலிருக்கும் பணங்கள் காலத்துக்குக்காலம் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்கும் அத்தகைய முறையிலும் பயன்படுத்தப்படலாம்.

37. (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்கு "வாழ்வின் எழுச்சி சுழல் நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னரான தேதியன்று 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, இலங்கை சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சுழல் நிதியத்தின் வரவுக்கு, 1996ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை, 2005ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உடறட அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் நிதியங்களில் வரவிலிருக்கும் எல்லா பணங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் வாழ்வின் எழுச்சி சுழல் நிதியத்திற்கு கைமாற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

## பாகம் IX
## பொது

38. ஒவ்வொரு மாவட்டத்தினதும் மாவட்டச் செயலாளர் அந்தந்த மாவட்டம் தொடர்பில் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பணியாற்றுதல் வேண்டும்.

39. திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள், ஒவ்வொரு பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் அத்துடன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோர் அவர்களது கடமைகளில் பிரவேசிக்கும் முன்னர் திணைக்களத்தின் தொழிற்பாடு பற்றிய எல்லா விடயங்கள் தொடர்பிலும் கண்டிப்பான இரகசியத்தை அனுசரிப்பதற்குத் தம்மைப் பிணித்து வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துதலின் மூலம் -

(அ) நீதிமன்றச் சட்டத்தினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படும் போது தவிர; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவிர, அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எவையேனும் விடயங்களை வெளியிடாதிருப்பதற்குத் தம்மைப் பிணித்தல் வேண்டும்.

40. (1) இச்சட்டத்தின் கீழ் திணைக்களம் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதனையும் நிறைவேற்றுவதனையும் இயலச்செய்யும் நோக்கங்களுக்காக திணைக்களம் அல்லது அதன் பொருட்டு திணைக்களத்தால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எழுத்திலான அறிவித்தலின் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறு அத்தகைய விவரத்திரட்டுகளையும் தகவலையும் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் திணைக்களத்திற்கு அல்லது திணைக்களத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன் திணைக்களத்தின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் எவரேனும் ஆளை தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அறிவித்தலொன்றினால் தேவைப்படுத்தப்பட்ட ஆள் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய விவரத்திரட்டுகளை அல்லது தகவலைக் கொடுத்துதவுவதிலிருந்து தடை செய்யப்பட்டவிடத்து தவிர அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய காலப்பகுதிக்குள் ஏதேனும் விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுதல் அல்லது அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு திணைக்களத்தின் முன்னிலையில் சமுகமாயிருத்தல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் இணங்கியொழுகியவாறு கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டில் அடங்கியுள்ள தகவல் எதுவும் அத்தகைய விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவும் ஆளின் சம்மதத்துடன் அல்லது திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றும் நெறிமுறையில் தவிர வெளியிடப்படுதலோ அல்லது திணைக்களத்தால் திணைக்களத்தின் எவரேனும் அலுவலரால் சேவையாளரால் அல்லது முகவரால் வேறு எவரேனும் ஆளுக்கு தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

(4) திணைக்களத்தின் முன்னிலையில் ஏதேனும் வாக்கு மூலம் தரும் ஒவ்வோராளும் அத்தகைய வாக்கு மூலம் தொடர்பில் நீதிமன்றமொன்றின் முன்னிலையில் சாட்சியொருவரால் அளிக்கப்படும் சான்று தொடர்பில் அத்தகைய சாட்சி எந்த சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராகின்றாரோ அந்த எல்லா சிறப்புரிமைகளுக்கும் அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

41. இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு, விதிக்கு அல்லது பணிப்புக்கு முரணாக செயற்படும் ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானால் சுருக்கமுறை விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு ஆண்டுக்காலத்தை விஞ்சாத மறியற் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

42. (1) அமைச்சர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்களுக்காகவும், எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்களுக்காகவும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி அமைச்சர் பின்வரும் எல்லா விடயங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு அத்துடன் அத்தகைய அமைப்புடனும் நிருவாகக் கட்டமைப்புடனும் சம்பந்தப்பட்ட விடயங்கள்;

(ஆ) வாழ்வின் எழுச்சி பிராந்திய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு அத்துடன் அத்தகைய அமைப்புடனும் நிருவாகக் கட்டமைப்புடனும் சம்பந்தப்பட்ட விடயங்கள்;

(இ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சமாசத்தின் அமைப்பு மற்றும் நிருவாகக் கட்டமைப்பு அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்கள்;

(ஈ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளைப் பதிவு செய்தல், அத்தகைய பதிவு மற்றும் அத்தகைய பதிவை இல்லாதொழித்தல் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் அத்துடன் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளின் வங்கித் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்கள்;

(உ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல், அத்தகைய பதிவு மற்றும் அத்தகைய பதிவை இல்லாதொழித்தல் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் அத்துடன் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்கள்;

(ஊ) வாழ்வின் எழுச்சி பயனுகரிகளின் தெரிவு தொடர்பிலான மூலப்பிரமாணம்;

(எ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளினதும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் உறுப்பினரொருவராக இருப்பதற்கான மூலப்பிரமாணம்;

(ஏ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளையும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளையும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களையும் மேற்பார்வை செய்தல், ஒழுங்குபடுத்துதல் அத்துடன் கணிப்பீடு செய்தல் தொடர்பிலான மூலப்பிரமாணம்;

(ஐ) கிராமிய, பிராந்திய அல்லது மாவட்ட மட்டங்களில் வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதலினதும் நிர்வாகத்தினதும் அதிகார இடப்பரப்பின் எல்லைகளை நிர்ணயித்தல்;

(ஒ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியம் மற்றும் வாழ்வின் எழுச்சி சுழல் நிதியம் தொடர்பிலான எல்லா விடயங்களும்;

(ஓ) வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளாலும் வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்புகளாலும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளாலும் அத்துடன் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களாலும் பேணப்படும் நிதியங்கள் தொடர்பிலான எல்லா விடயங்களும்;

(ஔ) இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும்போது எழக்கூடிய ஏதேனும் பிணக்கை இணங்கித் தீர்ப்பதற்கான நடவடிக்கைமுறை மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்கள்; அத்துடன்

(க) வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஒரு பொது சிறப்புச் சின்னத்தின் பாவனை.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியைப் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

43. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, வாழ்வின் எழுச்சி தேசியப் பேரவையின் கலந்தாலோசனையுடன் திணைக்களத்தின் கொள்கை மற்றும் அலுவல்களை முகாமை செய்தல் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படும் வரை, நடைமுறைக்கு வருதலாகாது.

(3) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் X

## நீக்கங்களும் பேணல்களும்

44. 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம், 1996ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம், 2005ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, உடரட அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் என்பன இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றன. மேற்கூறப்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும் -

(அ) நீக்கம் செய்யப்பட்ட 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கத்தின் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துகையில் ஆணையாளர் தலைமையதிபதியால் மேற்கொள்ளப்படும் எல்லா செயற்பாடுகளும் இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டவையாகவும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுபவையாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய தேதியன்றுள்ளவாறு (இதனகத்துபின்னர் “சொல்லப்பட்ட அதிகாரசபைகள்” எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவையும்), நீக்கப்பட்ட சட்டங்களின் கீழ் தாபிக்கப்பட்டவையுமான சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபைக்கு, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மற்றும் உடரட அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனமும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசாங்கத்தின் ஆதனமாகக் கருதப்படுதலும் வேண்டும்;

(இ) மேற்கூறப்பட்ட அதிகாரசபைகளால் அல்லது அவற்றிற்கெதிராக தொடரப்பட்டுள்ளவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய தேதியன்று முடிவுறாதிருப்பவையுமான எல்லா குற்றவழக்குகளும் துடர்ச்சிகளும், வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் கருமங்களும் அல்லது விடயங்களும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அரசாங்கத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட குற்றவழக்குகளாக, துடர்ச்சிகளாக, வழக்குகளாக, வழக்கு நடவடிக்கைகளாக, கருமங்களாக அல்லது விடயங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் வழக்கில், கருமத்தில், வழக்கு நடவடிக்கையில் அல்லது விடயத்தில் ஏதேனும் நீதிமன்றத்தால் அல்லது நியாய சபையால் அல்லது வேறு குழுமத்தால் மேற்கூறப்பட்ட அதிகாரசபைகளுக்கு சாதகமாக அல்லது எதிராகப் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்வு, கட்டளை அல்லது அளிப்பு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அரசாங்கத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கு எதிராக பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்வு, கட்டளை அல்லது அளிப்பு ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம்;

(உ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய தேதியன்றுள்ளவாறு, சொல்லப்பட்ட அதிகாரசபைகளின் தொழிலிலுள்ள அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் -

(i) அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், திணைக்களத்தின் சேவையில் சேர விருப்பம் தெரிவிக்காதவிடத்தும், சேவையிலிருந்து தன்னிச்சையாக பதவி விலகுதலுக்கு விருப்பம் தெரிவிக்குமிடத்தும், அத்தகைய அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு, அமைச்சரினால் விதித்துரைக்கப்படவேண்டிய தன்னிச்சையான ஆட்குறைப்புத் திட்டத்தின் நியதிகளின்படி செலுத்தப்படவேண்டிய அத்தகைய நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும்;

(ii) அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், அந்தந்த அதிகாரசபையிலுள்ள அத்தகைய பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து திணைக்களத்தின் சேவையில் சேர விருப்பம் தெரிவிக்குமிடத்து, அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய நியமனத் தேதியிலிருந்தும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கமையவும், திணைக்களத்தின் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சகாய நிதியத்துக்கு அந்தந்த அதிகாரசபைகளினால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளைக் கவனத்துட்கொண்டு ஓய்வூதியக் குறிப்புகளின் ஏற்பாடுகளின் கீழ் ஓய்வூதியமொன்றுக்குத் தகவுடையவராதலும் வேண்டும்;

(iii) அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் திணைக்களத்தின் சேவையில் சேர விருப்பம் தெரிவிக்குமிடத்து-

(அஅ) அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஏதேனும் பணத்தொகையைப் பெறுவதற்குத் தகவுடையவராகவிருப்பின்; அத்துடன்

(ஆஆ) அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் ஏதேனும் பணத்தொகையைப் பெறுவதற்குத் தகவுடையோராகவிருப்பின்,

அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய பணத்தொகையை அறவிடுதல் வேண்டுமென்பதுடன், பகிரங்கசேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கமைய, திணைக்களத்தின் சேவையில் சேரலாம். அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், திணைக்களத்தின் சேவைக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து திணைக்களத்தின் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் திணைக்களத்தின் சேவைக்கு எத்தேதியன்று நியமிக்கப்படுகின்றரோ அத்தேதி ஓய்வூதியத்தைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்துக்கான தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்; அல்லது

(iv) அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் திணைக்களத்தின் சேவையில் சேரவிருப்பம் தெரிவிக்கின்றவிடத்தும், ஊழியர் சகாய நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கும் உதவுதொகை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்குமிடத்தும், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கமைய, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, திணைக்களத்தின் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அவற்றுக்குத் தொடர்ந்து உதவுதொகை செலுத்துதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், ஓய்வூதியக் குறிப்புகளின் ஏற்பாடுகளின் கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையோராதலாகாது;

(ஊ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று உறப்பட்ட எல்லாத் தனிசுகளும், கடப்பாடுகளும், சொத்துக்களும் பொறுப்புகளும் நிறைவேற்றப்பட்ட அல்லது செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ஈடுபடுத்தப்பட்ட அல்லது மேற்கூறப்பட்ட அதிகாரசபைகளால் அல்லது அவற்றுடன் அல்லது அவற்றிற்காகவும் செய்வதற்கு உடன்பட்டுக் கொள்ளப்பட்ட எல்லா விடயங்களும் காரியங்களும் சொல்லப்பட்ட அதிகாரசபைகளுக்காகவும் அவை சார்பிலும் வழங்கப்பட்ட எல்லா உரிமங்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அரசாங்கத்தால் உறப்பட்ட தனிசுகளாகவும், கடப்பாடுகளாகவும், சொத்துக்களாகவும், பொறுப்புகளாகவும், அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட அல்லது வலுவுக்கிடப்பட்ட எல்லா ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும், அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்பட்ட அல்லது செய்வதற்கு உடன்பட்டுக் கொள்ளப்பட்ட எல்லா விடயங்களாகவும் காரியங்களாகவும், அரசாங்கத்தின் உரிமங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(எ) நியமிக்கப்பட்ட தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று தொழிற்பாட்டிலிலுள்ள எல்லா சமுர்த்தி வங்கித் தொழிற்சங்கங்களும் சமுர்த்தி வங்கித்தொழிற் சம்மேளனங்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முறையே வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கிகளாகவும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான வங்கித் தொழிற்சங்கங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(ஏ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது வேறுவகையில் சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து அல்லது சமுர்த்தி ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து ஏதேனும் நலன்பேணல் அனுகூலத்திற்கு விண்ணப்பித்துள்ள அல்லது அதனைப் பெற்றுவருகின்ற ஒவ்வோராளும் இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய நன்மையைப் பெறுவதற்கு அல்லது தொடர்ந்து பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய தகுதியுடைவராதல் வேண்டும்.

45. ஏதேனும் குறிக்கோளுக்கு நீக்கம் செய்யப்பட்ட 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபையாலும் அல்லது அதன் கீழும், நீக்கம் செய்யப்பட்ட 1996ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையாலும் அல்லது அதன் கீழும், நீக்கம் செய்யப்பட்ட 2005ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உடரட அபிவிருத்தி அதிகாரசபையாலும் அல்லது அதன் கீழும் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புகளும் நிதியங்களும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்புகளினதும் நிதியங்களினதும் குறிக்கோள் மற்றும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்புகளும் நிதியங்களும் எந்த நோக்கத்திற்காக தாபிக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் மற்றும் பயனுகரிகள் தொடர்பில் மாற்றம் எதுவும் இருக்கமாட்டாது என உறுதிப்படுத்தி திணைக்களத்தால் முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

46. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும்பட்சத்தில் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

47. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி-

"மத்திய வங்கி" என்பது (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"சமுதாயம்" என்பது, பொதுமக்களின் பெருந்தோட்ட, நகர அல்லது கைத்தொழிற்றுறைகள் எனப் பொருள்படும்;

"வாழ்வின் எழுச்சி பயனுகரி" என்பது ஏதேனும் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பால் அல்லது வாழ்வின் எழுச்சி பிராந்திய ஒழுங்கமைப்பால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கருத்திட்டத்தின் கீழ் அல்லது செயற்பாட்டின் கீழ் ஏதேனும் வகையான நன்மையை அல்லது உதவியைப் பெறுகின்ற எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"சிற்றளவு நிதி" என்பது ஊழியருக்கு அல்லது வேறுவகையில் நிதி சேவைகளைப் பெறும் வேறு வழிமுறைகள் இல்லாத குறைந்த வருமானமுள்ள தனியாட்களுக்கு அல்லது குழுக்களுக்கு வழங்கப்படும் ஒரு வகை வங்கித்தொழிற் சேவை எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது வாழ்வின் எழுச்சி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்; அத்துடன்

"தேசிய லொத்தர் சபை" என்பது 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, தேசிய லொத்தர் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை எனப் பொருள்படும்.

48. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(2அ) எவரேனும் பயங்கரவாதிக்கு, பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழுங்கமைப்புக்குப் பொருள் வகையான ஆதரவை அல்லது மூலவளங்களை நேரடியான அல்லது நேரடியாகவல்லாத வழிவகைகள் மூலம் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் வழங்குகின்ற அல்லது வழங்குவதற்குச் சதிசெய்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.";

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஓராம் பந்தியில் அல்லது (2) ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் அல்லது (2அ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்"; அத்துடன்

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான, (2) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின் கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் "நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியொன்றுக்குள் அத்தகைய பெறுமதியான குற்றப்பணமொன்றைச் செலுத்துமாறு அவருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய பெறுமதியைக் குற்றப்பணமொன்றாகச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், "3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,"3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான, (2) ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின் கீழான தவறொன்றின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "ஆள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :- "பயங்கரவாதி" என்பது -

(அ) பயங்கரவாதச் செயலொன்றை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ மற்றும் வேண்டுமென்று புரிகின்ற அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்ற;

(ஆ) பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதில் உடந்தையாளரொருவராகப் பங்குபற்றுகின்ற;

(இ) பயங்கரவாதச் செயலொன்றை ஒழுங்கு செய்கின்ற, அதனைப் புரியுமாறு பணிக்கின்ற அல்லது அதனைப் புரிவதில் உடந்தையாயிருக்கின்ற அல்லது உதவி செய்கின்ற; அல்லது

(ஈ) பங்களிப்பானது வேண்டுமென்றும் மற்றும் பயங்கரவாதச் செயலை முன்னெடுத்துச் செல்லும் இலக்குடனும் அல்லது குழுவின் பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதற்கான உட்கருத்துப் பற்றிய அறிவுடனும் செய்யப்படுமிடத்து, பொது நோக்கமொன்றுடன் செயலாற்றுகின்ற ஆட்கள் குழுவினால் பயங்கரவாதச் செயலொன்று புரிவதில் பங்களிக்கின்ற,

எவரேனுமாள் எனப் பொருள்படும்"

(2) "பயங்கரவாதச் செயல்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தினை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"பயங்கரவாதச் செயல்" என்பது -

(அ) இச்சட்டத்திற்கான 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பொருத்தனைகளுள் ஏதேனுமொன்றின் நோக்கெல்லைக்குள் அல்லது வரைவிலக்கணத்தினுள் தவறொன்றாக அமைகின்ற ஒரு செயல்;

(ஆ) ஆயுதமேந்திய மோதல் நிலைமையொன்றில் அல்லது வேறுவகையாக, பொதுமகன் ஒருவருக்கு அல்லது பகைமைகளில் தீவிரமாகப் பங்கெடுக்காத வேறெவரேனுமாளுக்கு மரணத்தை அல்லது பாரதூரமான உடலூறுபாட்டை விளைவிக்கும் உட்கருத்துக் கொண்டதும் மற்றும் அத்தகைய செயலின் நோக்கம், அதன் தன்மையினால் அல்லது சந்தர்ப்பத்தினால் ஏதேனும் செயலைச் செய்யுமாறு அல்லது செய்யாது தவிர்க்குமாறு ஒரு குடிசனத்தை அச்சுறுத்துவதாக அல்லது ஓர் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பை வலுக்கட்டாயப்படுத்துவதாக உள்ள வேறேதேனும் செயல் அல்லது;

(இ) (i) அரசாங்கத்தை செல்வாக்கிற்கு உட்படுத்துவதற்கென அல்லது பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரைச் செயலிழக்கச் செய்வதற்கென வடிவமைக்கப்பட்டதும்; அத்துடன்

(ii) அரசியல், மத அல்லது இலட்சியம் சார்ந்த நோக்கமொன்றை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்கென செய்யப்பட்டதுமான, பயன்பாடு அல்லது அச்சுறுத்தலின் செயற்பாடாகும் என்பதுடன்,

அத்தகைய செயற்பாடானது -

(அஅ) ஆளொருவருக்கெதிராக பாரதூரமான வன்முறையை ஈடுபடுத்தும்;

(ஆஆ) ஆதனத்திற்குப் பாரதூரமான சேதத்தை ஈடுபடுத்தும்;

(இஇ) செயலைப் புரிகின்ற ஆளைத் தவிர்ந்த வேறோர் ஆளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்;

(ஈஈ) பொதுமக்களின் அல்லது பொதுமக்களின் ஒரு பகுதியினரின் சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு பாரதூரமான ஆபத்தை உருவாக்கும்; அல்லது

(உஉ) இலத்திரனியல் முறைமையொன்றில் பாரதூரமாக தலையிடுதலுக்கு அல்லது பாரதூரமாகச் செயலிழக்கச் செய்வதற்கென வடிவமைக்கப்பட்ட, செயற்பாடானதுமாகும் எனப் பொருள்படும்."

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(அ) பதனிடப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்கு;

(ஆ) ஏற்றுமதிக்கான பண்டங்களின் உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்துவதற்கு; அல்லது

(இ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளில் பயன்படுத்துவதற்கென, ஒரு பிணையத்தின் செயலிடத்தில் அல்லது செயலிடத்திலிருந்து சாதனங்கள், உபகரணங்கள், பொருட்கள் மற்றும் நுகர்தகுபொருட்கள் என்பனவாகவுள்ளவற்றை, விடயத்துக்கேற்ப, களஞ்சியப்படுத்துவதற்கென, கட்டியுருவாக்குவதற்கென, திருத்துவதற்கென, பழுதுபார்ப்பதற்கென அல்லது ஏற்றுமதி செய்வதற்கென,

(இ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, "பெற்றோலியத் தொழிற்பாடுகள்" என்ற சொல்லமைப்பு, 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளையுடையதாதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:-

16. (1) துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டின் கொடுப்பனவு தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் ஐ இன் ஏற்பாடுகள், இலங்கைக்கு வெளியிலான மூலத்தைக் கொண்டதும், 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதுமான ஏதேனும் பொருளுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், -

(அ) துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுக் கொடுப்பனவிலிருந்து குறித்துரைக்கப்பட்ட பொருட்களுக்கு விலக்களிக்கின்றதும்; அத்துடன்

(ஆ) விதிக்கப்பட்டு அறவிடப்படுவதற்குச் சலுகை ரீதியிலான வீதமொன்றைக் குறித்துரைக்கின்றதும்,
2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் I ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும், 2011, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஒவ்வொரு கட்டளையும், 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், தொடர்ந்து வலுவிலிருத்தலும் வேண்டும்."

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2012ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறு 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவால் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் "இருக்குமிடத்து, அத்தகைய" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருக்குமிடத்து, எந்த மொத்த விற்பனை வரவிலிருந்ததான இலாபங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனவோ அந்த ஏதேனும் மொத்த விற்பனை வரவு தவிர்ந்த அத்தகைய";

(2) (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ix) என்னும் விடயத்தில் "வருவாய்கள் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வருவாய்கள்"; அத்துடன்

(3) (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ix) என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும்:-

(x) அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனத்தினால் கட்டணம் இன்றி ஏதேனும் சேவையை வழங்குவதற்கென திரட்டு நிதியிலிருந்து பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏதேனும் கடன்; அத்துடன்

(xi) ஏதேனும் சேதனப் பசளையின் உற்பத்தியாளரினால் அத்தகைய உற்பத்திப்பொருளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள்; அத்துடன்".

3. 2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவானது "ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (ஊ) என்னும் பந்தியில் "பரஸ்பர நிதியத்தை,", என்னும் சொற்களுக்குப் பதிலாக "பரஸ்பர நிதியத்தை அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) (ஊ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(எ) இலங்கை மத்திய வங்கி,".

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

(52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2012, நவம்பர் 08 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (52ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில், "கித்துள் மரத்தையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கித்துள் மரத்தையும் தென்னை மரத்தையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (இ) என்னும் பந்தியில், "கித்துள் மரத்தையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,"கித்துள் மரத்தையும் தென்னை மரத்தையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2013, சனவரி 1 ஆந் தேதியன்று எல்லா நோக்கங்களுக்காகவும் நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு, "2011, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்கு இயக்குநரினால் அளிக்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்கலின் பெறுமதியின் மீது ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத்தொடர்பு சேவைகள் கிடைக்கப்பெறுவதன் மீது 20 சதவீதப்படி தொலைத்தொடர்பு அறவீடு என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் "பெறுநர்" என அழைக்கப்படுபவர்) அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,

"தொலைத்தொடர்பு அறவீடு" என அழைக்கப்படும் அறவீடொன்று தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் (இதனகத்துப்பின்னர் "பெறுநர்" என அழைக்கப்படுபவர்) அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்:

(அ) 2011, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013, சனவரி 1ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காக, இருபது சதவீதத்தில்;

(ஆ) 2013, சனவரி 1ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக -

(i) இணையச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது, பத்து சதவீதத்தில்; அத்துடன்

(ii) இணையச் சேவைகளின் வழங்குதல் தவிர்ந்த தொலைத்தொடர்புச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது இருபது சதவீதத்தில்.

ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அத்தகைய தொலைத்தொடர்புச் சேவை கிடைக்கப்பெறுவதன் மீது, இயக்குநரினால் வழங்கப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தொலைத்தொடர்புச் சேவை" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"தொலைத்தொடர்புச் சேவை" என்பது, 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத்தொடர்பு மற்றும் வேறு இயக்குநர்களினால் இறுதி ஒப்பப்பணம் செலுத்துநர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் என்று பொருளாகுமென்பதுடன், இணையச் சேவைகளையும் உள்ளடக்கும் ஆனால் உள்ளூர் இயக்குநர்களுக்கும், சர்வதேசக் குடியேற்றத்திற்குமிடையிலும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல்கடந்த தொலைத்தொடர்புக் குடியேற்றங்களுக்கும் உள்ளூர் இயக்குநர்களுக்கும் கடல்கடந்த தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கும் 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III இன் 21ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மேவப்பட்ட சர்வதேசத் தொலைத்தொடர்புச் சேவைகளுக்குமிடையிலும் இடைத்தொடர்புச்

சேவைகளையும் அணுக்கச் சேவைகளையும் உள்ளடக்கமாட்டாது.

(2) “இடைத்தொடர்புச் சேவை” என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

“இணையச் சேவைகள்” என்பது, குறுகிய பான்ட், பரந்த பான்ட் அல்லது அர்ப்பணிக்கப்பட்ட இணைய அணுகுகை என்பனவகையாக இணையத்தை வழங்குதல் என்று பொருளாகும்.

4. 2013, சனவரி 1ஆந் தேதியிலிருந்து தொடங்கி 2013, மார்சு 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது, விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக எவரேனும் பாவனையாளரிடமிருந்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் இயக்குநரினால் விதித்துச் சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அறவீடு இச்சட்டத்தின் கீழ் செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டு அத்தகைய இயக்குநரினால் சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், அக்காலப்பகுதியின் போது விதித்து சேகரிக்கப்படும் ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிவை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

(235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(1அ) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வை விதித்தல் அல்லது விலக்களித்தல், ஏதேனும் பண்டங்கள் மீதான சுங்கத் தீர்வை செலுத்துவதற்கான நிபந்தனை அல்லது விதிவிலக்கு அல்லது பண்டங்களின் வகுப்பாக்கம் அல்லது விவரணம் தொடர்பில் பிணக்கொன்று இருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப அத்தகைய பண்டங்களின் இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானத்துக்கென உடனடுத்து விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(1ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களில் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தைத் தீர்மானித்தல் வேண்டும்.

(1இ) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி விடயத்துக்கேற்ப இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளருக்கு (1ஆ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் காலத்தினுள் தீர்மானத்தினை அறிவிக்கத் தவறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய தீர்மானத்தினால் இன்னலுறுகின்ற எவரேனுமாள், விடயத்துக்கேற்ப (1ஆ) உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் காலம் காலாவதியாவதிலிருந்து அல்லது அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுள் 2011 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீட்டைச் செய்யலாம்.”.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2009 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இயைபான பிரிவுகளில் வெவ்வேறு நடைமுறைத் தேதிகள் குறித்துரைக்கப்பட்டிருந்தால் ஒழிய 2013ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2012ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் அதன் (iii) ஆம் பந்தியில் “அக்காலாண்டில் செலுத்தப்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக “2009ஆம் ஆண்டு பெப்புருவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில் இறக்குமதி செய்தலின் மீது செலுத்தப்பட்ட அத்தகைய மதுவரி தவிர்ந்த அக்காலாண்டில் செலுத்தப்பட்ட” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (iii) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

“(iii) பந்தி (iv) இல் குறிப்பீடு செய்யப்பட்ட சேவைகள் தவிர்ந்த ஏதேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் நிரம்பலிலிருந்து அத்தகைய ஆளின் பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு என்பதுடன் இது-

(அ) ஏதேனும் இயைபான காலாண்டு 2011 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013 சனவரி 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற அத்தகைய காலாண்டாக இருப்பின் ஐந்நூறு ஆயிரம் ரூபா தொகை; அத்துடன்

(ஆ) ஏதேனும் இயைபான காலாண்டு 2013 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற அத்தகைய காலாண்டாக இருப்பின் மூன்று மில்லியன் ரூபா தொகை,

என்பவற்றை விஞ்சாதிருப்பின்";

(ஆ) அதன் (iv) அப்பந்தியில் "பணத்தொகையை விஞ்சுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக "பணத்தொகையை விஞ்சாதிருப்பின்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) பந்தி (iv) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

(v) அத்தகைய காலாண்டு 2013 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பிக்கின்ற காலாண்டில் இருந்து அத்துடன் எந்த வரி மதிப்பீட்டாண்டில் வர்த்தக செயற்பாடு ஆரம்பிக்கின்றதோ அந்த வரி மதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணிப்பிடப்பட்ட ஐந்து வருட காலப்பகுதி ஒன்றுக்கு எவரேனும் இலங்கைப் பிரசையாகவுள்ள தனியாளினால் ஏதேனும் மதுசாரம் மற்றும் புகையிலை தவிர்ந்த ஏதேனும் பொருட்களின் உற்பத்தியின் அல்லது ஏதேனும் சேவை வழங்கலின் ஏதேனும் புதிய தொழிலின் மொத்த வரவாகவுள்ள பொறுப்பாகக்கூடிய மொத்த வரவு, அத்தகைய தனியாள்:-

(i) 2013 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் வெளிநாட்டு தொழிலில் இருந்து திரும்பி வந்திருப்பின் அத்துடன்
(ii) அத்தகைய தொழிலை ஆரம்பிப்பதற்கு அவருடைய வெளிநாட்டு ஈட்டுகைகளை முதலீடு செய்திருப்பின்."

3. 2012ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் பாகம் I இல் :-

(அ) விடயம் (i) இல் ""ஏதேனும் பொருளின் உற்பத்தியாளரால்"", என்னும் சொற்களுக்குப் பதிலாக ""ஏதேனும் பொருளின் உற்பத்தியாளரால்"" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(ஆ) (iv) ஆம் பந்தியில் (iv)ஆம் விடயத்தின் ""ஓராண்டு காலப்பகுதியொன்றுக்குள்""என்னும் சொற்களுக்குப் பதிலாக ""ஓராண்டு காலப்பகுதியொன்றுக்குள் அல்லது அத்தகைய கருத்திட்டத்தினைப் பூர்த்திசெய்த பின்னர்தொண்ணூறு நாள் காலப் பகுதியொன்றுக்குள்"" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்

(இ) (xxxvi) ஆம் விடயத்தில் ""கிலோகிராம் ஒன்றிற்கு 75 ரூபா தீர்வைக்குட்பட்ட"", என்னும் சொற்களுக்குப் பதிலாக ""1979ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான தீர்வைக்குட்பட்ட""; என்ற சொற்களை இடுவதன் மூலமும்

(ஈ) (xxxviii) ஆம் விடயத்தில் ""வண்ண ஓவியங்கள்."" என்னும் சொற்களுக்குப் பதிலாக ""வண்ண ஓவியங்கள்"" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(உ) (xxxviii) ஆம் விடயத்தில் உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(xxxix) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விபரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட சூரிய வெப்பசக்தி வலுபிறப்பாக்கலுக்கான சூரியவெப்ப கணிப் பொறித் தகவலலகு, துணைக் கருவிகள் அல்லது சூரியவெப்ப வீட்டு முறைமைகள்;

(xL) நிலக்கரி;

(xLi) நிதிஅமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச நிகழ்வுக்கான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்;

(xLii) (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 6அ வின் பந்தி (அ) என்னும் பந்தியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் விசேட சேவைக் கட்டணத்திற்கு அமைய இறக்குமதிசெய்யப்பட்ட வைரங்கள், அத்துடன் செய்முறைப் படுத்தப்பட்ட வைரமான அத்தகைய வைரத்தின் ஏதேனும் தொடர்ச்சியான விற்பனை;

(xLiii) இயைபான சம்பந்தப்பட்ட அமைச்சுக்கான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, பொதுமக்களுக்கு அத்தகைய சேவைகளை வழங்கும் நோக்கத்திற்காக ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையினால் நிறைவேற்றப்படும் குப்பைகூளங்களை அகற்றும் செயற்பாடுகளின் பயன்பாட்டிற்கென இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் சாக்கடைநீர் காவிச்செல்லும் வாகனம் அல்லது பொறித்தொகுதி அல்லது சாதனம்;

(xLiv) அத்தகையபொருட்கள் இறக்குமதி மாற்றீட்டுக்காக கருதப்பட்டு, அத்துடன் கருத்திட்ட செயற்படுத்துகை காலப்பகுதியின் போது வழங்கப்படுகின்ற அளவிற்கு, 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக இனங்காணப்பட்ட கம்பெனி ஒன்றினால் உற்பத்தி செய்யப்பட்டதும் ஏனைய செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டத் திற்கு அல்லது நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விசேடித்த கருத்திட்டம் ஒன்றிற்கு அல்லது 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச்சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பெனி ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டதுமான ஏதேனும் பொருள்; அத்துடன்

(xLv) சுங்க நோக்கங்களுக்கான இசைவாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கப்பட்டதும் நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான பொறித் தொகுதி அல்லது சாதனமாகவுள்ள 1969ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையினால் மின்சாரத்தினை உற்பத்தியாக்கும் நோக்கத்திற்கென அல்லது இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ள ஏதேனும் நிறுவனம் மின்சாரத்தை விநியோகிப்பதற்கு இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் பொறித்தொகுதி அல்லது சாதனம்."

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல் -

(அ) (xxvi) ஆம் விடயத்தில் "துறைமுகம் அல்லது விமானத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "துறைமுகம் அல்லது விமானத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) (xxxiv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(xxxv) (422ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் ஏதேனும் சேவை; அத்துடன்

(xxxvi) திரட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத் தின் மூலம், அரசாங்கத்தின் சார்பில் ஒழுங்குசெய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து ஏதேனும் பகிரங்கக் கூட்டுத் தாபனத்தினால் கட்டணம் இன்றி வழங்கப்படும் ஏதேனும் சேவை."".

4. விடயத்திற்கேற்ப உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் அல்லது 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் 2013 சனவரி 1ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது எந்த ஆளுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆளொருவரிடமிருந்து இச் சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு கணிப்பிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானதாக செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்

ஆயின், இப்பிரிவின் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் மேற்சொல்லப்பட்ட காலப்பகுதியின்போது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானம் அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் வழக்கு நடவடிக்கையைப் பாதித்தலாகாது.

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதிச்சட்டம் மற்றும் 2012ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, நிதிச் சட்டம், என்பனவற்றைத் திருத்துவதற்கும், பயிர்க் காப்புறுதி அறவீடொன்றை விதிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட மற்றும் அவற்றிற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

### பாகம் I

### 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் IIஆம் பாகத்தினைத் திருத்துதல்

2. (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 5ஆம் பிரிவில் அதன் (1)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1அ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஓரளவு-ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீடானது (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் இரட்டை நோக்க வாகனமாகப் பதிவு செய்யப்பட்ட பாரமற்ற ட்றக் வண்டி தொடர்பில் 2013, சனவரி 1ஆம் திகதியிலிருந்து வலுவுக்குவரும் வகையில் அறவிடப்படுதலாகாது."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது-

(1) "டீசல் மோட்டார் வாகனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"இரட்டை நோக்க வாகனம்" என்பது (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்";

(2) "ஆடம்பர மோட்டார் வாகனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"பாரமற்ற ட்றக் வண்டி" என்பது சாரதிக்கும் பயணிக்குமான அதே குறுக்கீட்டு அச்சுவழியாக தனிவரிசை இருக்கையை கொண்டுள்ள பண்டங்களை ஏற்றிச் செல்லும் நோக்கத்துக்காக முழுமையாக அல்லது பிரதானமாக இசைவாக்கப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்ட சாரதியினுடைய பகுதியுடனான இரட்டை நோக்க வாகனம் எனப் பொருள்படும்";

(3) "ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தினை இடுவதன் மூலமும்:-

""ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம்" என்பது (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் இரட்டை நோக்க வாகனமாகப் பதிவு செய்யப்பட்ட ஆடம்பர மோட்டார் வாகனமொன்று அல்லது ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனமொன்று எனப் பொருள்படும்".

4. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது முதன்மைச் சட்டவாக்கத்தில் வழங்கப்பட்டவாறான பாரமற்ற ட்றக் வண்டி தொடர்பில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன அறவீட்டை அறவிட்ட அல்லது சேகரித்த எவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறவீடு அல்லது சேகரிப்பு செல்லுபடியானதாகக் கருதப்படுதலும் வேண்டும்:

'ஆயின், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய காலப்பகுதியின் போது அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட அத்தகைய அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிவை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

பாகம் II

**2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தினைத் திருத்துதல்**

5. 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, நிதி (உல்லாசப் பயண அபிவிருத்தி அறவீடு) சட்டத்தின் ஐஐஆம் பாகத்தின் 11ஆம் பிரிவில் "1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பொது விற்பனை முகவர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"1968 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, உல்லாசப் பயணத்துறை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பொது விற்பனை முகவர்கள்: ஆயின், மேலும் அத்தகைய அறவீடானது பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சாத ஆண்டு மொத்த விற்பனை வரவு வரியை அல்லது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத காலாண்டு மொத்த விற்பனை வரவு வரியைக் கொண்டுள்ள ஏதேனும் நிறுவனத்தின் மீது அறவிடப்படுதலாகாது.".

பாகம் III

**2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் IV ஆம் பாகத்தினைத் திருத்துதல்**

6. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2012ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் IV ஆம் பாகத்தின் தலைப்பானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலைப்பினை இடுவதன் மூலமும்:-

"குறித்த சட்டங்களின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து குறித்த சில தொழில்முயற்சிகளின் விலக்களிப்பு".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவில் (2).ஆம் உட்பிரிவில் அதன்(அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திரத் துறைமுகமொன்றில் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவில் (2).ஆம் உட்பிரிவில் அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திர துறைமுகமொன்றில் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவில் (2).ஆம் உட்பிரிவில் அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(அ) இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திர துறைமுகமொன்றில் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அதன் 18அ, 18 ஆ மற்றும் 18 இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

18அ.(1) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கருத்திற்குட்பட்ட பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சி, இதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையிலிருந்து (2).ஆம் மற்றும் (3).ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய விலக்களிப்பு பெறுதல் வேண்டும்:-

(அ) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்டுள்ள துறைமுக நுழைவு வியாபாரம்;

(ஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையினுள் அதனைக் கொண்டுவராது வேறுநாட்டிற்கு கப்பலேற்றப்படுகின்றவிடத்தான கரைகடந்ததொழில்;

(இ) வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல்;

(ஈ) முன்னிலைக் கொள்வனவாளர்களின் தலைமையகத் தொழிற்பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோகத் தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள்;

(உ) இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்னாட்டுத் தொகுதியாக ஒன்றுசேர்க்கப்பட்ட அத்தகைய சாதனங்கள் பேணும் சேவைகள்.

(2) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபார பண்டங்களில் உருப்படி ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில்முயற்சி-

(அ) இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திர துறைமுகமொன்றில் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இலங்கையின் ஆள்புலத்திற்கும் ஆள்புலத்திலிருந்தும் அத்தகைய சுதந்திர துறைமுகம் அல்லது பிணையத்தின் இடப்பரப்பிற்கும் அவற்றிலிருந்தும் பண்டங்களின் ஏதேனும் அசைவு விடயத்திற்கேற்ப அத்தகைய பண்டங்கள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(3) பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபாரப் பண்டங்களின் உருப்படி ரீதியிலான அசைவில் ஈடுபட்டிராத (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில்முயற்சி மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுதந்திரத் துறைமுகம் அல்லது ஒரு பிணையத்தின் இடப்பரப்பிற்கு வெளியே அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றலாம்.

18ஆ.(1) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கருத்திற்குட்பட்ட பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள இச்சட்டத்தின் நடைமுறைக்குவரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் தாபிக்கப்பட்ட ஏதேனும் புதிய தொழில்முயற்சி 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் இயைபான பிரிவுகளின் கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புகளுக்காக (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின்

ஏற்பாடுகளுக்கமைய தகமையுடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொழில்முயற்சியானது இயைபான பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை திருப்திப்படுத்துமாயின் விலக்களிப்பு ஏற்புடைமையானது அளிக்கப்படும்.

(அ) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்டுள்ள துறைமுக நுழைவு வியாபாரம்;

(ஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையினுள் அதனைக் கொண்டுவராது வேறு நாட்டிற்கு கப்பலேற்றப்படுகின்றவிடத்தான கரைகடந்த தொழில்;

(இ) வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல்;

(ஈ) முன்னிலைக் கொள்வனவாளர்களின் தலைமையகத் தொழிற்பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோக தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள்;

(உ) இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்னாட்டுத் தொகுதியாக ஒன்றுசேர்க்கப்பட்ட அத்தகைய சாதனங்கள் பேணும் சேவைகள்.

(2) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபார பண்டங்களில் உருப்படி ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய தொழில்முயற்சி-

(அ) இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திர துறைமுகமொன்றில் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இலங்கையின் ஆள்புலத்திற்கும் ஆள்புலத்திலிருந்தும் அத்தகைய சுதந்திர துறைமுகம் அல்லது பிணையத்தின் இடப்பரப்பிற்கும் அவற்றிலிருந்தும் பண்டங்களின் ஏதேனும் அசைவு விடயத்திற்கேற்ப அத்தகைய பண்டங்கள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(3) பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபாரப் பண்டங்களின் உருப்படி ரீதியிலான அசைவில் ஈடுபட்டிராத (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய தொழில்முயற்சி மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுதந்திரத் துறைமுகம் அல்லது ஒரு பிணையத்தின் இடப்பரப்பிற்கு வெளியே அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றலாம்.

18இ.(1) 1978ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் கருத்திற்குட்பட்ட பின்வரும் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமாக அடையாளம் காணப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று அல்லது அதன் பின்னர் தாபிக்கப்பட்ட ஏதேனும் புதிய தொழில்முயற்சியானது, 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கீழ் அளிக்கப்பட்ட விலக்களிப்புகளுக்கு (2) ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய தகமையுடையதாதல் வேண்டும்-

(அ) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்டுள்ள துறைமுக நுழைவு வியாபாரம்;

(ஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையினுள் அதனைக் கொண்டுவராது வேறு நாட்டிற்கு கப்பலேற்றப்படுகின்றவிடத்தான கரைகடந்த தொழில்;

(இ) வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல்;

(ஈ) முன்னிலைக் கொள்வனவாளர்களின் தலைமையகத் தொழிற்பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோக தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள்;

(உ) இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்னாட்டுத் தொகுதியாக ஒன்றுசேர்க்கப்பட்ட அத்தகைய சாதனங்கள் பேணும் சேவைகள்.

(2) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபார பண்டங்களின் உருப்படி ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய தொழில்முயற்சி-

(அ) இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திர துறைமுகமொன்றில் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றில் அத்தகைய செயறபாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இலங்கையின் ஆள்புலத்திற்கும் ஆள்புலத்திலிருந்தும் அத்தகைய சுதந்திர துறைமுகம் அல்லது பிணையத்தின் இடப்பரப்பிற்கும் அவற்றிலிருந்தும் பண்டங்களின் ஏதேனும் அசைவு விடயத்திற்கேற்ப அத்தகைய பண்டங்கள் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதைப் போன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(3) பண்டங்கள், பொருட்கள் அல்லது வியாபாரப் பண்டங்களின் உருப்படி ரீதியிலான அசைவில் ஈடுபட்டிராத (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் புதிய தொழில்முயற்சி மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறான சுதந்திரத் துறைமுகம் அல்லது ஒரு பிணையத்தின் இடப்பரப்பிற்கு வெளியே அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றலாம்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு "பதினாறாம், 17 மற்றும் 18ஆம் பிரிவுகளின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் "16, 17, 18, 18அ, 18ஆ மற்றும் 18இ என்னும் பிரிவுகளின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது:-

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பிரிவுகளை உட்புகுத்துவதுடன் அவை 19அ மற்றும் 19ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:

19அ. (1) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்படும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் ஒழுங்குவிதிகளின் மூலம்:-

(அ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக சுதந்திர துறைமுகங்களையும் பிணையத்தின் இடப்பரப்புகளையும் வெளிப்படுத்தலாம்;

(ஆ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில்முயற்சிகளுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட முதலீட்டு

வரையறைகள் மற்றும் வேறு பரிமாணங்களைக் குறித்துரைக்கலாம்;

(இ) உள்ளூர் விற்பனைகள் தொடர்பில் நிபந்தனைகளையும் விலக்களிப்புகளையும் குறித்துரைக்கலாம்;

(ஈ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் விலக்களிப்புகளை அளிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைக்கலாம்; அத்துடன்

(உ) கண்காணிக்கும் அதிகாரம் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறை என்பவற்றைக் குறித்துரைக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னரான வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதியின் இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்

19ஆ. இச்சட்டத்தின் இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி-

“இலங்கை முதலீட்டுச் சபை” என்பது, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை எனப் பொருள்படும்;

“பிணையத்தின் இடப்பரப்பு” என்பது, இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்படுவதும் இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபையினால் மேற்பார்வை செய்யப்படுவதுமான இடப்பரப்பொன்று என பொருள்படும்;

“செலாவணிக் கட்டுப்பாடு” என்பது (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட செலாவணிக் கட்டுபாட்டுத் திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

“இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர்” என்பது, (236 ஆம் அத்தியாயமான) இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் எனப் பொருள்படும்;

“சுங்கக் கட்டளைச் சட்டம்” என்பது, (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்;

“சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி” என்பது, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

“துறைமுக நுழைவு வியாபாரம்” என்பது, இப்பாகத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் உற்பத்திச் செயற்பாட்டினையும் இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சுதந்திரத் துறைமுகத்தினுள் ஆகக்குறைந்த வீதமான பத்து சதவீதத்திலான உள்நாட்டு சேர்பெறுமதியுடன் மீள் ஏற்றுமதிக்காகப் புதிய தொழில்முயற்சியொன்றின் மூலம் நிறைவேற்றுதலையும் உள்ளடக்குகின்றது;

“சுதந்திர துறைமுகம்” என்பது, இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளால் வெளிப்படுத்தப்படுவதும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுத்தப்படும் கப்பல் துறைமுகத்தினுள் அல்லது நீரினால் சூழப்படாததும் உள்நாட்டு இடப்பரப்பிலுள்ள துறைமுகத்தினுள்ளான இடப்பரப்பொன்று எனப் பொருள்படும்;

“சாதனங்கள் பேணும் சேவை” என்பது, மற்றவற்றுக்கிடையில்-

(i) சரக்கூடுமாற்றுல் செயற்பாடுகள்;

(ii) உள்ளூர் ஏற்றுமதியாளர்களுக்கு உள்ளீடுகளை அல்லது முடிவுப்பொருட்களை தற்காலிக களஞ்சியப்படுத்துகைக்காக குதப்படுத்துதல்; மற்றும்

(iii) வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு கப்பற் கேள்வை அனுப்புதல்; என்பவற்றை உள்ளடக்குகின்றது.

“இலங்கை துறைமுக அதிகாரசபை” என்பது, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபை எனப் பொருள்படும்;

“இலங்கையின் ஆள்புலம்” என்பது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் சுதந்திர துறைமுகம் அல்லது பிணையத்தின் இடப்பரப்பொன்றினை உள்ளடக்காததுமான இலங்கைக் குடியரசின் ஆள்புலம் எனப்பொருள்படும்;

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் அட்டவணையை இத்தால் சேர்ப்பதன் மூலமும்:-

“அட்டவணை (18அ என்னும் பிரிவு)

1. 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்;
2. 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம்;
3. 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்;
4. 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்;
5. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்;
6. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.”

பாகம் IV

**பயிர்க் காப்புறுதி அறவீட்டின் விதிப்பனவு**

14. (1) இயற்கை அனர்த்தங்களின் காரணமாகப் பாதிக்கப்பட்ட இலங்கைக் கமக்காரர்களுக்கு இழப்பீடுகளை ஈடுசெய்யும் நோக்குடன், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின் வரம்பெல்லையின் கீழ் வருகின்ற ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் அத்தகைய நிறுவனங்களின் வரிக்குப் பின்னரான இலாபங்களின் மீது (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "அறவீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பயிர்க் காப்புறுதி அறவீடு என அழைக்கப்படும் ஒரு சதவீதம் அறவீடொன்றாக அறவிடப்படுதல் வேண்டுமென்பதுடன் விதிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இப்பாகத்தின் கீழ் விதிக்கப்பட்ட அறவீடானது 2006ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையின் மூலம் பேணப்படுவதும் நிருவகிக்கப்படுவதுமான பிறிதொரு கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நடைமுறையில் அவசியமானவையான ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

15. (1) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அல்லது ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சரானவர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னரான வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதியின் இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை (பிரிவு 14)

1. 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டம்;
2. 1988ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டம்;
3. 2000ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்.

## 2013 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2013, சனவரி 1 ஆந்தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. இரண்டாயிரத்து மூன்றாமாண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "4.5 சதவீதத்தை" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, "7 சதவீதத்தை" என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "2006 சனவரி 1 ஆம்" "எண்பத்தைந்து சதவீதத்தை" மற்றும் "2013 சனவரி 1 ஆம்" என்னும் எண்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக முறையே "2013 சனவரி 1 ஆம்" "எண்பது சதவீதத்தை" மற்றும் "2020 சனவரி 1 ஆம்" என்னும் எண்ணையும் சொல்லையும் இடுவதன் மூலமும்.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2013, சனவரி 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்துக்கான அட்டவணை அவ்வட்டவணையின் 10 ஆம் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"11. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்.
12. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இயைபான பிரிவுகளில் வெவ்வேறு நடைமுறைத் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2013, சனவரி 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) 2012ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில் "எவையேனும் ஆடைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவையேனும் ஆடைகள் அல்லது நெய்யப்பட்ட துணிவகைகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (இ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் "ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் விதிக்கப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்."; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் "ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "இவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் விதிக்கப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்."; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(இ) (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்திற் பதிவு செய்யப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட எவரேனும் ஆளினால் பண்டங்கள் அல்லது சேவைகள் பின்வருவோருக்கு வழங்கப்படுவதன் மீது:-

(i) 7ஆம் பிரிவின் நியதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட சைபர் வீதமிடப்பட்ட சேவைகளின் எவரேனும் ஏற்றுமதியாளர் அல்லது வழங்குநர்;

(ii) அத்தகைய வழங்குதல்கள் கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட வழங்குதல்களாக இருக்குமளவுக்கு, கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின் போது, முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள்;

(iii) முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குறித்த கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் (2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்);

(iv) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை எவரேனும் ஏற்றுமதியாளருக்கு வழங்குகின்ற எவரேனும் உற்பத்தியாளர்;

(v) ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் தரம், பண்பு அல்லது பெறுமதி என்பவற்றின் சீராக்கத்தை விளைவிக்கின்ற சேர்பெறுமதிச் சேவைகளை ஏற்றுமதியாளரொருவருக்கு வழங்குகின்ற எவரேனும் வழங்குநர்;

(vi) அத்தகைய வழங்கல்கள் கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட வழங்கல்களாக இருக்குமளவுக்கு, கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின் போது சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள்;

(vii) மேலே உட்பந்தி (i), (ii), (iii), (iv), (v) அல்லது (vi) என்பவற்றிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள்; ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி, கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவலின் மேல், அத்தகைய வழங்கல்களின் பெறுமதி அத்தகைய பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் மொத்த வழங்கல்களின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுகின்றதெனத் திருப்திப்படுதல் வேண்டும்.

அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் செயற்பாடுகள், அத்தகைய நோக்கத்துக்காக வழங்கப்பட்டவையும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையிற் குறித்துரைக்கப்படுகின்றவையுமான வழிகாட்டு நெறிகளில் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட முறையில் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு நிறைவேற்றப்படும் அத்தகைய காலம் வரை.

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) (அ) என்னும் பந்தியில் “சுங்க பிணையத்தின் இடப்பரப்பினுள்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சுங்க பிணையத்தின் இடப்பரப்பினுள் அல்லது 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் IV ஆம் பாகத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு சுதந்திரத் துறைமுகத்தினுள்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) (ஊ) என்னும் பந்தியில், 1996 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரிச் சட்டத்துடன் பதிவு செய்யப்பட்ட” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகம் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) (அ) என்னும் பந்தியின் (vi) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(vi) 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்டவரும் அத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக அல்லது ஏற்றுமதிக்காகப் பண்டங்களின் உற்பத்தியாளரொருவருக்குச் சேவைகளை வழங்குவதற்காக அத்தகைய பண்டங்களை இறக்குமதி செய்கின்றவரும் அல்லது பெறுகின்றவரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்துடன் பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட சுங்கப்பிணையத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட எவையேனும் பண்டங்களுட்பட்ட எவையேனும் பண்டங்கள் மீது”;

(ii) (அ) என்னும் பந்தியின் (vii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(vii) ஏற்றுமதி செய்யப்படுவதற்காகப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) ஆம் விடயத்திற் குறிப்பீடு செய்யப்பட்டவரும் அத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக அல்லது சேவைகளை வழங்குவதற்காக அல்லது அத்தகைய ஆளினால் பயன்படுத்தப்படுவதற்கு அத்தகைய தொழிற்தொகுதியை அல்லது எந்திரத்தொகுதியை இறக்குமதி செய்கின்றவரும் அல்லது பெறுகின்றவரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்துடன் பதிவு செய்யப்பட்டவருமான ஆளொருவரினால் இறக்குமதி செய்யப்பட்ட சுங்கப் பிணையத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதியுட்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி அல்லது எந்திரத்தொகுதி மீது”;

(iii) (அ) என்னும் பந்தியின் (viii) ஆம் மற்றும் (ix) ஆம் உட்பந்திகளை நீக்கிவிடுவதன் மூலமும்;

(iv) அக்காப்பு வாசகத்தின் முடிவில், “வரிக் கொடுப்பனவைப் பின்போடுதல்,” என்பதிலிருந்து தொடங்கி அப்பந்தியின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“வரிக் கொடுப்பனவைப் பின்போடுதல், இறக்குமதி செய்யப்பட்ட, பெறப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள்மீது பின்வருவனவற்றைக் கொடுத்துதவுவதற்கு அமைந்ததாதல் வேண்டும் -

(அ) பின்போடப்பட்ட வரி பத்தாயிரம் ரூபாவுக்குக் குறைவாகவிருக்கும் விடயத்தில் வங்கி உத்தரவாதமொன்று; அல்லது

(ஆ) பின்போடப்பட்ட வரி பத்தாயிரம் ரூபாவுக்குக் குறைவாகவிராத விடயத்தில் ஓர் உத்தரவாதமாகத் திறைசேரி உண்டியலொன்று; அல்லது

(இ) பின்போடுதல் கவனத்துட் கொள்ளப்படும் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, வருமதியாகவுள்ள வரித்தொகையை மேவுகின்ற கூட்டிணைப்பு உத்தரவாதமொன்று:

ஆயின், (ஆ) என்னும் பந்தியின் கீழான அத்தகைய பின்போடுதலின் விடயத்தில் இறக்குமதி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் மீள்ஏற்றுமதி செய்யப்படுவதற்கு அரசாங்க நிறுவனமொன்றினால் அத்தகைய பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள விடத்து உத்தரவாதமெதுவும் தேவைப்படுதலாகாது.”.

3. இரண்டாயிரத்தாறாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “எவரேனும் ஆளினால்” என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-
“எவரேனும் ஆளினால்;

(ஊ) இப்பிரிவின் முற்போந்த பந்திகளின் கீழான வழங்கல்களும் 2 ஆம் பிரிவின் கீழ் விலக்கிலிடப்பட்ட எவையேனும் வழங்கல்களும் அல்லது முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட எவையேனும் வழங்கல்களும் உட்பட, ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத மொத்தக் காலாண்டு வழங்கல்களை உடைய எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால்;”

(2) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-
“ஆயின், அத்தகைய வரியானது,

(i) பதிவு செய்யப்பட்ட எவரேனுமாள் அப்பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்து;

(ii) வேறெவரேனுமாள் அப்பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடொன்றைச் செய்து,

அத்துடன் 10 ஆம் அல்லது 12 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகப் பதிவொன்றைப் பெற்றுக்கொண்டால், 2013, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட பண்டங்களின் அத்தகைய மொத்த விற்பனவு அல்லது சில்லறை விற்பனவு வழங்குதலின் மீது அறவிடப்படுதல் வேண்டும்.”.

(3) அக்காப்புவாசகத்தின் முடிவை உடனடுத்துப் பின்வரும் புதிய காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

“ஆயின், மேலும், (ஊ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளுக்குக் குறிப்பீடு செய்யப்பட்ட வரி விதிக்கப்படக்கூடியமை, சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்திற் குறித்துரைக்கப்பட்டவாறாக வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வழங்கல்கள் தவிர்ந்ததாக இருத்தல் வேண்டும்.”.

4. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச்

சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (12) ஆம் உட்பந்தியில் "அதுவாக இருத்தலும் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-
"அதுவாக இருத்தலும் வேண்டும்

"(13) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 9ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மொத்த விற்பனவு அல்லது சில்லறை விற்பனவுத் தொழிலொன்றில் விற்பனை செய்யப்படவுள்ள பண்டங்களுக்குக் கூறப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விற்பனவு விலையானது, வரிக்கான பொறுப்பு இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் (ஊ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்படுமிடத்து, வரி அறவிடப்படக்கூடியமைக்காக அவசியமானவிடத்து சீர்செய்யப்படலாம்:".

5. இரண்டாயிரத்தொன்பதாம் ஆண்டின் 15ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ii)ஆம் விடயத்தில், "2009, சனவரி, 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கையில் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2009, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2013, சனவரி 1ஆம் தேதிக்கு முன்னர் இலங்கையில் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ii) ஆம் விடயத்தின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(iii) 2013, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், இலங்கையில் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் -

(அ) விடயத்திற்கேற்ப, ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியின் முடிவில், அந்த வரி விதிக்கப்படற்பாலதான, விடயத்திற்கேற்ப, ஒரு மாத அல்லது மூன்று மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவாகவிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடையும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாத அல்லது மூன்று மாத வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்களின் மொத்தப் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தை அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்குமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்,".

(3) இரண்டாம் உட்பிரிவில்,"3ஆம் பிரிவின் கீழ் வரிக் கொடுப்பனவிலிருந்து விலக்கிலிடப்பட்ட ஏதேனும் மொத்த அல்லது சில்லறை வியாபாரச் செயற்பாட்டின் வழங்கல்களை உள்ளடக்குதலாகாது." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2 ஆம் பிரிவின் கீழ் விலக்கிடப்பட்ட அல்லது சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களுட்பட பஞ்சாங்க ஆண்டொன்றில் மூன்று மாதக் காலப்பகுதியொன்றுக்காக மொத்த வழங்கல்களின் பெறுமதி ஐந்நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிராதிருந்தாலொழிய, ஒரு மொத்த விற்பனவு அல்லது சில்லறை விற்பனவு வியாபாரச் செயற்பாட்டில் ஏதேனும் செய்முறையின்றி உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களின் வழங்குதலினது பெறுமதியை உள்ளடக்குதலாகாது." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

6. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிப்பதற்கு ஆளானவராதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:

ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிப்பதற்கு ஆளானாதல் ஆகாது:

ஆயின், மேலும் 2013, சனவரி 1ஆந் தேதியிலிருந்து, 1996ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் மீதான வரிச் சட்டத்தின் விடயத்துக்கேற்ப 12ஆம் பிரிவின் கீழ், 80ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 75 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனுமாள், அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆள் 10ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iii)ஆம் விடயத்திற் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக் கற்களை நிறைவேற்றுமிடத்து அல்லது இச்சட்டத்தின் 22ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின் போது பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் பண்டங்களை விடுவிப்பதற்காக இனங்காணல் இலக்கமொன்றைப் பெற்றுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு, "இச்சட்டத்தின் கீழான பதிவுக்காக குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் கீழான பதிவுக்காகக் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், 2013, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னரான ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

8. இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு, அதன் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(2) (அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டவரும்; அல்லது

(ஆ) 2002, ஒகத்து 1 ஆந் தேதியன்று 1996 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் மீதான வரிச் சட்டத்தின் 75 ஆம் பிரிவின் கீழ் அல்லது 80ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டவராகக் கருதப்படுகின்றவரும், மொத்த விற்பனவு மற்றும் சில்லறை விற்பனவு வியாபாரத்தைப் பதிவு செய்வதற்காக 3 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றைக் கொண்டு நடாத்துகின்றவரும் அல்லது நிறைவேற்றுகின்றவரும் அல்லது இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iii)ஆம் விடயத்திற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்றவருமான,

எவரேனுமாள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.".

9. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 9ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "விண்ணப்பஞ் செய்யலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:- "விண்ணப்பஞ் செய்யலாம்:

ஆயின், 2012, திசெம்பர் 31 ஆந்தேதியன்றுள்ளவாறாக முடிவடைகின்ற ஆண்டில் மூன்று மாத காலப்பகுதிக்காக மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத மற்றும் பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்காகப் பன்னிரெண்டு மில்லியன் ரூபாவையுடைய வழங்கல்களின் மொத்தப் பெறுமதியைக் கொண்டிருந்தவரான எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள், அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளின் வரி விதிக்கப்படற்பாலனவான வழங்கல்கள், 10ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (iii)ஆம் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட வழங்கல்களின் பெறுமதியை விஞ்சுகின்ற சாத்தியம் கொண்டுள்ளதென நம்புவதற்கு அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளுக்குக் காரணங்கள் இருந்தாலொழிய, 2013, சனவரி 1ஆந் தேதியிலிருந்து அவரது பதிவு இல்லாதாக்கப்படுவதற்காக வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:- "கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், (1)ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக பதிவு செய்யப்பட்ட ஆளின் பதிவு இல்லாதாக்கப்படுகின்றதோ அந்தப் பதிவு செய்யப்பட்ட ஆளின் விடயத்தில் -

(அ) (வியாபாரக் கையிருப்புத் தவிர்ந்த) சொத்துக்கள், இல்லாதாக்குதல் தேதிக்கு நேர்முற்போந்த நேரத்தில் வேறொரு பதிவு செய்யப்பட்ட ஆளுக்குக் கைமாற்றப்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய சொத்துக்களின் மீது வருமான வரி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மதிப்பிறக்க வீதங்களின் அடிப்படையில் சொத்துக்களின் கொள்ளுதற் பெறுமதியையும் அத்தகைய சொத்துக்களின் பயன்பாட்டுக் காலப்பகுதியையும் இயைபாகவிருக்கக்கூடியவாறான வேறு கருமங்களையும் கவனத்துட்கொண்டு, அவ்வாறு கைமாற்றப்படாத சொத்துக்களின் பெறுமதியைத் தீர்மானித்தல் வேண்டும்.

(ஆ) வியாபாரக் கையிருப்புக்கான பொறுப்பு, 2012, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளாறாக வியாபாரக் கையிருப்பின் மீதான உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரியை விஞ்சுதலாகாது.".

10. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், "(1) பதிவு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும்" என்பதிலிருந்து தொடங்குகின்றவையும் "கொண்டிருத்தலும் வேண்டும்:" என்பது வரையிலானவையுமான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(1) பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் -

(அ) 2013, சனவரி 1ஆந்தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, ஒவ்வொரு வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னரான மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல்;

(ஆ) 2013, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, ஒவ்வொரு வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னரான மாதத்தின் கடைசி நாளுக்குப் பிந்தாமல்,

அவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் போது அவரது வழங்கல்கள் பற்றிய விபரத்திரட்டொன்றை ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய விபரத்திரட்டு ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய படிவத்தில் தரப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

11. இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 7ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"ஆயின், -

(அ) இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரினால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் மேற்கூறப்பட்ட சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, இலங்கை முதலீட்டுச் சபையினால் உள்ளூரில் விற்பனைக்காக அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய நூற்றுவீதத்தினுள்ளான தைத்த ஆடைகளின் வழங்கலின் மீது வருமதியாகவுள்ள வரித் தொகை, இலங்கையினுள் அவ்வாறு வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும் இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிக்காக நெய்யப்பட்ட துணி வகைகளின் உற்பத்தியாளரினால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் மேற்கூறப்பட்ட சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, இலங்கை முதலீட்டுச் சபையினால் உள்ளூரில் விற்பனைக்காக அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய நூற்றுவீதத்தினுள் நெய்யப்பட்ட துணிவகைகளினால் தயாரிக்கப்பட்டதும், பின்வரும் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்டவாறானதுமான ஏதேனும் தயாரிப்பு உட்பட நெய்யப்பட்ட துணிவகைகளின் வழங்கலின் மீது வருமதியாகவுள்ள வரித் தொகை பின்வரும் வீதங்களில் இருத்தல் வேண்டும்:-

(i) நார்ப்பட்டுக்கு அல்லது திரைச் சீலைகளுக்கு ஒரு கிலோ கிராமுக்கு நாற்பது ரூபா;

(ii) துவட்டிகளுக்கு ஓர் உருப்படிக்கு இருபத்தைந்து ரூபா;

(iii) நெய்யப்பட்ட துணிவகைகளினால் தயாரிக்கப்பட்ட பைகளுக்கு ஓர் உருப்படிக்கு நாற்பது ரூபா;

(iv) ஒவ்வொரு துண்டும் நீளத்தில் இரண்டு மீற்றர்களுக்கு மேற்படாத, வெட்டுத்துண்டுகளாக விஞ்சுதலான நெய்யப்பட்ட துணிவகைகளுக்கு ஒரு கிலோகிராமுக்கு இருபத்தைந்து ரூபா;

(v) வேறெவையேனும் நெய்யப்பட்ட துணிவகைகளுக்கு ஒரு கிலோ கிராமுக்கு நாற்பது ரூபா.".

(2) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் -

(அ) இரண்டாம் காப்புவாசகத்தின் (உ) என்னும் பந்தியில் "(உ) 2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்" என்பதிலிருந்து தொடங்குகின்ற எல்லாச் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் "ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டதாக விருப்பின்,"; என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியிலிருந்து 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்துடன் பதிவு செய்யப்பட்டவரும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக அப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் ஏற்றுமதியாளர்களுக்குப் பண்டங்களை வழங்குபவராகவுள்ளவருமான எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளின் 2 ஆம் பிரிவின் கீழான பின்போடப்பட்ட வரியுட்பட உள்ளீட்டு வரியின் விஞ்சுதொகை ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டதாகவிருப்பின்,";

(ஆ) மூன்றாம் காப்புவாசகத்தில், "(2)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் விடயம் (i), (ii), (iii) அல்லது (iv) என்பவற்றிற்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(2)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் விடயம் (i), (ii), (iii), (iv), (v) அல்லது (vi) என்பவற்றிற்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் '6)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (iv)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(v) வரிக்கான பொறுப்பு தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்பட்ட ஏதேனும் வரிப் பணப்பட்டியல் இப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தொழிலுடன் சம்பந்தப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய வரிப் பணப் பட்டியலின் மீது.";

(4) பத்தாம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தின் (ii)ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ii) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, 2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டதும், ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்டதுமான எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித் திட்டத்துடன் பதிவு செய்யப்பட்ட ஆட்களாக இருவருமுள்ள அளவுக்கு வழங்குநரொருவரினால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வழங்கல்களாகவுள்ளவையும், அவற்றின் மீது இச்சட்டத்தின் கீழ் வரி பின்போடப்பட்டவையுமான வழங்கல்கள்;" அத்துடன்

(5) பத்தாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(11) பதினாறாம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எந்தப் பதிவு செய்யப்பட்ட ஆளின் மொத்த வழங்கல்கள் 2012, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து தொடங்கி 2012, திசெம்பர் 31 ஆந்தேதியன்று முடிவடைகின்ற ஆண்டிலான மூன்று மாத காலப்பகுதியொன்றுக்கு மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத அல்லது ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை அந்த எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளின் பதிவு இல்லாதாக்கப்படுகின்றமை காரணமாக, 2012, திசெம்பர் 31 அன்றுள்ளவாறு 2013, சனவரி 1 ஆந் தேதிக்குப் பின்னர் உரிமை கோரப்படத்தக்கதல்லாததும், இப்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கணக்கிடப்பட்டதுமான அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியின் ஏதேனும் உட்சேர்க்கப்படாத மீதி, அத்தகைய நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் செய்யப்பட்ட வேண்டுகோளின் மேல் ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட வரிகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படலாம்:

ஆயின், இவ்வுட்பிரிவின் கீழ் வரியானது, ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் பதிவு இல்லாதாக்கப்படுவதன் மீதான பொறுப்பு இறுதியாக்கப்பட்ட பின்னர் எதிரீடு செய்யப்படுதல் வேண்டும்.".

12. இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 7ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியில் "எவரேனும் ஆளினால்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆளினால், அல்லது (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் (2003, யூலை 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களையும்:"

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(2) இலங்கையில் எவையேனும் நிதிசார் சேவைகளை வழங்குகின்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் அல்லது வேறு ஆளும், பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) விடயத்திற்கேற்ப, மூன்று மாத காலப்பகுதிக்காக அத்தகைய வழங்கலின் பெறுமதி ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து அல்லது பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்காக ஒரு மில்லியன் எட்டு இலட்சம் ரூபாவை அத்தகைய பதிவு 2013, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக இடம்பெற்றிருப்பின்;

(ஆ) விடயத்திற்கேற்ப, மூன்று மாத காலப்பகுதிக்காக அத்தகைய வழங்கலின் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து அல்லது பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்காகப் பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து, அத்தகைய பதிவு 2013, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக இடம்பெற்றிருப்பின்.".

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

""(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட நிறுவனமும் அல்லது வேறு ஆளும், (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பூர்த்தியிலிருந்தான தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும், இவ்வத்தியாயத்தின் கருத்துக்குட்பட குறித்துரைக்கப்பட்ட நிறுவனமாகவும் உள்ளதுமான ஏதேனும் நிறுவனம், இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனமொன்றாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும் ஆணையாளர் தலைமையதிபதி, இவ்வத்தியாயத்தின் விடயத்தின் கீழ் பதிவுக்காக விண்ணப்பமொன்றைச் செய்திராத எவரேனுமாளை, அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகளின் தன்மையைக் கவனத்துட்கொண்டு ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய ஆள் இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றாரென அபிப்பிராயப்படின், பதிவு செய்தல் வேண்டும். இச்சூழ்நிலைகளில்

அத்தகைய ஆளுக்கு இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் தம்பக்க வழக்கை உரைப்பதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து அதற்கிணங்க அத்தகைய ஆளைப் பதிவு செய்தலும் வேண்டும்.".

(4) அதன் (4)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(5) பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும் -

(அ) அத்தகைய ஆளினால் ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடு கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற பெயர், முகவரி மற்றும் இடம்;

(ஆ) அத்தகைய ஆளினால் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் தன்மை;

(இ) விபரத்திரட்டுக்களையும் ஏனைய ஆவணங்களையும் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆள்; அத்துடன்

(ஈ) வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாட்டின் சொத்தாண்மை,

என்பனவற்றிலான ஏதேனும் மாற்றத்தை, அத்தகைய மாற்றம் ஏற்பட்ட பின்னர் பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல் எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆ) ஆறு மாதங்களாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், மார்ச்சு 31 ஆந் நாளன்று முடிவடைகின்ற பன்னிரெண்டு மாத காலப்பகுதிக்காக எந்தக் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றனவோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின் விடயத்தில் ஆறு மாத காலப்பகுதியானது, பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட அக்காலப்பகுதிக்காக ஏப்பிறல் 1 ஆம் நாளன்றும் செத்தெம்பர் 1 ஆந் நாளன்றும் தொடங்கப்படலாம். அத்தகையபட்சத்தில் சனவரி 1 ஆம் நாளிலிருந்து தொடங்கி மார்ச்சு 31 ஆம் நாள் வரையிலான காலப்பகுதிக்கான தனிவேறான விபரத்திரட்டொன்று ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் அத்தகைய மாற்றமேற்பட்ட நேரத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.".

14. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 9ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகள் அரையாண்டு அடிப்படையில் உள்ளவாறாக தொகையைப் பிரதிபலிப்பதற்கென சீராக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகள் ஆண்டு அடிப்படையில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் உள்ளபடியான தொகைகளைப் பிரதிபலிப்பதற்கெனச் சீராக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சீராக்கம் இயைபான கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவுத்தேதிக்குப் பின்னர் ஆறு மாதங்களினுள் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(ஆ) (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XIV ஆம் அத்தியாயத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஊழியர்களின் விடயத்தில், அத்தகைய ஊழியர்களுக்குச் செலுத்தப்படற்பாலதும், 2006ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 119ஆம் பிரிவின் கீழ் பேணப்பட்ட சம்பளப்பட்டியலில் பிரதிபலிக்கப்பட்டதுமான முழு மொத்த ஊதியம்; அத்துடன்;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 110ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 119ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் "முதலாம் அட்டவணையின் (xi) என்னும் விடயத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட வழங்கல்களைத் தவிர, இவ்வத்தியாயத்தின் கீழ் வரி விதிக்கப்படற்பாலதான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஆ) என்னும் பந்தியின் (x)ஆம் விடயத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட வழங்கல்கள் தவிர, ஆனால் இவ்வத்தியாயத்தின் கீழ் வரி விதிக்கப்படற்பாலதான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியில், "கம்பெனிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களில் எழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டியின் மீதான இலாபத்திற்கு அல்லது வருமானத்திற்கு;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கம்பெனிகளுக்கிடையிலான (ஒரு தொழிலிலிருந்தான இலாபமாகவிராத) கொடுக்கல்வாங்கல்களின் நின்றெழுகின்ற அல்லது திரளுகின்ற வட்டியின் மீதான இலாபத்துக்கு அல்லது வருமானத்திற்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அதன் (ஊ) என்னும் பந்தியில், "ஆளொருவருக்கு எழுகின்ற பங்கிலாப வருமானத்திற்கு;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆளொருவருக்கு எழுகின்ற (ஒரு தொழிலிலிருந்தான இலாபமாகவிராத) பங்கிலாப வருமானத்திற்கு;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஈ) அதன் (ஏ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வருதனை இடுவதன் மூலமும் :-

"(ஏ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு கணக்கிடப்பட்ட இலாபத்தில் உள்ளடக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனை என்னும் தொழிலில் பிரதானமாக ஈடுபட்டுள்ள எவரேனுமாளுக்கு அல்லது இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள்ளான ஏதேனும் "குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்துக்கு" அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாதவரும் ஆனால், நிதிக் கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்ட அத்தகைய சேவைகளுக்கு ஒத்ததான சேவைகளை வழங்குகின்றவருமான ஆளுக்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானம் தவிர்ந்த நாணயப் பரிவர்த்தனையிலிருந்தான (ஒரு தொழிலிலிருந்தான இலாபங்களாகவிராத) இலாபங்கள் அல்லது வருமானம்,

சைபராகக் கருதப்படுதல் வேண்டும்.";

(4) அதன் (8)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(8) ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட நிறுவனமும் அல்லது வெறெவரேனும் ஆளும் கணக்கிடுதல், விபரத்திரட்டுக்களையும் அத்தகைய விபரத்திரட்டுத் தொடர்பாகக் கொடுத்துதவப்பட வேண்டிய தகவலையும் சமர்ப்பித்தல், வரிக் கொடுப்பனவுகள், வரி மதிப்பீடுகளை வழங்குதல், இவ்வத்தியாயத்தின் நோக்கத்துக்காக விரபத்திரட்டுக்களை அல்லது தேவைப்பட்ட தகவலைச் சமர்ப்பிக்காமைக்காகத் தண்டம் விதித்தல் என்ற நோக்கத்துக்காக, இவ்வத்தியாயத்தின் வழகாட்டு ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பினதும் வேறேதேனும் கருமத்தினதும் கணக்கிடுதலின் ஒரு சீரான ஏற்புடைமையைக் கவனத்துட்கொண்டு, பின்வருவனவற்றைப் பின்பற்றுதல் வேண்டும்:-

(அ) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள்; அத்துடன்
(ஆ) இயைபான வழிகாட்டுநெறிகளைக் குறித்துரைத்து வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை.".

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஈ என்னும் பிரிவு, "ஏதேனும் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பதிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் அல்லது வேறு ஆள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவு, அதன் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "2011, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கும் காலாண்டு ஒவ்வொன்றுக்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2011, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், 2012, திசெம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலாண்டு ஒவ்வொன்றுக்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

17. இரண்டாயிரத்து பதினோராமாண்டின் 9 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஐ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்று, இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவுக்காக விண்ணப்பிக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்று, 2012, திசெம்பர் 31 ஆந் தேதிக்கு முன்னர் இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவுக்காக விண்ணப்பிக்கலாம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "காலாண்டு தொடங்கும் தேதியிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு அத்தகைய பதிவு செல்லுபடியாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "காலாண்டு தொடங்கும் தேதியிலிருந்து 2013, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலாண்டிற்கு அத்தகைய பதிவு செல்லுபடியாதல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

(இ) இவ்வத்தியாயத்தின் கீழ் பெறப்பட்ட ஏதேனும் பதிவு, 2013, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து தொடங்குகின்ற காலப்பகுதியிலிருந்து இல்லதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவரும் அல்லது பதிவு செய்யப்பட்டதும், அவரின் அல்லது அதன் மொத்த விற்பனவு வரவு ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதாய் 10ஆம் பிரிவின் கீழான பதிவுக்கான கட்டளைக்கற்களை நிறைவேற்றுகின்றவருமான அல்லது நிறைவேற்றுகின்றதுமான எவரேனுமாள் அல்லது ஏதேனும் பங்குடைமை, அதற்கிணங்கப் பதிவொன்றைப் பெறுதல் வேண்டும்.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1)ஆம் உட்பிரிவில், "(1) (1) ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலான வரி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,
"(1) ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலான வரி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-
(1அ) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எந்தப் பதிவு செய்யப்பட்ட ஆளின் வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல்கள், அத்தகைய உற்பத்தியாளரின் மூலம் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் வழங்கல் தவிர்ந்த எவையேனும் வழங்கல்களைக் கொண்டிருக்கின்றதோ அந்தப் பதிவு செய்யப்பட்ட ஆளின் விடயத்தில், 2013, சனவரி 1 ஆந் தேதியன்றுள்ள அல்லது அதன் பின்னரான ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடர்பிலான வரி -

(i) ஏதேனும் மாதத்தின் 1 ஆம் நாளிலிருந்து 15 ஆம் நாள் வரையிலான காலப்பகுதிக்காக அம்மாதத்தின் முடிவின் மீது அல்லது அதற்கு முன்னர்; அத்துடன்
(ii) 16 ஆம் நாளிலிருந்து மாதத்தின் முடிவு வரையிலான காலப்பகுதிக்காக அல்லது அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர்,
விபரத் திரட்டைச் சமர்ப்பிப்பதுடன், எவையேனும் இறுதிச் சீராக்கங்கள் எவையேனுமிருப்பின் அவற்றைச் செய்வதற்கமைய செலுத்தப்படுதல் வேண்டும்.
மேலே தரப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத ஏதேனும் வரி, தவணை தவறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரி எந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதோ அந்த ஆள் அல்லது ஏதேனும் வரி ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் செலுத்தப்படற்பாலதாகவிருக்குமிடத்து, அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தவணை தவறியவராகக் கருதப்படுதலும் வேண்டும்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(5) இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் பன்னிரெண்டுமாத காலப்பகுதிக்கு எந்த ஆளினால் கொண்டு நடாத்தப்படும் ஒவ்வொரு வியாபாரத்திலிருந்தும் அல்லது தொழிலிலிருந்துமான மொத்த விற்பனவு வரி முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாதுள்ளதோ அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்டவாறு வரி தொடர்பான ஏதேனும் சட்டத்துக்கு அவர் இணங்கியொழுகாதிருக்கின்றாரோ எவரேனுமாள், இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தாம் பதிவு

செய்யப்படவேண்டுமென வேண்டுகோள்விடுக்குமிடத்து, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் இச்சட்டத்தின் 33ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மேலேயுள்ள காலப்பகுதிக்காக அவ்வாளின் மொத்த விற்பனவு வரவு, அத்தகைய ஆள் -

(அ) அவ்வியாபாரத்திலிருந்தான அல்லது தொழிலிலிருந்தான அவரது கடந்தகால ஈட்டுகைகளை 2014, மார்ச்சு 31 ஆந் தேதிக்கு முன்னர் ஏதேனும் தொழிலில் முதலீடு செய்வதற்கும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் அடுத்துப் பின்னரான காலப்பகுதிக்காக இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கும், பொறுப்பேற்றால், வரி மதிப்பீடு செய்யப்படுதலாகாது.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்துவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 64அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

64அ. எவரேனுமாளினால் செலுத்தப்படற்பாலதான வரித் தொகையைக் குறைக்கின்ற அல்லது குறைக்கின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல் செயற்கையானதென அல்லது போலி புனையப்பட்டதென அல்லது ஏதேனும் உடைமை மாற்றத்துக்கு உண்மையில் பயன்கொடுக்கப்படவில்லையென வரி மதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய ஏதேனும் கொடுக்கல்வாங்கலை அல்லது உடைமை மாற்றத்தை புறக்கணிக்கலாமென்பதுடன், கொடுக்கல்வாங்கலுக்கான அல்லது உடைமை மாற்றத்துக்கான திறத்தவர்கள் அதற்கிணங்க வரி மதிப்பீடு செய்யப்படற்பாலராதலும் வேண்டும்.

இப்பிரிவில் "உடைமைமாற்றம்" என்பது, ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பு, மானியக்கொடை, பொருத்தனை அல்லது ஒழுங்கேற்பாடு என்பவற்றை உள்ளடக்கும்.".

21. இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 9ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆம் பிரிவு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) (அ) என்னும் பந்தியில், "பத்தாம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாம் பிரிவின் கீழ் அல்லது 25அ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அதன் (அஅ) என்னும் பந்தியை நீக்கி விடுவதன் மூலமும்;

(3) அதன் (ஆ) என்னும் பந்தியில், "19ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "19ஆம் பிரிவின் கீழ் அல்லது 25அ என்னும் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அதன் (ஊ) என்னும் பந்தியில், "21ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "21ஆம் பிரிவின் கீழ் அல்லது 25ஆ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(5) அதன் (எ) என்னும் பந்தியில், "21ஆம் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "21ஆம் பிரிவின் கீழ் அல்லது 25ஆ என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(6) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில், "வரிப்பட்டியலொன்றை வழங்குகின்ற," என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-
வரிப்பட்டியலொன்றை வழங்குகின்ற; அல்லது

(க) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அல்லது விடயத்திற்கேற்ப 2ஆம் மற்றும் 25இ என்னும் பிரிவுகளின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற; அல்லது
(ங) 25இ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வருடாந்தச் சீராக்கலொன்றைக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்ற,".

22. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை அதன் பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில்:-

(i) (viii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-
"(viii) பகுதியளவில் இழுவைக் கலன்களாகவுள்ள கமத்தொழில் உழவுயந்திரங்கள் அல்லது வீதி இழுவை வண்டிகள்";

(ii) (xxii) ஆம் விடயத்தில்:-

(அ) உபவிடயம் (i)இல், "வார்படம், (உருக்கு, கண்ணாடி, இறப்பர் அல்லது பிளாத்திக்கு)," என்னும் சொற்களுக்குப் பதிலாக "வார்படம் (உருக்கு, கண்ணாடி, கனிப்பொருள் மூலப்பொருட்கள், இறப்பர், பிளாத்திக்கு)," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) "பாவனைக்காக நெய்யப்பட்ட துணிவகைகள்;" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"பாவனைக்காக நெய்யப்பட்ட துணிவகைகள்;
(vi) பவுசர்கள், மட்டூர்திகள், சரிவுத்தளப் பிரிப்பூர்திகள், மட்டப்படுத்து மூர்திகள், அகழ்பொறிகள், தீயணைப்பு வாகனங்கள்;
(vii) வலுச் சேமிப்பு குமிழ்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்கள்;".

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில்:-

(i) (ii) ஆம் விடயத்தின் (ஆ) என்னும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில், "அல்லது மோட்டார் கோச்சுக்கள்."; என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

அல்லது மோட்டார் கோச்சுக்கள்;

(iii) 2013, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கொடுப்பனவுக்காக வருமதியாக வரும் ஏதேனும் வாடகை தொடர்பில் ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன் கீழ் சுங்க நோக்கங்களுக்காக விலக்களிக்கப்பட்ட பவுசர்கள், மட்டூர்திகள், சரிவுத்தளப் பிரிப்பூர்திகள், மட்டப்படுத்து மூர்திகள், அகழ்பொறிகள், தீயணைப்பு வாகனங்கள் அல்லது பகுதியளவில் இழுவைக்கலன்களாகவுள்ள வீதி இழுவை வண்டிகள்;".

(ii) (xx) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xx) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் அல்லது தேங்காய் தூள் நிலக்கரி, நார்த்தும்பு, வளர் பெலெட்டுக்கள், வளர் பைகள், தெங்குக் கழிவுப் பொருளிலிருந்து தயாரிக்கப்பட்ட குறுக்குத் தும்பு அல்லது தெங்கு உமி

(iii) (xLiii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xLiii) அத்தகைய சேவைகள் அத்தகைய தயாரிப்புகளின் ஏற்றுமதியாளர்கள் அல்லாத ஆட்களுக்கு வழங்கப்படும் அளவுக்கு, ஏதேனும் நூலின், எவையேனும் துணி வகைகளின் அல்லது தைத்த ஆடைகளின் தரம், தன்மை அல்லது பெறுமதி என்பவற்றிலான சீராக்கத்தை விளைவிக்கும் சேவைகள்.".

(iv) (xLiv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xLv) அத்தகைய சேவைகள் ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்கப்படும் அறைக்கு, ஒரு கூறு நம்பிக்கை முகாமைக் கம்பெனியிலான சேவைகள்;

(xLvi) விளையாட்டுக்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியில் அல்லது விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட செயற்பாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு வருகின்ற எவரேனும் ஆட்டக்காரருக்கு, ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துபவருக்கு அல்லது ஆதரவாளருக்கு ஹோட்டல் இடவசதியாகவுள்ள சேவைகள்.".

(3) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில்:-

(i) (xxvii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xxvii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவையும், அத்தகைய மருந்தாக்கங்களை அல்லது ஆயுர்வேத மருந்துகளைப் பொதியிடுவதற்கும் புறநீங்கலாகப் பயன்படுத்துவதற்கு, மருந்தாக்கங்களின் அல்லது ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்தியாளரினால் இறக்குமதி செய்யப்பட்டவையுமான இந்நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப சுகாதாரம் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் அல்லது ஆயுர்வேதத் திணைக்களத்தின் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு அத்தகைய பொதியிடும் பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத அளவுக்கு, அப்பொதியிடும் பொருட்கள்."

(ii) (xxxvi) ஆம் விடயத்தில், "இறக்குமதி மீது கிலோகிராமொன்றுக்கு எழுபத்தைந்து ரூபா என்ற சுங்கத்தீர்வை விதிக்கப்படுவதற்கமைய," என்னும் சொற்களுக்குப் பதிலாக "முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஆ) என்னும் பந்தியின் (xxxvii) ஆம் விடயத்தில் (ii) ஆம் உப விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிப்பிட்ட வீதத்திலான சுங்கத்தீர்வை விதிக்கப்படுவதற்கமைய" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

(iii) அப்பந்தியின் (xxxvi) ஆம் விடயத்திதை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xxxviii) இயைபான அமைச்சுக்கான செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, அத்தகைய சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கத்துக்காக, சாக்கடை பவுசர்கள், வீதி இழுவை வண்டிகளுக்கான பகுதியளவிலான இழுவைக்கலன்கள், ஏதேனும் உள்ளூரதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்ட குப்பைகூளம் அகற்றுதற் செயற்பாடுகளுக்காகப் பயன்படுதப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதி அல்லது சாதனம்.".

(4) அப்பாகத்தின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் -

"(ஐ) (422ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பண்டங்கள் அல்லது சேவைகள்;

(ஒ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகளிலிருந்து அல்லது அரசாங்கத்தினூடாக ஒழுங்கேற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து, கட்டணமின்றி இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அத்தகைய சேவைகளை வழங்கும் அளவுக்கு, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் எவையேனும் சேவைகள்.

(ஓ) வெளிநாட்டுத் தொழிலிலிருந்து திரும்பிய பின்னர் ஏதேனும் மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்பாகவிராத ஏதேனும் பொருளை உற்பத்தி செய்தல் அல்லது எவையேனும் சேவைகளை வழங்குதல் என்ற ஏதேனும் தொழிலை, அத்தகைய வியாபாரம் அல்லது தொழில் எந்த வரி மதிப்பீட்டாண்டில் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து கணக்கிடப்படும் ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குக் கொண்டு நடாத்துகின்ற எவரேனும் இலங்கைப் பிரசையொருவரான தனியாளினால், அத்தகைய தனியாள் -

(i) 2013, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய வெளிநாட்டுத் தொழிலிலிருந்து திரும்பினால்; அத்துடன்

(ii) அத்தகைய தொழிலைத் தொடங்குவதற்கு அத்தகைய வெளிநாட்டுத் தொழிலிலிருந்தான அவருடைய ஈட்டுகைகளை முதலீடு செய்தால்,

வழங்கப்படும் பண்டங்கள் அல்லது சேவைகள்."

23. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதியின் போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கின்ற எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரிச் சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும் :

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய காலப்பகுதியின் போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக ஏதேனும் சேகரிக்கப்பட்ட வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

24. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. (1) இச்சட்டம், 2013ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்:
ஆயின், எவ்வாறாயினும் -

(அ) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16இ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள்;
(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 8ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள்; அத்துடன
(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவிற்கு இச்சட்டத்தின் 10 (4)ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள்,

எல்லா நோக்கங்களுக்காகவும் 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்-

(அ) உட்பந்தி (lxii) என்பதில் "சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;
(ஆ) உட்பந்தி (lxiii) என்பதில் "தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நிதியம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நிதியம்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்
(இ) உட்பந்தி (lxiii) என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(lxiv) 1974ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, இலங்கைப் பொது மருத்துவத் தொழில் புரியுநர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொது மருத்துவர் தொழில் புரியுநர் கழகம்;

(lxv) 1996ஆம் ஆண்டின் 17ஆம்இலக்க, இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை;

(lxvi) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து அல்லது பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட நிதியத்திலிருந்து, கட்டணமின்றி ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகளின் அளவுக்கு ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம்;

(lxvii) தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் (NDTF) ஒன்றிணைக்கப்பட்ட 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி;

(lxviii) 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி; அத்துடன்

(lxix) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது அல்லாததான கல்வி அமைச்சுடன் பதிவு செய்யப்பட்ட, கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அரசாங்கப் பாடவிதானத்தையும் மற்றும் அத்தகைய அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளையும் பின்பற்றுவதற்குப் பணிப்பாணை பெற்றுள்ளதுமான அரசாங்க உதவி பெறும் ஏதேனும் தனியார் பாடசாலை.".

(2) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் "பங்கிலாபமாகச் செலுத்தப்பட்டிருப்பின்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பங்கிலாபமாகச் செலுத்தப்பட்டிருப்பின்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஔ) 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் இலாபங்களும் வருமானமும்.".

3. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஈஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-
"(ஈஈஈ) அப்பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்கென விடயத்திற்கேற்ப 17அ அல்லது 16ஈ என்னும் பிரிவின் கீழ் அதன் வரி விடுமுறைக் காலப்பகுதியின் போது, இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதும் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடாக 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான முதலீட்டை 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துள்ளதுமான ஒரு பொறுப்பு முயற்சியாகவுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சியால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கையில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள நிபுணர் ஒருவராகவிருக்கும் இலங்கைப் பிரசையொருவர் அல்லாதவரான தனியாளொருவருக்கு இலங்கையில் எழுகின்ற வேதனாதிகள், இலங்கையில் அவரால் ஆற்றப்படும் சேவை அத்தியாவசியமானது எனவும் மற்றும் அத்தகைய சேவையை இலங்கையில் பெறமுடியாதுள்ளது எனவும் இலங்கை முதலீட்டுச் சபையால் உறுதிப் படுத்தப்படின்;

ஆயினும், இந்த ஏற்பாடு பொறுப்பு முயற்சியொன்றிலுள்ள எந்த நிபுணர்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ, அந்த நிபுணர்களின் எண்ணிக்கை ஐந்தினை விஞ்சுதலாகாது.
இப்பந்தியின் நோக்கத்திற்கு "நிபுணர்" என்பது இலங்கைப் பிரசைகளிடையே எந்தத் துறையில் போதிய நிபுணத்துவம் கிடைக்கப்படற்பாலாக விருக்கவில்லையோ அந்தத் துறையாக இருக்கின்றதென இலங்கை முதலீட்டுச் சபையால் செய்யப்பட்ட

விதப்புரையின் மீது ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய துறையில் நிபுணத்துவம் கொண்ட தனியாளொருவர் எனப் பொருள்படும்;";

(2) அவ்வுட்பிரிவின் (ந) என்பதில், "ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து; அப்போது-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2013 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து, அப்போது-" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (ய) என்னும் பந்தியில் "ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2013, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

4. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅ) இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தில் அல்லது முறியில் 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலிருந்து செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு அல்லது வேறு ஆட்களின் குழுமத்திற்குத் திரளும் வட்டி;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (ங) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-
"(ச) 2013 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்-

(i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் விலைகோரிப் பெறப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்புத் தனிசுப் பிணையத்தில்; அத்துடன்

(ii) நிதியமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் மாநகரசபையால் வழங்கப்பட்ட ஏதேனும் மாநகர முறியில்,

செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து எவரேனும் ஆளுக்குத் திரளுகின்ற அல்லது எழுகின்ற வட்டி அல்லது தள்ளுபடி.".

5. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஆஆஆ) பண்டங்களை ஒரு நாட்டிலிருந்து பெற்று அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்து, இலங்கையைத் தவிர, வேறோர் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் ஏதேனும் தொழில் தொடர்பில் 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளினால் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும்;";

(2) அப்பிரிவின் (ஈஈஈஈஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈஈஈஈஈஈ) இலங்கைப் பிரசையொருவரான எவரேனும் வதிவுள்ள தனியாளினால் இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும், அத்தகைய இலாபங்களும் வருமானமும் (நியாயமான செலவினங்களாக இருக்கக்கூடியதென ஆணையாளர் தலைமையதிபதியால் கருதப்பட்டவாறு இலங்கைக்கு வெளியில் செலவிடப்பட்ட அத்தகைய தொகை, ஏதேனுமிருப்பின், அதனைக் கழித்து) வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படின்;";

(3) அப்பிரிவின் (ரரரரரர) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ரரரரரரர) 2013, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் -

(i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் விலைகோரிப் பெறப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்புத் தனிசுப் பிணையத்தில்;

(ii) நிதியமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் மாநகர சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் மாநகர முறியில்,

செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்தான எவையேனும் இலாபங்கள் அல்லது வருமானம்;

(ரரரரரரரர) இலங்கைக்கு வெளியேயிருந்து திரட்டப்பட்ட நிதிகளிலிருந்து சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள், பெருந்தோட்டங்கள், நிர்மாணத்தொழில் அல்லது வேறு உற்பத்தி செய்கின்ற தொழிலுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட பணங்களிலிருந்து, 1955ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட டி.எவ்.சி.சி. வங்கியினாலும், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி. இனாலும் ஈட்டப்பட்ட வட்டி,";

(4) அப்பிரிவின் (வவவவவவ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-
(வவவவவவவ) இலங்கைக்கு வெளியே திரட்டப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டிலிருந்து இலங்கையில் செய்யப்பட்ட முதலீடு 50 மில்லியன் அமெரிக்க டொலரை விஞ்சுமிடத்தும் அத்துடன் அத்தகைய சேவைகள் இலங்கையில் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தியாவசியமானவை எனவும் இலங்கையில் பெறமுடியாதுள்ளவை எனவும் முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியால் கருதப்படுமாயின், விடயத்திற்கேற்ப, 17அ அல்லது 16ஈ என்னும் பிரிவின் கீழ் வரி விடுமுறைக் காலப்பகுதியின் போது, முதலீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றிடமிருந்து எவரேனும் வெளிநாட்டுக் கூட்டிணைப்பாளரால் பெறப்பட்ட வடிவமைப்பிற்கான ஏதேனும் அரசுரிமைத் தொகை, புனைவுரிமைத் தொகை அல்லது ஏதேனும் கொடுப்பனவு;

(5) அப்பிரிவின் (வவவவவவ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(வவவவவவவ) இலங்கைக்குப் பிரசையாகவுள்ளவரும், வெளிநாட்டில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவருமான தனியாளொருவர் 2013, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் நாட்டுக்குத் திரும்பி, வெளிநாட்டு ஊழியத்திலிருந்தான அவரது ஈட்டுகளை, மதுபான அல்லது புகையிலைத் தயாரிப்புகள் தவிர்ந்த ஏதேனும் பொருளை உற்பத்தி செய்யும் அல்லது ஏதேனும் சேவையை வழங்குகின்ற ஏதேனும் தொழிலைத் தொடங்குவதில் முதலீடு செய்யுமிடத்து,

அத்தகைய தொழிலின் வர்த்தகத் தொழிற்பாடுகள் எந்த வரி மதிப்பீட்டாண்டில் தொடங்குகின்றனவோ அந்த வரி மதிப்பீட்டாண்டின் தொடக்கத்திலிருந்து தொடங்குகின்ற ஐந்தாண்டு காலப்பகுதிக்கு அத்தகைய தொழிலிருந்தான அத்தகைய ஆளின் இலாபங்களும் வருமானமும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு "காலத்தின் போதும் இலங்கையினதும் வேறேதேனும் நாட்டினதும் பிரசையொருவராகவிருப்பின் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"காலத்தின் போதும் -

(i) அத்தகைய தனியாள் இலங்கை மற்றும் வேறு ஏதேனும் நாடு ஆகிய இரண்டினதும் பிரசையாகவிருக்குமிடத்து, 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக;

(ii) அத்தகைய தனியாள் இலங்கை பிரசையாகவும்; அத்துடன்

(அ) வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவும் இருக்குமிடத்து; அல்லது
(ஆ) வேறு ஏதேனும் நாட்டில், அத்தகைய ஆள் அத்தகைய நாட்டின் பிரசாவுரிமையைப் பெறுவதற்கு அவரை இயலச் செய்யக்கூடிய நிரந்தர வதிவிட அந்தஸ்தை அல்லது அதைப் போன்ற வேறு அந்தஸ்தைப் பெற்றுள்ளவராகவும் இருக்குமிடத்து,

2013 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்காக,
வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.".

7. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ என்னும் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அட்டவணையின் I ஆம் நிரையில் "உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாடு ஆனால் கமத்தொழில் தொடர்பான சேவைகள் உள்ளடக்கப்படாமல் (உற்பத்தியில் 50% வீதத்திற்கு மேல் உள்ளூர் சந்தையில் விற்கப்படவிருப்பின், உற்பத்திப்பொருட்கள் குறைந்தபட்சம் 35% சேர்பெறுதியுடன் இருத்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும், பதிலாக, "உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாடு.

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்யுமிடத்து, அத்தகைய பொருளின் உற்பத்தியின் 50% வீதத்திற்கு மேல் உள்ளூர் சந்தையில் விற்கப்படவிருப்பின், அத்தகைய பொருள் குறைந்தபட்சம் 35% பெறுமதி சேர்க்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(i) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அந்தப் பொறுப்பு முயற்சியும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அந்தப் பொறுப்பு முயற்சியும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "தொடங்கும் பொறுப்பு முயற்சியும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொடங்கும் பொறுப்பு முயற்சியும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈ) முன்னர் உள்ளதாகவிருக்கின்ற ஏதேனும் தொழிலின் பிரித்தலின் அல்லது மீள்நிர்மாணத்தின் அல்லது கொள்ளலின் மூலம் உருவாக்கப்பட்டதாக இல்லாததும்;"

8. 2012 ஆம் ஆண்டு 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஈ என்னும் பிரிவானது, "ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்தாண்டுகளைக் கொண்ட வொருகாலப் பகுதிக்கு, அத்தகைய பொறுப்பு முயற்சியானது முன்னதாக இருக்கின்றதான ஏதேனும் வியாபாரத்தின் பிரித்தலின், மீள் நிர்மாணத்தின் அல்லது கொள்ளுதலின் மூலம் உருவாக்கப்பட்டதாக இல்லாததாகவிருப்பின், விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "முதலீடு" என்பது ஏதேனும் காணியின், பொறித்தொகுதியின், இயந்திரத்தொகுதியின் உபகரணத்தின் மற்றும் வேறு நிலையான சொத்துக்களின் ஆகுசெலவு எனப் பொருள்படும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 உ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 16 ஊ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

16ஊ. எவரேனுமாளின் அல்லது பங்காண்மையின் 3ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட பின்வருவனவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் (ஏதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்த்தலிலிருந்தான ஏதேனும் இலாபங்களும் வருமானமும் தவிர) 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடக்கம்-

(i) பத்து ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் ஏதேனும் மீளப்புதுப்பிக்கப்படற்பாலதான வலுவூட்டும் பயிர்களை பயிர்செய்கின்ற ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்தான இலாபங்களும் வருமானமும்;

(ii) சேதன உரங்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலுடன் தொடர்புபட்ட எல்லா கொடுக்கல்வாங்கல்களிலிருந்தான இலாபங்களும், வருமானமும்,

வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

10. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (ii)என்னும் உட்பந்தியில் "தைத்த ஆடைகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தைத்த ஆடைகள் மற்றும் புடைவைகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (xxvii) என்னும் உபபந்தியில் "வேறு ஏதேனும் செயற்பாடு; அத்துடன்" என்னும் சொற்களுக்குப்

பதிலாகப் "வேறு ஏதேனும் செயற்பாடு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அதற்குப் பின்னர் தொடங்குகின்றதுமான ஏதேனும் பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்குப் பின்னர் தொடங்குகின்றதுமான; அத்துடன்

"(இ) ஏலவேயிருந்த ஏதேனும் தொழிலின் பிரித்தலின் அல்லது மீள்நிர்மாணத்தின் அல்லது கொள்ளுதலின் மூலம் உருவாக்கப்படாததாகவிருக்கின்றதுமான,

ஏதேனும் பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-
இப்பிரிவின் நோக்கத்திற்காக, "முதலீடு" என்பது ஏதேனும் காணியின், பொறியின், பொறித் தொகுதியின், இயந்திரத்தொகுதியின், உபகரணத்தின் மற்றும் வேறு நிலையான சொத்துக்களின் ஆகுசெலவு எனப் பொருள்படும்.".

11. 2012 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ஈ) என்னும் பந்தியில், "கொள்ளப்படுமிடத்து, வீதமானது கொள்ளலின் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்" என்னும் சொற்களுகப் பதிலாக, "கொள்ளப்படுமிடத்து, வீதமானது கொள்ளற் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்:

ஆயின், 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் வர்த்தகத்தால் அல்லது தொழிலால் அத்தகைய உயர் தொழினுட்பப் பொறித் தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது உபகரணம் கொள்ளப்பட்டும் அத்துடன் அந்த வர்த்தகத்தின் அல்லது தொழிலின் மின்பிறப்பாக்கத்தின் மொத்தத் தேவைப்பாட்டின் முப்பது சதவீதத்திற்கு மேல் மாற்றுவலு வளங்களிலிருந்து பெறுமாறும் பயன்படுத்தப்பட்டுமிருப்பின், வீதமானது கொள்ளற் செலவின் நூறுசதவீதமாதல் வேண்டும்.

இக்காப்பு வாசகத்தின் நோக்கத்திற்காக "மாற்று வலுவளங்கள்" என்பது மின்சாரத்தைப் பிறப்பிக்கும் தேசிய நெய்யரி தவிர்ந்த வேறு ஏதேனும் வளங்கள் எனப் பொருள்படும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

(உ) தொழில்நுட்பத் தரஉயர்வு நோக்கத்துக்கு அல்லது ஏதேனும் புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு 2013, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் பொறித் தொகுதி, இயந்திரத் தொகுதி அல்லது உபகரணம் ஏதேனும் தொழிலில் கொள்ளப்பட்டும் பயன்படுத்தப்படுமிடத்தும் வீதமானது கொள்ளற் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்;

(ஊ) முகாமைத்துவ முறைமை இடர் தொடர்பில், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கென தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பின் தரம் உயர்த்தலுக்காக ஏதேனும் பங்குதரகர் கம்பெனியில் ஏதேனும் பொறித் தொகுதி, இயந்திரத் தொகுதி அல்லது உபகரணம் 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்படுமிடத்து, வீதமானது கொள்ளற் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்;

(எ) ஏற்றுமதியிலிருந்து அத்தகைய வர்த்தகத்தின் அல்லது தொழிலின் மொத்த விற்பனை வரவு ஆகக்குறைந்தது 60 சதவீதமாக இருக்குமிடத்தும் அத்துடன் ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது தொழிலில் ஏதேனும் பொறித் தொகுதி, இயந்திரத் தொகுதி அல்லது உபகரணம் 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதி அன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டும் பயன்படுத்தப்படுமிடத்தும், வீதமானது கொள்ளற் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், "சதவீதத்திற்குச் சமமானதொரு தொகை:" என்னும் சொற்கள் தொடக்கம், "முந்நூறு சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றாதல் வேண்டும்;" என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்:-

"ஆயின்,

(அ) அத்தகைய ஆராய்ச்சி, ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டும் 2012, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் உறப்பட்டிருக்குமிடத்தும்;

(ஆ) அத்தகைய ஆராய்ச்சி, இலங்கையிலுள்ள ஏதேனும் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்டதாக இருக்குமிடத்தும்,

அத்தகைய ஆளினால் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் முந்நூறு சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றாதல் வேண்டும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-
(ப) அரசாங்கத்துக்கு விசேட அறவீடொன்றாக பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பு முயற்சியினால் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை.".

12. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ம) என்னும் பந்தியில், "விளம்பரச் செலவு தவிர" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விளம்பரச் செலவு அல்லது விளையாட்டுகள் என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டதோ அவ்வமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளின் அனுசரணையின் மீது 2012, ஓகத்து 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட விளம்பரச் செலவு தவிர," என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

13. 2012 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

(ப) 4 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்கள் தவிர்ந்த இலங்கையில் வதிவுள்ள எவரேனும் தனியாளின் தொழிலில் இருந்தான இலாபங்களானவை 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அதன் பின்னர் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டுக்கு ஐந்நூறாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து அப்போது,

(i) ஐந்து லட்சம் ரூபாவிற்கு மேலதிகமாகவுள்ள அத்தகைய இலாபங்களின் அத்தகைய பாகம்; அல்லது
(ii) ஓர் இலட்சம் ரூபா,

இவற்றுள் எந்தத்தொகை குறைவானதோ அந்தத் தொகை;

(ம) இலங்கைப் பிரசையல்லாத ஒருவரும் இலங்கையில் வதிவில்லாதவருமான எவரேனும் தனியாளுக்கு இலங்கையில் எழுகின்ற 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான உத்தியோகபூர்வ வேதனாதிகளின் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்" அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில், "இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ), (இ), (உ), (எ), (எஎ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ங), (ச), (ட), (ண), (த) மற்றும் (ந) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவற்றைத் தவிர" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களும் பதிலாக, "இரண்டாம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ), (இ), (உ), (எ), (எஎ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ங), (ச), (ட), (ண), (த), (ந), (ப) மற்றும் (ம) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவற்றைத் தவிர" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

14. 2009 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவு, "20 சதவீதத்தை" என்னும் சொற்கள் அப்பிரிவில் எங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக, "பதினாறு சதவீதத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

15. 2009 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவு, "இருபது சதவீதத்தை" என்னும் சொற்கள் அப்பிரிவில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அதற்குப் பதிலாக, "பதினாறு சதவீதத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

16. முதன்மைச் சட்டவாக்கத்தில் 46ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அந்த சட்டவாக்கத்தின் 46அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

46அ. பிரிவு 3இன் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக எவரேனும் ஆளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் (ஏதேனும் மூலதனச் சொத்தினைக் கையுதிர்ப்பதிலிருந்து பெறும் ஏதேனும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் தவிர) கோழிப் பண்ணையிலிருந்தான, எவையேனும் இலாபங்கள் மற்றும் வருமானத்தினை உள்ளடக்கியிருப்பின், அவ்வாறு உள்ளடக்கப்பட்ட அத்தகைய வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பகுதி, இப்பிரிவின் வேறு ஏற்பாடுகளில் முரணானதாக எது எவ்வாறாறிருப்பினும் இச்சட்டத்திற்கான ஐந்தாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டதோதான வீதத்தில் வருமான வரி அறிவிடப்படற்பாலதாதல் வேண்டும்.
இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "கோழிப் பண்ணையிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம்" என்பது அத்தகைய ஆளினால் ஏதேனும் உற்பத்தி அல்லது தயாரிப்புச் செயன்முறைக்குட்படுத்தப்படாத வகையில் செய்யப்பட்ட உற்பத்தியின் விற்பனையிலிருந்து பெறப்படும் அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் எனப் பொருள்படும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஆ என்னும் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 48இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

48இ. 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் பொறுப்பு முயற்சி வரிச் சலுகைகளுக்கு ஏற்பாடு செய்கின்ற உடன்படிக்கையொன்றை இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொண்டுள்ளவிடத்தும் அத்துடன் அதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் அத்தகைய உடன்படிக்கையின் கீழான வரி விதிப்பானது, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான வரி விதிப்பனவை விடவும் அதிக சுமையுள்ளதாக இருக்கின்றவிடத்தும், அத்தகைய வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னரான அத்தகைய பொறுப்பு முயற்சியின் இலாபங்கள் மற்றும் வருமானம் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும், ஆயின் அத்தகைய பொறுப்பு முயற்சியானது அத்தகைய உடன்படிக்கை தொடர்பில் ஏதேனும் குறைநிரப்பு உடன்படிக்கை ஊடாக ஏதேனும் மேலதிக வரிச் சலுகையை நாடுதல் ஆகாது.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பதினைந்து சதவீதப்படி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பன்னிரெண்டு சதவீதப்படி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்
(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "பதினைந்து சதவீதத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, அவ்வுட் பிரிவில் அத்தகைய சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம், "பன்னிரெண்டு சதவீதத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தில் 56ஆம் பிரிவினை உடனடுத்த பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை அந்த சட்டவாக்கத்தின் 56அ, 56ஆ, 56இ மற்றும் 56ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

56அ. 1978ஆம் அண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கம்பனியொன்றின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பகுதி 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியில் அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, இறக்குமதி மாற்றீடு என்ற வகையில் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவு வரை-

(அ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ள 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அல்லது இந்த சட்டத்தின் 16இ, 16ஈ அல்லது 17அ என்னும் பிரிவின் கீழ் வரி விடுமுறையினை அனுபவிக்கின்றதும் மற்றும் அதன் கருத்திட்ட செயற்படுத்துகைக் காலப்பகுதியின் போது அத்தகைய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் தீர்வையற்ற அடிப்படையில் கருத்திட்டத்துடன் தொடர்புடைய பண்டங்களை அல்லது மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் கம்பனிக்கு; அல்லது
(ஆ) ஏதேனும் அரசாங்க அதிகாரத்தின் கீழ் தீர்வையற்ற அடிப்படையில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு தகைமைபெறும் எவரேனும் ஆளுக்கு,

இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏற்றுமதியிலிருந்தான இலாபங்களாகவும், வருமானமாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டதோதான விதத்தில் வருமான வரி அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

56ஆ. வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்காக வெளிநாட்டுக் கப்பல்களுக்கு இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பண்டங்களை

வழங்குவதிலிருந்து அல்லது சேவைகளை ஏற்பாடு செய்வதிலிருந்து 2013, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கான, எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகமானது, இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் ஏற்றுமதியிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டதோதான வீதத்தில் வருமான வரி அறிவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

56இ. இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய ஈட்டற் கணக்கின் ஊடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்காக இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் விற்பனையிலிருந்து 2013, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கான எவரேனுமாளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம், இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் ஏற்றுமதியிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதோதான வீதத்தில் வருமான வரி அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

56ஈ. 2013, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, அதன் தயாரிப்புகளில் அறுபது சதவீதத்துக்குக் குறையாதவற்றை ஏற்றுமதி செய்கின்றதான ஏதேனும் ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கம்பெனியினால், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தைத்த ஆடைகள், நெய்யப்பட்ட துணிவகைகளினால் தயாரிக்கப்பட்ட பைகள், நார்ப்பட்டு, திரைச்சீலைகள் அல்லது வேறெவையேனும் பண்டங்கள் என்பவற்றை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதிலிருந்தான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகத்துக்குப் பன்னிரெண்டு சதவீதத்திலான வருமான வரி விதிக்கப்படற்பாதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், விடயத்துக்கேற்ப, அத்தகைய தைத்த ஆடைகளின், பைகளின், நார்ப்பட்டின், திரைச் சீலைகளின் அல்லது வேறு பண்டங்களின் உள்நாட்டுப் பெறுமதி சேர்ப்பானது, இலங்கை வணிகப் பெயரை அறுபத்தைந்து சதவீதத்துக்கு அதிகமாகக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய தைத்த ஆடைகள், பைகள், நார்ப்பட்டு, திரைச்சீலைகள் அல்லது வேறு பண்டங்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து அத்தகைய ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கம்பெனியின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகத்துக்குப் பத்து சதவீதத்திலான வருமான வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.".

20. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

"(ஆ) (ஏதேனும் மூலதனச் சொத்தின் விற்பனை தவிர்ந்த) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய பொறுப்பு முயற்சியின் மொத்த விற்பனை வரவு-

(i) 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரி மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பொறுப்பு முயற்சியின் மொத்த விற்பனை வரவு முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததாகவுள்ள;

(ii) 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு ஐந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததாகவுள்ள,"; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலமும்:-

"குறித்த சில தொகையை விஞ்சாத வருடாந்த மொத்த விற்பனை வரவுடனான ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்தான எவரேனும் ஆளின் இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் ஏற்புடையற்பாலதான வருமான வரியின் வீதம்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் முறையே 59ஈ மற்றும் 59உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

59ஈ. (1) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் 2013, ஏப்றல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2014 ஏப்றல் 1ஆம் திகதிக்கு முன்னர் பொதுமக்களுக்கு அதன் பங்கில் இருபது சதவீதத்தினை விட குறையாதவற்றை தொடக்க பகிரங்க கொடை முனைவு என்றவாறு வழங்கியுள்ளதுடன் தனது பங்குகளை நிரல்படுத்தியதும் மற்றும் ஏதேனும் கம்பெனியின், 3ஆம் பிரிவின் (அ) பந்தியின் கருத்துக்கமைவான (ஏதேனும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான ஏதேனும் இலாபங்கள் மற்றும் வருமானம் தவிர) இலாபங்கள் மற்றும் வருமானம் மீது ஏற்புடையதான வரி வீதம், அத்தகைய கம்பனி நிரல்படுத்தப்பட்டதன் பின்னர் பொதுமக்களினால் அதன் பங்குகள் வைத்திருக்கப்படுவது இருபது சதவீதத்திற்கு குறையாமல் தொடர்ந்தும் பேணப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனைக்கமைவாக, அத்தகைய பங்குகள் நிரல்படுத்தப்பட்ட வரி மதிப்பீட்டாண்டுக்கும் மற்றும் அந்த வரி மதிப்பீட்டாண்டினை உடனடுத்துறும் மேலும் இரண்டு வரி மதிப்பீட்டாண்டுகளுக்கும் ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனி அதன் பங்குகளை நிரல்படுத்தியதின் பின்னர் வரும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் வரி மதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட பங்குகளை இருபது சதவீதத்திற்குக் குறையாமற் பேணுவதற்குத் தவறும் போது, உட்பிரிவு (1) இன் கீழ் குறைக்கப்பட்ட வரியானது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் மீள்வரி மதிப்பீடு செய்யற்படற்பாலதாதல், கொடுபடற்பாலதாதல் மற்றும் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக நிரல்படுத்தப்பட்ட கம்பனியொன்று தொடர்பில், "பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட பங்குகள்" என்பது-

(அ) அதன் தாய், துணை அல்லது இணைந்த கம்பனிகள் அல்லது அதன் தாய்க் கம்பெனியின் எவையேனும் துணைக் கம்பெனிகள் அல்லது இணைந்த கம்பெனிகள்;

(ஆ) அத்தகைய கம்பனியின் பணிப்பாளர்களாக பதவி வகிக்கும் அதன் பணிப்பாளர்கள், அவர்களது வாழ்க்கைத்துணை மற்றும் 18 வயதைவிடக் குறைந்த பிள்ளைகள்;

(இ) அதன் பிரதான நிறைவேற்று அலுவலர், அவரது வாழ்க்கைத்துணை மற்றும் 18 வயதை விடக் குறைந்த பிள்ளைகள்; அத்துடன்

(ஈ) அத்தகைய கம்பனியின் பங்குகளில் பத்து சதவீதத்தை அல்லது அதற்கு அதிகமானவற்றினை வைத்திருக்கும் எவரேனும் தனியான,

பங்காளர், என்பவர்களில் நேரடியாக அல்லது நேரடியல்லாது வைத்திருக்கப்படுகின்ற பங்குகள் தவிர்ந்த எவரேனும் ஆளினால்

வைத்திருக்கப்பட்ட அத்தகைய கம்பனிகளின் பங்குகள் எனப் பொருள்படும்.

59உ. ஏதேனும் சிறிய நீர் மின் உற்பத்திக் கருத்திட்டம் உள்ளடங்களாக ஏதேனும் மாற்று வலு உற்பத்திக்கான ஏதேனும் கருத்திட்டத்தை தொழிற்படுத்துவதிலிருந்து எவரேனும் ஆள் அல்லது பங்காண்மையின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகமானது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட தோதான வீதத்தில் வரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "சிறிய நீர் மின் உற்பத்திக் கருத்திட்டம்" என்பது பத்து மெகா வாற்றுக்களுக்கு குறைவான மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் ஏதேனும் நீர் மின் கருத்திட்டம் எனப் பொருள்படும்.".

22. 2009ஆம் ஆண்டின் 19ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 60ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) என்னும் உட்பந்தியில், "தொகையான கருந்தேயிலை, கிறேப் றப்பர்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு சிப்பமும் அல்லது பொதியும் ஒரு கிலோ கிராமுக்கு மேற்பட்ட எடையினையுடைய சிப்பங்களின் அல்லது பொதிகளின் வடிவில் இல்லாததான கருந்தேயிலை, கிறேப் இறப்பர்," என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) "16 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விளைபொருட்கள் எனப் பொருள்படும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆனால், தொகையான தேயிலை உள்ளடங்கலாக 16 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு எவையேனும் விளைபொருட்கள் எனப் பொருள்படும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

23. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "வேறு வருமானத்தினதும் கூட்டுமொத்தத்தின் மீதும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறு வருமானத்தினதும் கூட்டு மொத்தத்தின் மீதும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, 76ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிபடற்பாலதான இலாபங்களினதும் அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டு மொத்தத்தின் ஆறு இலட்சம் ரூபாவுக்குக் கூடிய மிகை, எதுவுமிருப்பின், அத்தகைய மிகையின் மீதும்; அத்துடன்

(இ) 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு 76ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிபடற்பாலதான இலாபங்களினதும் அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டுமொத்தத்தின் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் கூடிய மிகை, எதுவுமிருப்பின், அத்தகைய மிகையின் மீதும்,";

24. 2008ஆம் ஆண்டில் 9ஆம் இலக்க சட்டத்தின் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அத்தகைய இல்லாமை ஆரம்பிக்கின்ற மதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக 2013, ஏப்பிறல் 1 அந் தேதிக்கு முன்னரான வரி மதிப்பீட்டாண்டொன்றாக இருக்கின்ற அத்தகைய இல்லாமை ஆரம்பிக்கின்ற வரி மதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "கூட்டு மொத்தமாக முப்பது நாட்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டொன்றுக்காக கூட்டு மொத்தமாக முப்பது நாட்களை" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

25. 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 104ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல்வாங்கலிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் சர்வதேசக் கொடுக்கல்வாங்கலிலிருந்து" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களும், வருமானமும் அல்லது நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு ஆய்ந்தறியப்படவில்லையென வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்குத் தோன்றுமிடத்து, அவர் அத்தகைய சர்வதேசக் கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கணக்கிடுவதை கைமாற்றல் விலையிடுதல் அலுவலரொருவருக்கு ஆற்றுப்படுத்தலாம். கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுள் ஒன்றை அல்லது அவை இரண்டையும் கொண்டு நடாத்துகின்ற ஆளுக்கு முகவரியிடப்பட்ட எழுத்தில், விடயத்திற்கேற்ப, அத்தகைய இலாபங்களும் வருமானமும் அல்லது அத்தகைய நட்டம் உண்மையில் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்தில் கொண்டுதான் ஆய்ந்தறியப்பட்டுள்ளது என்பதை கைமாற்றல் விலையிடுதல் அலுவலரின் திருப்திக்கு எண்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய ஆள் அவ்வாறு எண்பிக்கத் தவறுமிடத்து, கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை தீர்மானிக்கலாம் என்பதுடன், அதனை வரிமதிப்பீட்டாளருக்கு அறிவிக்கலாம். அதன் மேல் வரிமதிப்பீட்டாளர் விடயத்திற்கேற்ப, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் அல்லது நட்டத்தின் தொகையை மதிப்பீடு செய்யலாம் என்பதுடன், அதற்கிணங்க வரி மதிப்பீடொன்றையும் செய்யலாம்.";

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3அ) விதித்துரைக்கப்பட்ட முறையொன்றின் அடிப்படையின் மீது இப்பிரிவின் நோக்கங்களுக்காக கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் எவரேனுமாளுக்கும் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் இடையில் முற்பண விலை உடன்படிக்கையொன்று செய்யப்படலாம்.";

(4) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “ஒரு விலை என்று பொருளாகும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஒரு விலை என்று பொருளாகும்;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

“சர்வதேசக் கொடுக்கல்வாங்கல்” என்பது, அவற்றில் ஒன்றோ அல்லது அவை இரண்டுமோ வதிவற்றவர்களாகவிருக்கின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான ஏதேனும் பரஸ்பர உடன்படிக்கை அல்லது ஏற்பாட்டின் கீழ் பருப்பொருளான அல்லது பருப்பொருளற்ற ஆதனத்தின் கொள்வனவு, விற்பனை அல்லது குத்தகை அல்லது சேவைகளின் ஏற்பாடு அல்லது பணத்தைக் கடனாகப் பெறல் அல்லது கடன் கொடுத்தல் என்ற தன்மையிலானவொரு கொடுக்கல்வாங்கலொன்று அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சிகளின் இலாபங்கள், வருமானம், நட்டம், அல்லது சொத்துக்கள் மீது தாக்கத்தைக் கொண்டுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொறுப்பு முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள நன்மை, சேவை அல்லது வசதியுடன் தொடர்புடைய உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள ஏதேனும் செலவுக்கு அல்லது செலவீனத்துக்கான, ஏதேனும் பங்களிப்பு, ஏதேனும் ஒதுக்கம் அல்லது பிரித்தொதுக்குகை என்பவற்றையும் உள்ளடக்கும். பொறுப்புமுயற்சியொன்று தவிர்ந்த, இருவரில் ஒருவர் வதிவற்றவராகவுள்ள ஆளொருவருடன் பொறுப்புமுயற்சியொன்று செய்யும் ஏதேனும் கொடுக்கல்வாங்கலானது செலுத்தப்படவேண்டிய வரித்தொகையைக் குறைக்கின்ற அல்லது செலுத்தப்பட வேண்டிய வரித்தொகையைக் குறைக்கும் பயனுடைய விளைவுகளையேற்படுத்தும், அத்தகைய பொறுப்புமுயற்சிக்கும் வேறு ஆளுக்குமிடையில் அத்தகைய கொடுக்கல்வாங்கலின் நியதிகளை முக்கியமாகத் தீர்மானிக்கின்ற அத்தகைய பொறுப்புமுயற்சிகளுக்கும் வேறு ஆளுக்குமிடையில் முன்னர் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்று இருப்பின், (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் செய்யப்பட்ட சர்வதேசக் கொடுக்கல்வாங்கல் ஒன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் ஏற்பாட்டின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஏதேனும் செலவுக்கான கட்டணம் அல்லது சர்வதேசக் கொடுக்கல்வாங்கல் ஒன்றிலிருந்து எழுகின்ற வட்டி என்பன கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்;

“கைமாற்றல் விலையிடுதல் அலுவலர்” என்பது ஆணையாளர் தலைமையதிபதியினால் கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் ஒருவராக விதித்துரைக்கப்பட்ட எவரேனும் உண்ணாட்டரசிறை அலுவலர் என்று பொருள்படும்.; அத்துடன்

(5) அப்பிரிவுக்கான ஓரக் குறிப்பில், “இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான சர்வதேசக் கொடுக்கல்வாங்கல்களில்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 104அ என்றவாறு பயனுறுதலும் வேண்டும்:-

104அ. (1) பிரிவு 104இன் உட்பிரிவு (1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் அல்லாத இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேறு கொடுக்கல்வாங்கலிலிருந்து எழுகின்ற, பெறப்படுகின்ற அல்லது திரளுகின்ற எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லது அதில் உறப்படுகின்ற ஏதேனும் நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு ஆய்ந்தறிப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைகளுக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு ஆய்ந்தறியப்படவில்லை என ஒரு வரிமதிப்பீட்டாளருக்குத் தோன்றுமிடத்து, அவர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முகவரியிடப்பட்ட எழுத்தில், விடயத்திற்கேற்ப, அத்தகைய இலாபங்களும் வருமானமும் அல்லது அத்தகைய நட்டம் உண்மையில் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை கருத்திற்கொண்டு தான் ஆய்ந்தறியப்பட்டுள்ளது என்பதை வரிமதிப்பீட்டாளர் திருப்தியுறும் விதத்தில் எண்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய ஆள் அவ்வாறு எண்பிக்கத் தவறுமிடத்து வரிமதிப்பீட்டாளர், விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் அல்லது நட்டத்தின் தொகையை மதிப்பீடு செய்யலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை அந்நோக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒரு முறையின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களிற்கு-

(அ) பொறுப்புமுயற்சியொன்று (முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்புமுயற்சி) வேறொர் பொறுப்புமுயற்சியின் (இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்புமுயற்சி) கட்டுப்பாட்டில் நேரடியாகவோ அல்லது ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர் ஊடாகவோ விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்கு பங்குபற்றுமாயின், அது இணைப்பொறுப்பு முயற்சியொன்று எனக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) “கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை” என்பது இணைப்பொறுப்பு முயற்சிகள் அல்லாத ஆட்களுக்கிடையிலான கொடுக்கல்வாங்கலொன்றில் கட்டுப்பாடற்ற நிபந்தனைகளின் போது பிரயோகிக்கப்படும் ஒரு விலை என்று பொருளாகும்.”.

27. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஆம் பிரிவு, அப்பிரிவின் உட்பிரிவு (5) என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

“(6) உட்பிரிவு (5) இல் குறிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டு நிதியிலிருந்து முதலீடு செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனமானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க 2013, யூலை 1 ஆந் தேதியில் நிதியத்தின் வரவில் இருக்கின்ற நிதிகளின் ஏதேனும் பாகத்தைப் பயன்படுத்தாமலிருக்கின்றவிடத்து, அத்தகைய மீதியானது, விடயத்திற்கேற்ப, அத்தகைய வங்கியிடமிருந்து அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து அரசாங்கத்திற்குக் கொடுக்குமதியாகவுள்ள கடன் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், திரட்டு நிதியத்திற்குக் கைமாற்றப்படுதலும் வேண்டும்.”.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 121ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

“(3) ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டின் போது தொழில்தருநர் ஒருவர் அத்தகைய சம்பளக் காலப்பகுதிக்கான அத்தகைய ஊதியம் தொடர்பில் கழிக்கப்படற்பாலதான வருமான வரித் தொகையைவிடக் கூடுதலான ஏதேனும் பணத்தொகையை ஏதேனும் சம்பளக் காலப்பகுதிக்காக எவரேனும் ஊழியரின் ஊதியத்திலிருந்து வருமான வரியாகக் கழித்திருக்கின்றவிடத்து, அத்தகைய வரி மதிப்பீட்டாண்டில் அல்லது அதனை உடனடுத்துவரும் வரி மதிப்பீட்டாண்டில் ஏதேனும் சம்பளக் காலப்பகுதிக்கான அத்தகைய ஊழியரின் ஊதியம் தொடர்பில் கழிக்கப்படற்பாலதான வருமான வரித் தொகையிலிருந்து கழிக்கப்பட்ட வருமான வரித் தொகைக்கு கூடுதலான ஏதேனும் தொகையை

குறைக்கலாம் என்பதுடன், அத்தகைய சீராக்கத் தேதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கலாம்."

29. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 135ஆம் பிரிவு, அதன் உட்பிரிவு (1)இல் "அத்தகைய கூட்டிணைப்புத் தனிசுப் பிணையம் வழங்கப்படும் நேரத்தில் செய்யப்படுதல் வேண்டும்", என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"அத்தகைய கூட்டிணைப்புத் தனிசுப் பிணையம் வழங்கப்படும் நேரத்தில் கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின் -

(அ) அத்தகைய கூட்டிணைப்புத் தனிசுப் பிணையமானது மீளாய்வுக் காலப்பகுதிகளுக்காக மிதப்பு வட்டி வீதத்துடன் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய கழிப்பனவானது வட்டி வீதத்தின் அத்தகைய ஒவ்வொரு மீளாய்வுக் காலப்பகுதியும் தொடங்குகின்ற நேரத்தில் கழிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்புத் தனிசுப் பிணையத்துக்கு கொடுபடற்பாலதான வட்டியானது 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குப் பின்னர் கொடுபடற்பாலதானதாகவிருக்கின்றவிடத்தும் மற்றும் அது தொடர்பில் வட்டி மீதான வருமான வரிக் கழிப்பனவு எதுவும் செய்யப்படாமல் இருக்கின்றவிடத்தும், அத்தகைய கழிப்பனவானது அத்தகைய வட்டி கொடுக்கப்படும் அல்லது வரவு வைக்கப்படும் நேரத்தில் செய்யப்படுதல் வேண்டும்;

(இ) இப்பிரிவின் கீழ் வருமான வரியின் கழிப்பனவெதுவும், 9 ஆம் பிரிவின் (ச) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து அல்லது கழிப்பனவிலிருந்து செய்யப்படுதலாகாது.".

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) "இச்சட்டத்தின் எந்த வங்கி" என்னும் சொற்கள் தொடக்கம் "அத்தகைய வருமான வரியைக் கழித்தல் வேண்டும் என்பதுடன்," என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதை இடுவதன் மூலமும்:-

"இச்சட்டத்தின் கீழ் எந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைப்புத் தனிசுப் பிணையமொன்றை வழங்குகின்ற கம்பெனி ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் இச்சட்டத்தின் கீழ் வருமன வரி விதிக்கப்படுவதற்குரிய ஆட்களுக்கு, விடயத்திற்கேற்ப, அதனால் கொடுக்கப்படும் அல்லது வரவு வைக்கப்படும் வட்டியிலிருந்து அல்லது அனுமதிக்கப்படும் கழிவிலிருந்து வருமான வரியைக் கழிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ, அந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கம்பெனி ஒவ்வொன்றும் அத்தகைய வட்டிக் கொடுப்பனவு தொடர்பில் அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கம்பெனிக்கும் அத்தகைய ஆளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கைக்கிணங்க, விடயத்திற்கேற்ப, அத்தகைய ஆளுக்கு அத்தகைய வட்டி செலுத்தப்பட்ட நேரத்தில் அல்லது அத்தகைய கூட்டிணைப்புத் தனிசுப் பிணையம் மிதப்பு வட்டி வீதத்துடன் வழங்கப்பட்டிருக்குமிடத்து, ஒவ்வொரு, மீளாய்வுக் காலத்தினதும் தொடக்கத்தில் அத்தகைய வருமான வரியைக் கழித்தல் வேண்டும் என்பதுடன்,"; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "வருமான வரி கழிப்பனவைத் தொடர்ந்து வங்கிகளினதும் நிதி நிறுவனங்களினதும் கடமைகள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வருமான வரி கழிப்பனவைத் தொடர்ந்து வங்கிகளினதும், நிதி நிறுவனங்களினதும் மற்றும் கம்பெனிகளினதும் கடமைகள்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவு "அல்லது தனிசுப் பிணையம் நிதி நிறுவனம்" என்பதிலிருந்து "மீறுகையொன்று இடம்பெற்றுள்ளது என" என்பது வரையான எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "ஏதேனும் கடன் பிணையத்தை வழங்கும் ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கூட்டிணைப்புத் தனிசுப் பிணையத்தை வழங்கும் ஒரு கம்பெனி விடயத்திற்கேற்ப, 133 ஆம் அல்லது 135ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரிக் கழிப்பினைச் செய்யவில்லையென ஆணையாளர் தலைமையதிபதி கருதுமிடத்து, அவர் விடயத்திற்கேற்ப, அத்தகைய வங்கிக்கு, நிதி நிறுவனத்திற்கு அல்லது கூட்டிணைப்புத் தனிசுப் பிணையத்தை வழங்குகின்ற கம்பெனிக்கு காரணம் காட்டுவதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்கியதன் பின்னர், 133 ஆம் அல்லது 135 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையொன்று இடம்பெற்றுள்ளது என" என்னும் சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 142ஆம் பிரிவின், "வங்கி அல்லது நிதி நிறுவனம்" என்னும் சொற்கள் அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் எங்கெல்லாம் இடம்பெற்றுள்ளதோ அங்கெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக, "வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கம்பெனி" என்னும் சொற்களை முறையே இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

33. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் "செப்டெம்பர்" என்ற சொல்லுக்குப் பதிலாக "நவெம்பர்" என்ற சொல்லை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவிற்கான மேலதிகக் காப்புவாசகத்தில் "62 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் அல்லது 65 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாக, "61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியின் அல்லது 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் அல்லது 62 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) உட்பிரிவு (3) இன் (ஆ) என்னும் பந்தியில் "வரிமதிப்பிடற்பாலதான வருமானம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வரிமதிப்பிடற்பாலதான வருமானம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:-

"(அ) அவ்வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் ஆண்டின் நவெம்பர் முப்பதாம் தேதியன்று அல்லது அதன் முன்னர் விவரத்திரட்டொன்றைச் செய்துள்ள அத்தகைய ஆளினால் கொடுபடற்பாலதான வருமான வரியின் வரிமதிப்பீடு எதுவும்,

(i) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு 2013 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் நவெம்பர் முப்பதாம் தேதியிலிருந்து இரண்டு வருட காலப்பகுதி கழிந்ததன் பின்னர்;

(ii) அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு 2013 ஏப்பிறல் 1 ஆம் தேதியில் அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, உடனடுத்துவருகின்ற வரி மதிப்பீட்டாண்டின் நவெம்பர் முப்பதாந் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்கள் காலப்பகுதி கழிந்ததன் பின்னர், செய்யப்படுதல் ஆகாது; அத்துடன்

(4) அப்பிரிவை (9) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

"(10) இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளில் முரணாகவுள்ளது எது எவ்வாறிருப்பினும், 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு கம்பெனியொன்றாக அல்லாத எவரேனும் ஆளின் ஒவ்வொரு வியாபாரத்திலிருந்தும் வர்த்தகத்திலிருந்துமான மொத்த விற்பனவு வரவானது முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாததாகவிருக்கின்றவிடத்தும் அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியால் நிருவகிக்கப்படுகின்ற ஏதேனும் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அத்தகைய ஆள் இணங்கியொழுகாமல் இருக்கின்றவிடத்தும், அவ்வாறு 2011, ஏப்பிறல், 1 ஆம் தேதிக்கு முன்பெறப்பட்ட ஈட்டுகைகளை 2014, மாச்சு 31 ஆந் தேதியில் அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் வியாபாரத்தில் அல்லது வர்த்தகத்தில் முதலீடு செய்வதுடன், 2014, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பிட்டாண்டிற்கான வருமானத் திரட்டைக் கொடுத்துதவுவதுடன் அடுத்து வருகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு அவர் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவார் என்ற எழுத்திலான பொறுப்பேற்பொன்றைச் செய்வாரெனின் அத்தகைய திரட்டானது ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் மீது வரி மதிப்பீடெதுவும் அல்லது மேலதிக வரி மதிப்பீடெதுவும் அவ்வாறு வருமானத் திரட்டுக் கொடுத்துதவப்பட்ட அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் மற்றும் அந்த வரி மதிப்பீட்டாண்டை உடனடுத்துவருகின்ற ஐந்து வரி மதிப்பீட்டாண்டுகளுக்கும் செய்யப்படுதலும் ஆகாது.".

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் 2ஆம் உட்பிரிவில், "மீளாய்வு சபைக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "2011, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் மீளாய்வு சபைக்கு அல்லது 2011, ஏப்பிறல் 1 ஆம் திகதியில் அல்லது அதன் பின்னர் வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழான மேன்முறையீடு எதனதும் விசாரணை, முடிவுசெய்தல் என்பன தொடர்பில் ஏற்புடையனவானதல் வேண்டும். மீளாய்வுச் சபையானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழான மேன்முறையீடு எதனதும் விசாரணை, முடிவு செய்தல் என்பன தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும். விடயத்திற்கேற்ப, 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் மீளாய்வுச் சபையானது அல்லது 2011, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுவானது" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.".

35. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 204அ என்னும் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின் அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "சட்டத்தின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் நிருவகிக்கப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

36. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 208அ என்னும் இப்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

குழுவானது பொருட்கோடலுக்கென அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளை, அத்தகைய வேண்டுகோளானது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தீர்மானித்தல் வேண்டும்.".

37. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 217 ஆம் பிரிவானது "பங்கிலாபம்" என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியின் உட்பந்தி (iv)இல் "இனத்தைச் சேர்ந்த பங்கிலாபம் அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:- பங்கு இனத்தைச் சேர்ந்த பங்கிலாபம்; அல்லது

(v) கம்பனியொன்று அதன் பங்குதாரர்களிடமிருந்து பங்குகளை மீளவும் வாங்குமிடத்து, எவரேனும் பங்குதாரருக்கு அத்தகைய கம்பெனியின் பங்குதாரர்கள் அத்தகைய பங்கு மீள வாங்குதலை கூட்டமொன்றில் அங்கீகரித்த தேதியிலுள்ளவாறான விடயத்திற்கேற்ப, அத்தகைய பங்கிற்கான விலைக்கோரிப் பெறப்பட்ட சந்தை விலையை அல்லது அத்தகைய பங்கின் சந்தைப் பெறுமதியை விடவும் மேலதிகமான கொடுப்பனவு, ஏதேனும் இருப்பின், அம்மேலதிகக் கொடுப்பனவு; அத்துடன்.".

38. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் V இற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"பாகம் V

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொகைக்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்-

| | | |
|---|---|---|
| (அ) | 2013, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, | பாகம் I, பாகம் I அ அல்லது பாகம் 1ஆ இன்படி, ஆனால் ஆகக்கூடியது 20 சதவீதத்திற்கமைவாக. |
| (ஆ) | 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு | பாகம் I, பாகம் I ஆ இல் உள்ளவாறு, ஆகக்கூடியது 16 சதவீதத்திற்கமைவாக. |

39. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது, அவ்வட்டவணையின் பாகம் அ இன் 2ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"3. ஏதேனும் கூறு நம்பிக்கைப் பொறுப்பு முகாமைக் கம்பெனிக்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது-

| | | |
|---|---|---|
| (அ) | 2013, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, | பாகம் அ இன்படி |
| (ஆ) | 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு- | 10 சதவீதம்." |

40. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணையானது, இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 22 ஆம் விடயத்திற்குப் பதிலாக, பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"22. பிரிவு 58 இல் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வருமான வரி வீதம்-

| | | |
|---|---|---|
| (அ) | 2011, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, | 15 சதவீதம். |
| (ஆ) | 2011, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு- | 12 சதவீதம். |

(2) அவ்வட்டவணையின் 23ஆம் விடயத்திற்குப் பதிலாக, பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"23. பிரிவு 59இல் குறிப்பீடு செய்யப்பட்ட கப்பல்களுக்கிடையே மற்றும் முகவராண்மைக் கட்டணங்களிலிருந்துவரும் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வருமான வரி வீதம்-

| | | |
|---|---|---|
| (அ) | 2011, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு, | 15 சதவீதம். |
| (ஆ) | 2011, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு- | 12 சதவீதம்.”; |

(3) அவ்வட்டவணையின் 40 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

| | | |
|---|---|---|
| "41. | பிரிவு 46அ இல் குறிப்பீடு செய்யப்பட்ட கோழிப் பண்ணைக்கான தொழிற் பொறுப்புமுயற்சியொன்றில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளின் இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்- | முதலாம் அட்டவணைப்படி ஆனால், தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 10 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 10 சதவீதம். |
| 42. | பிரிவு 56அ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்- | முதலாம் அட்டவணைப்படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 12 சதவீதம். |
| 43. | பிரிவு 56ஆ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்- | முதலாம் அட்டவணைப்படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 12 சதவீதம். |
| 44. | பிரிவு 56இ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்புமுயற்சியிலிருந்தான எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம் - | முதலாம் அட்டவணைப்படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 12 சதவீதம். |
| 45 | பிரிவு 56உ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்- | முதலாம் அட்டவணைப்படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 12 சதவீதம்." |

41. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் ஏற்புடைமையின் பயனைக்கொண்டு, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக, 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் தொடங்கி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகர் சான்றுரை எழுதிய தேதியில் முடிகின்ற காலப்பகுதியின் போது எவரேனும் ஆளிடமிருந்து அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரித் தொகையானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக அத்தகைய வரியை அறவிட்ட அல்லது சேகரித்த அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின் கீழ் செல்லுபடியுள்ளதாகவும் மற்றும் சட்டமுறையாகவும் அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரித்தொகை எனக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய காலப்பகுதியின் போது அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானத்தை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் தீர்க்கப்படாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தல் ஆகாது.

42. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்குமாக 2013, சனவரி 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2005ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) ஓராம் உட்பிரிவின் கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆள் ஒவ்வொருவருக்கும், அத்தகைய அறவீட்டுக் கொடுப்பனவுடன் சேர்த்து, ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அவரால் கொண்டு நடாத்தப்படும் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில்களின் மொத்த சேகரிப்பு மீது ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று விதிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஆள், அத்தகைய சேகரிப்பின் மீது 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் சேர் பெறுமதி வரியினை செலுத்துவதற்கு அல்லது 2009ஆம் ஆண்டின்

9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் கீழ் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது:

ஆயின், மேலும் (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில்கள் தொடர்பில் எந்த ஆளுடைய மொத்தச் சேகரிப்பானது மாதமொன்றுக்கு ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சவில்லையோ, அத்தகைய ஆள் இவ்வுட் பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாதல் ஆகாது.

(1ஆ) (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகியுள்ள ஒவ்வொரு ஆளும் -

(அ) இயைபான காலாண்டின் முடிவை அடுத்துவரும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், அத்தகைய ஆளின் மொத்தச் சேகரிப்புப் பற்றி ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதும் மற்றும் அத்தகைய விபரங்களைக் கொண்டதுமான விபரத்திரட்டொன்றை ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அம்மாதத்தின் முடிவை அடுத்துவரும் மாதத்தின் முதலாவது வாரம் முடிவடையும் அன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய அறவீட்டினை செலுத்துதல் வேண்டும்.

(1இ) (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள எவரேனும் ஆள், அத்தகைய அறவீட்டைச் செலுத்துவதற்கு தவறுமிடத்து, இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீட்டைச் செலுத்துவதற்கான அத்தகைய தவறுகை தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(1ஈ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) “மொத்தச் சேகரிப்பு” என்பது அம்மாதம் தொடர்பில் குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலிலிருந்து அல்லது சூதாட்டத் தொழிலிலிருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகை என்று பொருள்படும்

(ஆ) இயைபான காலாண்டு” என்பது ஏதேனும் ஆண்டின் சனவரி முதலாம் நாளன்று, ஏப்பிறல் முதலாம் நாளன்று, யூலை முதலாம் நாளன்று அல்லது ஒத்தோபர் முதலாம் நாளன்று தொடங்கும் மூன்று மாத காலப்பகுதி எனப் பொருள்படும்.”.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தாற் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

2அ (1) 2013 சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், 2ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றதான குதிரைப் பந்தய பணயக்காரரின் தொழிலை அல்லது சூதாட்டத்தைக் கொண்டு நடாத்தும் ஒவ்வோர் ஆளும் விடயத்திற்கேற்ப இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஐந்து மாதக் காலப்பகுதியினுள் அல்லது தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதக் காலப்பகுதியினுள் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வோராளுக்கும் அவ்வாளின் பெயர், முகவரி, பதிவிலக்கம் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு எவையேனும் விபரங்கள் என்பவற்றைக் கொண்டுள்ள பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.”.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “வரிமதிப்பீட்டாளர்”, “ஆணையாளர் தலைமையதிபதி”, “பிரதி ஆணையாளர்” மற்றும் “ஆட்கள்” என்னும் சொல்லமைப்புக்களின் வரைவிலக்கணங்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

“வரி மதிப்பீட்டாளர்”, “ஆணையாளர் தலைமையதிபதி”, அத்துடன் “பிரதி ஆணையாளர்” என்பன மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 59 ஆம் பிரிவினால் முறையே அவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட அந்தந்த கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(2) “சூதாட்டம்” என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

“ஆள்” என்பது ஏதேனும் கம்பெனி, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு அல்லது ஏதேனும் பங்குடைமையை உள்ளடக்கும்;”.

5. இரண்டாயிரத்துப் பதின்மூன்றாமாண்டு சனவரி 1 ஆந் தேதி தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின் போது எவரேனும் ஆளிடமிருந்து ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் கீழ் அறவிடப்பட்டு, சேகரிக்கப்பட்ட அறவீட்டுத் தொகை ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் அத்தகைய எவரேனும் ஆளினால் செல்லுபடியாகும் முறையில் அறவிடப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயினும், இப்பிரிவின் மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் முடிவையோ அல்லது கட்டளையையோ அல்லது அக்காலப்பகுதியின் போது அறவிடப்பட்டு சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளையோ பாதித்தல் ஆகாது.

6. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன், அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

"அட்டவணை (பிரிவு 2)

## பாகம் I

இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் குதிரைப்பந்தயப் பணயத் தொழிலர் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| நிரை I<br>ஆண்டு | நிரை II<br>விதிப்பனவின் தொகை |
|---|---|
| 1. 1988, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஒரு லட்சம் ரூபா. |
| 2. 2001, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் - | பத்து லட்சம் ரூபா. |
| 3. 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படுமிடத்து; | முப்பதாயிரம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து. | பத்தாயிரம் ரூபா. |
| 4. 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2006, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழிலுக்காக- | |
| (i) முகவர்கள் மூலம். | பத்து லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம். | இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து | இருபத்தையாயிரம் ரூபா. |
| 5. 2006, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழிலுக்காக- | |
| (i) முகவர்கள் மூலம். | பத்து லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம். | மூன்று லட்சம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து | ஐம்பதினாயிரம் ரூபா. |
| 6. 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் செய்யப்படும் பந்தயத் தொழிலுக்காக - | |
| (i) முகவர்கள் மூலம். | இருபது லட்சம் ரூபா. |
| (ii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம். | மூன்று லட்சம் ரூபா. |
| (iii) தொழிலைக் கொண்டு நடாத்துவதில் நேரடி ஒளிபரப்பு வசதிகள் பயன்படுத்தப்படாதவிடத்து | இருபத்தையாயிரம் ரூபா. |

## பாகம் II

இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் ஒவ்வோராண்டுக்கும் சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளொருவரினாற் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவின் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்-

| நிரை I<br>ஆண்டு | நிரை II<br>விதிப்பனவின் தொகை |
|---|---|
| 1. 1988, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2011, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்து லட்சம் ரூபா. |
| 2. 2001, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2002, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் - | இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபா. |
| 3. 2002, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2005, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும்- | |
| (i) சூதாட்டக் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக (ருட்ஜினோ விளையாடுதல் தவிர) | ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா. |
| (ii) ருட்ஜினோ மட்டுமே விளையாடுதல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக | ஐந்து லட்சம் ரூபா. |
| 4. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக, 2005, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | ஐந்து கோடி ரூபா. |
| 5. ருட்ஜினோ விளையாடுதலுட்பட சூதாட்டத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக, 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்கும் | பத்துக் கோடி ரூபா. |

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2013 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

(2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டின் 4ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2)ஆம் உட்பிரிவில், “இவர்களுள் ஒருவர் உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதிகளிடையேயிருந்தும்” என்னும் சொற்களுக்குப் பதிலாகவும் “ஏனைய இரண்டு உறுப்பினர்கள்” என்னும் சொற்களுக்குப் பதிலாகவும் “இவர்களுள் மூவர் உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதிகளிடையேயிருந்தும்” என்னும் சொற்களையும் “ஏனைய ஆறு உறுப்பினர்கள்” என்னும் சொற்களையும் முறையே இடுவதன் மூலமும்.

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

“(2அ) ஆணைக்குழுவின் தவிசாளர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையேயிருந்து ஒவ்வொன்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டமைந்த மூன்று குழாம்களை அமைத்தல் வேண்டும்;அவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் முன்னராக ஏதேனும் கருமத்தை விசாரித்துத் தீர்மானிப்பதற்கு (2)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறானவொரு நீதிபதியாகவிருத்தல் வேண்டும்.”.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, “ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

4. இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 4ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

“(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

(அ) “இச்சட்டத்துக்கான I ஆம் அட்டவணையின் நிரை I இல் அல்லது II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டவாக்கங்களுள் எவற்றினதும் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் வரியை, அறவீட்டை, விதிப்பனவை, தீர்வையை அல்லது தண்டத்தை விதித்தல் தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பில் கொடுக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் “ஆணையாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது

(ஆ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் கொடுக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தினால் இன்னலுறும் ஆளொருவர், இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்:

ஆயின், (அ) என்னும் பந்தியின் கீழ் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கு விரும்புகின்ற ஒவ்வோராளும், அத்தகைய மேன்முறையீட்டைச் செய்யும் நேரத்தில், அத்தகைய நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் திறக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட வேண்டிய ஒரு விசேட கணக்கினுள் சொல்லப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றினதும் கீழ் அத்தகைய ஆளினால் வரியாக, அறவீடாக, விதிப்பனவாக, தீர்வையாக அல்லது தண்டமாகச் செலுத்தப்படற்பாலதாகவும் அவ்வரி மதிப்பீடு மேன்முறையீட்டின் விடயப் பொருளாகவும் உள்ள, ஆணையாளர் தலைமையதிபதியினால் வரி மதிப்பிடப்பட்டவாறான பணத்தொகையின் -

(அ) மீளளிக்கப்படற்பாலதல்லாத பத்து சதவீதத்துக்குச் சமனானவாறான ஒரு தொகையை; அல்லது

(ஆ) இப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவுக்கமைய மீளளிக்கப்படற்பாலதான இருபத்தைந்து சதவீதத்துக்குச் சமமானவாறான ஒரு தொகையை அல்லது ஆணைக்குழுவினால் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை செல்லுபடியாகவிருக்க வேண்டிய சமமான தொகைக்கான வங்கி உத்தரவாதமொன்றை,

செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-”

“(1அ) (அ) விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தொகை, அத்தகைய தொகை ஏற்புடையற்பாலதாகவுள்ள முறையான மேன்முறையீட்டைத் தீர்மானிப்பதன் மேல் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கைமாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றின் கீழும் அத்தகைய ஆளினால் வரியாக, அறவீடாக, விதிப்பனவாக, தீர்வையாக அல்லது தண்டமாகச் செலுத்தப்படற்பாலதாகவும் அவ்வரி மதிப்பீடு மேன்முறையீட்டின் விடயப் பொருளாகவும் உள்ளதாய் ஆணையாளர் தலைமையதிபதியினால் வரி மதிப்பிடப்பட்டவாறான பணத்தொகைக்கெதிராக எதிரிடு செய்யப்படுதலும் வேண்டும்.

(ஆ) (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஏதேனும் விஞ்சுகை, வருமதியானவையும் ஆணையாளரினால் நிருவகிக்கப்படுகின்றவையுமான வரிகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படலாம். அத்தகைய தொகையின் மீதி ஏதேனுமிருப்பின் அது, ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் அதற்கெனச் செய்யப்படும் வேண்டுகோளின்மேல் மேன்முறையீட்டாளருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.”

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “இச்சட்டத்துக்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “அறிவிப்பின் பிரதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அறிவிப்பின் பிரதியொன்றை விடயத்திற்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கு” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

8. (1) (அ) ஏதேனும் வரி, அறவீடு, விதிப்பனவு, தீர்வை அல்லது தண்டம் என்பவற்றை விதித்தல் தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பில், ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தினால் இன்னலுறும் எவரேனுமாள்; அல்லது

(ஆ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தினால் இன்னலுறும் எவரேனுமாள்,

விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் கூறப்பட்ட காரணங்களுடன் அவர் அதிருப்தியடைந்தால், அத்தகைய காரணங்கள் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம்; அல்லது

(2) சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய தீர்மானத்தைச் செய்யத் தவறுமிடத்து, அத்தகைய ஆள் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் முடிவில் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடொன்றையும் செய்யலாம்.

(3) அத்தகைய மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கும் முறையும் படிவமும், அத்தகைய மேன்முறையீட்டை விசாரிப்பதிலும் தீர்மானிப்பதிலும் ஆணைக்குழுவினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அது தொடர்பிலான கட்டணங்கள் எவையேனுமிருப்பின் அவையும், அதற்கெனக் காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.".

6. இரண்டாயிரத்து பன்னிரெண்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஆணையாளர் தலைமையதிபதிக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களுக்கும் "இச்சட்டத்துக்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களையும் "இச்சட்டத்துக்கான அட்டவணை I அல்லது அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட அல்லது விடயத்துக்கேற்ப, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் எவையேனும் ஏற்புடையற்பாலனவான ஏற்பாடுகளினது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அதன் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(4) (அ) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான மேன்முறையீடொன்று தொடர்பில், எந்த வரி மதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த வரி மதிப்பீட்டைச் செய்த வரி மதிப்பீட்டாளர் அல்லது அதற்கென ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்; அல்லது

(ஆ) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான மேன்முறையீடொன்று தொடர்பில், அதற்கென பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்,

விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தை ஆதாரப்படுத்துவதற்கு, அத்தகைய மேன்முறையீடு எந்த ஆணைக்குழுவில் விசாரிக்கப்படுகின்றதோ அந்த ஆணைக்குழுவிலான விசாரிப்புக்கு வருகைதருதல் வேண்டும்.".

(4) அதன் (5) ஆம் உட்பிரிவில், "இச்சட்டத்துக்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "இச்சட்டத்துக்கான அட்டவணை I அல்லது அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்,;

(5) அதன் (8) ஆம் உட்பிரிவில், "ஆணையாளரின்" "ஆணையாளர் தலைமையதிபதியின்" மற்றும் "ஆணையாளர்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "விடயத்துக் கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின்", "விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின்", "விடயத்துக்கேற்ப, "ஆணையாளர் தலைமையதிபதி" அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(6) அதன் (10) ஆம் உட்பிரிவில், "மீளாய்வு செய்தல் வேண்டும். ஆணைக்குழுவின் முடிவு மேன்முறையீட்டாளருக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மீளாய்வு செய்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(7) அதன் (10) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(11) ஆணைக்குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டாளருக்கும், விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.".

7. இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, "மேன்முறையீட்டின் விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து இருநூற்றி எழுபது நாட்களுக்குள்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீட்டையும் விசாரிப்பதற்கான அதன் அமர்வுகள் தொடங்கிய தேதியிலிருந்து இருநூற்றி எழுபது நாட்களுக்குள் அது தொடர்பில் அதன் முடிபை எடுத்தலும் வேண்டும்:

ஆயின், அதில் குறித்துரைக்கப்பட்டவாறான வேறுபட்ட வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிகளுக்கு ஏற்புடையற்பாலதான அத்தகைய ஏற்பாடுகளின் நிகழ்வு எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்துக்கான அட்டவணை I அல்லது அட்டவணை II என்பவற்றின் நிரை Iஇல் குறித்துரைக்கப்பட்ட அந்தந்தச் சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அந்தந்த மீளாய்வுச் சபையின் அல்லது மீளாய்வுச் சபைகளின் முன்னர் முடிவுறாதுள்ள எல்லா மேன்முறையீடுகளும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஆணைக்குழுவுக்கு மாற்றப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அது தொடர்பிலான அதன் தீர்மானத்தை, அத்தகைய ஒவ்வொரு மேன்முறையீட்டையும் விசாரிப்பதற்கான அதன் அமர்வுகளை ஆணைக்குழு எத்தேதியன்று தொடங்குகின்றதோ அத்தேதியிலிருந்து இருபத்திநான்கு மாதங்களினுள் செய்தலும் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

11அ. (1) ஒன்றில் (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "மேன்முறையீட்டாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடொன்றைச் செய்த ஆள்"; அல்லது ஆணையாளர் தலைமையதிபதி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்காகச் சட்டப் பிரச்சினையொன்றின் மீது வழக்கொன்றைக் கூறும்படி ஆணைக்குழுவைத் தேவைப்படுத்துகின்ற விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பம் எழுத்தில் செய்யப்பட்டு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவான கட்டணத்துடன், ஆணைக்குழுவின் முடிபு எத்தேதியன்று எழுத்தில் விடயத்துக்கேற்ப, ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டாலொழிய, ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது.

(2) ஆணைக்குழுவினால் கூறப்பட்ட வழக்கு, நிகழ்வுகளையும், ஆணைக்குழுவின் முடிபையும், அத்தகைய தொகை ஐயாயிரம் ரூபாவை விஞ்சுமிடத்து பிணக்கிலுள்ள வரித் தொகையையும் எடுத்துக்கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழக்கைக் கூறும்படி ஆணைக்குழுவைத் தேவைப்படுத்துகின்ற கட்சிக்காரர், அத்தகைய வழக்கை, அது கூறப்பட்டுக் கையொப்பமிடப்பட்டபோது, அதனைப் பெற்ற பின்னர் பதினான்கு நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்புதலும் வேண்டும்.

(3) 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்துக்காக -

(அ) இப்பிரிவின் கீழ் கூறப்பட்ட ஏதேனும் வழக்கின்மீது அல்லது அத்தகைய ஏதேனும் வழக்கை விசாரித்தல், தீர்மானித்தல் அல்லது கையாளுதல் என்பவற்றின் இடைநேர்விளைவாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரான எல்லா வழக்கு நடவடிக்கைகளும், ஐயாயிரம் ரூபா பெறுமதியினதான அல்லது பிணக்கிலுள்ள வரியின் தொகையாகக் கூறப்பட்ட வழக்கில் ஆணைக்குழுவினால் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய கூடுதலான தொகையிலான பெறுமதியினதான குடியியல் வழக்கு நடவடிக்கைகளெனக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு வழக்கும், ஆணைக்குழுவினால் அதனோடிணைக்கப்பட்டுள்ள எல்லாப் புத்தகங்களுடனும், ஆவணங்களுடனும், பத்திரங்களுடனும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் தனியொரு காண்பிபொருளாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆணையாளர் தலைமையதிபதி, அவர் மேன்முறையீட்டாளராகவிருப்பின், பதவி முறையிலானவொரு தொடர்ச்சியில், வழக்குத் தொடுக்கும் அரசாங்க அலுவலரொருவராக, அல்லது அவர் மேன்முறையீட்டுக்கான பிரதிவாதியாகவிருப்பின், அவருக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படும் அரசாங்க அலுவலரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூறப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பும் நேரத்தில் அல்லது அதற்கு முன்னர், அதனைத் தேவைப்படுத்துகின்ற கட்சிக்காரர், மற்றைய கட்சிக்காரருக்கு, அவரது விண்ணப்பத்தின் மீது வழக்கொன்று கூறப்பட்டுள்ளதென அவருக்கு அறிவித்து எழுத்திலான அறிவித்தலொன்றை அனுப்புதல் வேண்டுமென்பதுடன், கூறப்பட்ட வழக்கின் பிரதியொன்றை அவருக்கு வழங்குதலும் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள், கூறப்பட்ட வழக்கொன்றைத் திருத்தத்துக்காக ஆணைக்குழுவிடம் திருப்பியனுப்பும்படி செய்வித்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழு அதற்கிணங்க அவ்வழக்கைத் திருத்துதலும் வேண்டும்.

(6) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் எவரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள், கூறப்பட்ட வழக்கின் மீது எழுகின்ற ஏதேனும் சட்டப் பிரச்சினையை விசாரித்துத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அத்தகைய பிரச்சினையின் மீது நீதிமன்றத்தின் முடிபுக்கிணங்க, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட வரி மதிப்பீட்டை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது வெற்றானதாக்கலாம், அல்லது அதன் மீது நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துடன் அவ்வழக்கை ஆணைக்குழுவுக்கு அனுப்பலாம். வழக்கொன்று நீதிமன்றத்தினால் அவ்வாறு அனுப்பப்படுமிடத்து, ஆணைக்குழு, நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்கிணங்க வரி மதிப்பீட்டை மீளாய்வு செய்தல் வேணடும்.

(7) மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய நீதிமன்றத்துக்குக் கூறப்பட்ட வழக்கின் தீர்மானம் முடிவுறாதிருக்கையில், ஆணையாளர் தலைமையதிபதியினால் கொடுத்துதவப்பட்ட அறிக்கையொன்றின் அடிப்படையில், பிணக்கிலுள்ள வரித் தொகை தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அறவிடப்படதற்பாலதான வரித் தொகை தொடர்பாக இடைக்காலத் தீர்மானமொன்றைச் செய்தல் வேண்டும்.

(8) இப்பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், நீதிமன்றம் தகுதியானதெனக் கருதுகின்றவாறாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்திலான செலவுதொகைகள் தொடர்பாகவும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தொகை தொடர்பாகவும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(9) ஆறாம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளைக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்வதற்கு ஆணையாளர் தலைமையதிபதியை அல்லது வேறெவரேனும் கட்சிக்காரரை இயலச்செய்யும் நோக்கங்களுக்காகவும், மேன்முறையீடு நீதிமன்றத்தின் முடிபுகளுக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கான மேன்முறையீடுகள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்துக்காகவும் -

(அ) ஆறாம் உட்பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, (8) ஆம் உட்பிரிவின் கீழ் அந்நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளையுடன் சேர்த்து, ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய மற்றைய கட்சிக்காரருக்குமிடையேயான குடியியல் வழக்கொன்றில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள கருமத்தின் பெறுமதி ஐயாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும்: ஆயின், கூறப்பட்ட வழக்கில் ஆணைக்குழுவானது, பிணக்கிலுள்ள வரித்தொகையாக ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையொன்றை எடுத்துக்கூறியுள்ளவிடத்து, அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள கருமத்தின் பெறுமதி அந்த உயர்வான தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு தொடர்பில், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய எழுத்திலான சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்பை இடுவதற்கு அல்லது ஏதேனும் கட்டணத்தைச் செலுத்துவதற்கு அல்லது ஏதேனும் பிணைப் பொறுப்பைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

13. அட்டவணை I இன் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள், அவ்வட்டவணையின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அவற்றின் பிரிவுகளில் அல்லது பாகங்களில், அவற்றின்கண் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அளவுக்கும் முறையிலும் இத்தால் திருத்தப்படுகின்றன அல்லது நீக்கப்படுகின்றன.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

13அ. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய - "வரிமதிப்பீட்டாளர்" என்பது, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருளாகும் என்பதுடன், அவசியமானவிடத்தும், தோதானவிடத்தும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தையும் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தையும் உள்ளடக்கும்.".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகின்றது:-

"அட்டவணை I

| நிரை I<br>சட்டவாக்கங்களின் பெயர்கள் | நிரை II<br>ஏற்புடைத்தான திருத்தம் |
|---|---|
| 1. 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | (அ) பிரிவுகள் 166, 167, 168, 169, மற்றும் 170 என்பவற்றை நீக்குவதன் மூலமும்; அத்துடன் |
| | (ஆ) அதன் 172 ஆம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில், "மீளாய்வுச் சபைக்கு" மற்றும் "மீளாய்வுச் சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு" மற்றும் "வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும். |
| 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம். | (அ) 137, 138, 139, 140 மற்றும் 141 ஆகிய அத்துடன் பிரிவுகளை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன் |
| | (ஆ) அதன் 143ஆம் பிரிவின் (2) ஆம், (3)ஆம் உட்பிரிவுகளில், "மீளாய்வுச் சபைக்கு" மற்றும் "மீளாய்வுச் சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு" மற்றும் "வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும். |
| 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | (அ) 118, 119, 120, 121 மற்றும் 122 ஆகிய பிரிவுகளை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன் |
| | (ஆ) அதன் 124 ஆம் பிரிவின் (2)ஆம் மற்றும் (3)ஆம் உட்பிரிவுகளில், "மீளாய்வுச் சபைக்கு" மற்றும் "மீளாய்வுச் சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2011ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கு" மற்றும் "வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும். |
| 2. 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம். | 35ஆம் மற்றும் 36 ஆம் பிரிவுகளை நீக்கிவிடுக. |
| 3. 2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம் | எட்டாம் பிரிவு, "பிரிவுகள்" 166, 167, 168 மற்றும் 169 தவிர மேன்முறையீடுகள் தொடர்பாக அத்தியாயம் XXII" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிரிவுகள் 166, 167, 168, 169, 170 தவிர மேன்முறையீடுகள் தொடர்பாக அத்தியாயம் XXIII" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. |
| 4. 2006ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டம் | பதினோராம் பிரிவு, "முறையே மேன்முறையீடுகள் தொடர்பாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக 166, 167, 168, 169 மற்றும் 170 ஆகிய பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள் தவிர முறையே மேன்முறையீடுகள் தொடர்பாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. |
| 5. 2006ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 11ஆம் பிரிவு, "வரிமதிப்பீடு, மேன்முறையீடுகள், மேன்முறையீடுகளைத் தீர்மானித்தல் தொடர்பாக உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XVIII முதல் XXIV வரையிலான அத்தியாயங்கள்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "மீளாய்வுச் சபைக்கான மேன்முறையீடுகள் தொடர்பாக 166, 167, 168, 169 மற்றும் 170 ஆகிய பிரிவுகள் தவிர, வரி மதிப்பீடுகள், மேன்முறையீடுகள், மேன்முறையீடுகளைத் தீர்மானித்தல் தொடர்பாக உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XVIII முதல் XXIV வரையிலான அத்தியாயங்கள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.". |

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐஐஆம் அட்டவணை, 2ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"3. 2004ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டம்.

4. 2002ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம்.".

14. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் (2ஆம் பிரிவுக்கும் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான மேன்முறையீடுகள் தொடர்பாகச் செய்யப்பட்ட திருத்தங்களும் தவிர) முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளனவாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்துப் பன்னிரெண்டாம் ஆண்டின் 4ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், 2011, மாச்சு 31 ஆந்தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், 2011, மாச்சு 31 ஆந் தேதியன்று தொடங்கி" இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிவரையிலான காலப்பகுதியின்போது ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் அல்லது முடிபு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

15. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டை விசாரித்துத் தீர்மானிப்பதற்கு, இச்சட்டத்தினால் அது திருத்தப்படு முன்னர், அப்பிரிவினால் அதன் தீர்மானத்துக்கு வழங்கப்பட்ட பன்னிரெண்டு மாதங்கள் முடிவுற்றமை எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.